

DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com

SCARBOROUGH
416 292 7004

BRAMPTON / MISSISSAUGA
905 457 1700

MARKHAM (New Location)
905 472 7223

பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524





29ம் ஆண்டில்...
29 years of publishing

www.uthayannews.ca

உதயன்
UTHAYAN

தித்திக்கும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
பரப்பு செய்த இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada

$1.00
416-752-1524
www.uthayannews.ca
Canadian Media Circulation Audit







உதயம் 1596 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday November 6, 2026

கனடியத் தமிழ்ச் சமூக மட்டத்தில் மனநலச் சமத்துவத்தை மேம்படுத்தும் அரிய திட்டப் பணியில் இணைந்துள்ள யாழ் மருத்துவ பீடம் தந்த வைத்தியப் பெருந்தகைகள்!



கனடியத் தமிழ்ச் சமூக மட்டத்தில் மனநலச் சமத்துவத்தை மேம்படுத்தும் என்னும் அரிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் கடந்த சில மாதங்களாக அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வந்த யாழ்ப்பாண மருத்துவ பீடத்தில் பட்டம் பெற்ற மருத்துவர்களின் சங்கத்தைச் சேர்ந்த பல மருத்துவர்கள் ஒன்றிணைந்து நடத்திய பயனுள்ள கருத்தரங்கு கடந்த 31-10-2026 அன்று சனிக்கிழமை ஸ்காபுறோவில் அமைந்துள்ள சென்றனரி பொது வைத்தியசாலையின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. மேற்படி திட்டமானது **Scarborough Health Network** வைத்திய அமைப்புடன் இணைந்து மெற்கொள்ளப்படவுள்ளத என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இங்கே காணப்படும் படத்தில் அரிய திட்டத்தில் இணைந்துள்ள யாழ் மருத்துவ பீடம் தந்த வைத்தியப் பெருந்தகைகளான மைலாசன் மயில்வாகனம். இலம்போதரன் இராமநாதன். தமிழ்வாணன் பரமநாதன். ஸ்ரீ நவரட்ணம். இளஞ்செழியன் மற்றும் அம்பலவாணர செந்தூரன் குணரட்ணம் ஆகியோர் தமிழ் ஊடக நிறுவனங்களின ஊடகவியலாளர்களுக்கு திட்டம் பற்றி விளக்கமளிப்பதைக் காணலாம். (தொடர்ச்சி 11ம் பக்கம்)

"சக்தி நர்த்தனாலயா" நடனப் பள்ளி ஆசிரியை ஜனனி ரவிசங்கர் அவர்களின் மாணவி ரெனே வித்யா எட்வேர்ட் அவர்களின் பாரதநாட்டிய அரங்கேற்றம்!



கனடா "சக்தி நர்த்தனாலயா" நடனப் பள்ளி ஆசிரியை "நாட்டியக் கலைமணி" "நடன கலா பாரதி" ஸ்ரீமதி. ஜனனி ரவிசங்கர் அவர்களின் மாணவியும் திரு. திருமதி எட்வேர்ட் தம்பதியின் புதல்வியுமாகிய செல்வி ரெனி வித்யா எட்வேர்ட் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர் வரும் 07-11-2026 அன்று சனிக்கிழமை **Ajax** நகரில் நடைபெறவுள்ளது.

78. **Church Street South, Ajax** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **AJAX CENTRE FOR ARTS** மண்டபத்தில் நடைபெறவுள்ள செல்வி ரெனே வித்யா எட்வேர்ட் அவர்களின் நடன அரங்கேற்றம் சிறப்புற நடைபெற அனைவரின் வாழ்த்துக்களையும் குரு மற்றும் அரங்கேற்றச் செல்வியின் குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

கம்போடியாவில் நவம்பர் 14ம். 15ம் திகதிகளில் உலகத் தமிழ்க் கவிஞர்கள் மாநாட்டை ஏற்பாடு செய்துள்ள அங்கோர் தமிழ்ச் சங்கத்தின் முக்கிய பிரமுகர்கள்

கம்போடியாவில் நவம்பர் 14ம் 15ம் திகதிகளில் உலகத் தமிழ்க் கவிஞர்கள் மாநாட்டை ஏற்பாடு செய்துளள் அங்கோர் தமிழ்ச் சங்கத்தின் முக்கிய பிரமுகர்களான தங்கவேலு ஸ்ரீநிவாச ராவ். ராஜசேகரன் ஞானசேகரன். தாமரை ஸ்ரீநிவாச ராவ் மற்றும் ஸ்ரீநிவாச ராவ் கோகுலவாணன் ஆகியோர் மேற்படி மாநாட்டிற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொண்ட வண்ணம் எமது உதயன் பத்திரிகை அலுவலகத்தோடு தொடர்பு கொண்டு கனடாவிலிருந்து செல்லும் மூவரையும் வரவேற்பதற்கு காத்திருப்பதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்கள்.












Nick Mantas

Councillor

Ward 22, Scarborough-Agincourt

100 Queen Street West, Suite A1
Toronto, ON M5H 2N2
Phone: (416) 392-1374
Fax: (416) 392-7431
Nick.Mantas@toronto.ca

அனைவருக்கும்

இனிய தீபாவளி

நல்வாழ்த்துக்கள்







LOGAN KANAPATHI

MPP for Markham-Thornhill

PA to the Minister of Red Tape Reduction

NEED HELP WITH A PROVINCIAL ISSUE? CONTACT ME!

TEL: 905 - 305 - 1935
E-MAIL: LOGAN.KANAPATHICO@PC.OLA.ORG
WEBSITE: WWW.LOGANKANAPATHI.CA
ADDRESS: 7380 MCCOWAN ROAD, UNIT 3, MARKHAM, ON L3S 3H8

Logan_Kanapathi Logan Kanapathi
logankanapathi LoganKanapathi

கதிரோட்டம்

"செம்மணி" விவகாரத்தில் அனைத்து தமிழர் தரப்பும் எதிர்பார்த்து காத்திருந்த "நீதி"யை நிராகரிக்க இனவாதிகளின் "கருவி" ராஜ் சோமதேவ!

'செம்மணி புதைகுழிகள் அகழ்வு மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்த நீண்ட காலப்பகுதியில் அங்கு அகழ்ந்து எடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் மற்றும் ஆடைகளின் எச்சங்கள், குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்கள் அனைத்தை புகைப்படங்கள் மூலமாகவும் காட்சி ஊடகங்கள் ஊடாகவும் பார்த்து கலங்கிய இதயங்களோடு எமது மக்கள் காணப்பட்டாலும் மறுபக்கத்தில் "எமக்காக தங்கள் அர்ப்பணிக்கும் பணிகளினால் ஓய்வின்றி பணி செய்தவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள். அவர்களில் நாம் ஊடகங்கள் மூலம் பார்த்து வியந்த அகழ்வுப் பணியாளர்கள் அவர்களோடு ஒத்துழைத்த கடமை உணர்வுள்ள தமிழ் பேசும் சட்டத்தரணிகள். நீதிபதிகள். தமிழ்இன உணர்வாளர்கள், அரச அதிகாரிகள், தொண்டர்கள். சில அரசியல் செயற்பாட்டாளர்கள் என பெரியதொரு "பட்டாளம்" எம்மிடம் உள்ளுத என்று மிகுந்த நம்பிக்கைகளோடு காத்திருந்தார்கள் என்பது உலகெங்கும் தெரிந்த ஒரு உண்மையாகும்.

மறுபக்கத்தில் தங்கள் உறவுகளையும் நண்பர்களையும் இராணுவத்திடம் ஒப்படைத்தவர்கள் அலலது தங்கள் நெருங்கியவர்களை வீதிகளில் கைது என்ற பெயரில் பிரிந்தவர்கள் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் எதிர்பார்ப்புக்கள் "குழம்பிய நிலையில்" இருந்திருக்கும் என்பதை அனைவரும் அறிந்திருந்தார்கள். அனால் ஒவ்வொரு எலும்புக்கூடாய் குழிகளிலிருந்து வெளியே எடுக்கப்பட்டுக்கும் நாட்களில் எவ்வாறான உணர்வுகளையும் அல்லது மன வலி-களை அனுபவித்திருப்பார்கள் என்பதை மற்றவர்கள் நிச்சயம் உணர்ந்திருப்பார்கள் இந்த செம்மணி விவகாரத்தில் உலகெங்கும் உள்ள அனைத்து தமிழர் தரப்பும் குறிப்பாக வடக்கு கிழக்கு மலையகம். தமிழகம் புலம்பெயர் உறவுகள் என அனைத்து தரப்பினரும் ஏதோ எங்களை ஆற்றுப்படுத்தும் ஒரு பதில் அல்லது நீதி எங்கள் காதுகளுக்கு கொண்டு வரப்படும் என்று காத்திருந்தார்கள். அகழாய்வுத் துறையில் கலாநிப் பட்டம் ஒருவர் தான் கற்ற கல்விக்கும் பெற்றுக் கொண்ட அனுபவத்திற்கும் துரோகம் இழைக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருப்புக்களை தங்கள் இதயங்களில் ஏநதிய வண்ணம் இருந்திருப்பார்கள். இதுதான் உண்மையிலும் உண்மை.

அந்த நாளும் வந்தது. ஆமாம் ஒக்டோபர் மாதம் 19ம் திகதி திங்கட்கிழமை உலகின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் எதிர்பார்த்திருந்த அறிக்கையை பேராசிரியர் ராஜ் சோமதேவ யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்19ம் தி-கதி திங்கட்கிழமை சமர்ப்பித்தார்.

செம்மணிப் புதைகுழி அகழ்வாராய்ச்சி தொடர்பான தடயவியல் அறிக்கையைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ நீதிமன்றத்தில் சமரப்பித்த அறிக்கையின் விபரங்களை அவர் நீதிமன்றத்தில் வெளிப்படையாக வாசிக்க அந்த விபரங்கள் செய்திகளாக வெளியுலகிற்கு தெரிந்தன.

அதுவரையிலும் பேராசிரியர் ராஜ் சோமதேவாவை ஒரு பெரும்பான்மை இன மகனாக எமது மக்கள் பார்க்கவில்லை. ஒரு நீதியின் தூதுவனாகவே கற்பனை செய்திருப்பார்கள்.

ஆனால் மக்களும் செம்மணி புதைகுழிகளுக்கு அருகில் எத்தனையோ மாதங்கள் தங்களை அர்ப்பணித்து பணி செய்தவர்களும் திகைத்து நின்றார்கள். அந்த கயவ-னின் தீர்ப்பைக் கேட்டு இலட்சக் கணக்கானவர்கள் தங்கள் இழந்திருப்பார்கள் நிச்சயமாக. அவர்களது "மூளைகள்" இயங்க மறுத்திருக்கும். கடந்த பத்து நாட்களாக உலகத் தமிழர்களும் தமிழ்நாட்டுத் தமிழர்களும் எமது தாயக மக்களும் கவலைகளால் வாடிப்போயிருப்பார்கள். அல்லது பொறுமையின்மையின் உச்சத்திற்கு சென்றிருப்பார்கள்.

ஆம்! அந்த கயவனது அறிக்கை வெளியான நாளான கடந்த 19ம் திகதியிலிருந்து பல குரல் ஒலித்த வண்ணம் இருக்கின்றன. ஆனால் நியாயமான அல்லது எமது வலிகளுக்கு மருந்து தடவும் வகையில் எதுவுமே அரசின் பக்கத்திலிருந்து ஆறுதலான வார்த்தைகள் அல்லது உறுதி மொழிகள் எதுவுமே கிட்டவில்லை.

அதே நேரத்தில் வடக்கு கிழக்கிலிருந்து அரசாங்கமோ அல்லது இனவாதிகளோ, அல்லது எமது உறவிகளின் இழப்பிற்கு காரணமானவர்களோ அதிரும் வகையில் "உரத்துக் குரல்" எழுப்பவல்ல ஒரு "உண்மையான" அரசியல் தலைவரைக் காணமுடியவில்லை.

ஆனால் ஊடகவியலாளர்கள் எமது மண்ணிலிருந்து குரல கொடுக்கின்றார்கள். தங்கள் எழுத்துக்கள் மூலமாக அவர்கள் தங்கள் கண்டனத்தையும் தெரிவித்து எது இனிமேல் எமது தரப்பால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை அழுத்தமாகச் சொல்கின்றார்கள்.

இந்த வார எமது உதயன் வெளியீட்டில் யாழ்ப்பாணத்திலிருந்து "நிலாந்தன்" எழுதிய கட்டுரையும் கொழும்பிலிருந்து "பாலா" எழுதியுள்ள கட்டுரையும் எமது மக்களுக்கு சில தரவுகளையும் உண்மைகளையும் எதை நாம் செய்யத்தவறிவிட்டோம் என்பதையும் எடுத்து வந்துள்ளனர்.

நிலாந்தன் அவர்கள் சில இடங்களில் ஆக்குபூர்வமான கருத்துக்களை தனது கருத்துக்களாக முன்வைக்கின்றார். ராஜ் சோமதேவவிற்கு கடுமையான கண்டனங்களை முன்வைத்து பாராளுமன்றத்தில் உரையாற்றிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களின் கருத்துக்களை அவர் வரவேற்றுள்ளார்.

சர்ச்சைக்குரிய செம்மணி மனிதப் புதைகுழியின் பின்னணியில் தொற்றுநோய் அல்லது இயற்கைப் பேரழிவு என்பன காரணமாக இருந்திருக்கலாம் என்றும், அங்கு முறையான இறுதிச் சடங்குகள் இடம்பெற்றதற்கான சில குறிப்பிடத்தக்க ஆதாரங்கள் தென்படுகின்றன என்றும் பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்துள்ள கருத்துக்களை நிராகரித்து இதுவரை எழுத்து வடிவில நூற்றுங்கணக்கான கட்டுரைகள் வெளிவந்துள்ளன. ஆனால், எமக்கு பலம் சேர்க்கும் வகையிலும் தென்னிலங்கையையும் திட்ட மிட்ட இனவாத நகர்வுகளுக்கு காரணமாக விளங்குபவர்களையும் பயங்கொண்டு ஓட வைக்கும் வேறு அரசியல் தலைவர்களோ, கருத்துக்களை முன்வைக்கக்கூடிய புத்திஜீவிகளோ எம் மத்தியில் அற்றுப் போய்விட்டார்களா என்ற ஏக்கம் எம்மில் பலரின் இதயங்களில் எழுந்து நிற்கின்றது.

. இந்த வார எமது "உதயன்" வெளியீட்டில் யாழ்ப்பாணத்திலிருந்து "நிலாந்தன்" கொழும்பிலிருந்து "பாலா" ஆகியோர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஆக்குபூர்வமானவை என்பதை அவற்றைப் படிப்பதில் இருந்து தெரிந்து கொள்ளலாம். அவர்கள் இருவ-ரின் எண்ணங்களிலும் உண்மையான போராட்ட உணர்வுள்ள தலைவர் எவரும் இல்லாத ஒரு சமூகமாய் அதற்குள் ஏமாற்று அரசியல் செய்து தங்கள் பதவிகளைத் தக்க வைக்கும் "போ-லி" அரசியல்வாதிகள் காணப்படும் அநியாயம் நிலவும் ஒரு காலத்தில் அநியாயங்கள் நிகழ்ந்து கொண்டிருக்க அவற்றைபற்றி சிந்திக்காமல் எதையும் பேசாது மாகாண சபைத் தேர்தலுக்காக காத்திருக்கின்ற அரசியல்வாதிகளையும் அவர்களது வால்களையும் பதவி மோகத்திலிருந்து அப்புறப்படுத்துவதம் எமது மக்களுக்கு முன்பாக உள்ள "பணி" என்றே நாம் கருதுகின்றோம்.

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00
பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers
• EDITOR IN CHIEF: R. N. Logendralingam
• GRAPHIC: Pathma & Yalini
• TECHNICAL: Janani and Bala
• PRINTERS: KT Web Printing Ltd.
• DISTRIBUTION: Uthayan Team
Phone: 416 752 1524 - Cell: 416 732 1608
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca · email: Uthayannews@yahoo.com

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY
எல்லாவிமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி நீரிழிவு நோய், வயிற்றுவலி மாதவிடதய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்
All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss
முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

FOR RENT
SPACIOUS 3-BEDROOM CONDO
KENNEDY & ELLESMERE • SCARBOROUGH
1950 Kennedy Road, Unit 201
AVAILABLE IMMEDIATELY
FREE INTERNET
3 SPACIOUS BEDROOMS
BRIGHT, SPACIOUS LAYOUT
NEWLY RENOVATED KITCHEN
CLEAN AND WELL-MAINTAINED
NEWLY RENOVATED FULL BATHROOM
1 PARKING SPACE
Convenient access to Hwy. 401, TTC, shopping, banks & restaurants.
CALL / TEXT TO VIEW
416-994-3861

ரொறன்ரோ நகர உணவகத்தில் வேலை வாய்ப்பு
ரொறன்ரோ நகரில் வெலஸ்லி-சேர்ச் வீதிகள் சந்திப்பிற்கு அருகில் இயங்கும் இத்தாலிய உணவகத்தில் சமையல் வல்லுனர் (COOK) மற்றும் உதவியாளர்களுக்கு வேலை வாய்ப்பு உண்டு. அனுபவம் உள்ளவர்களும் தொழிலில் ஆர்வமுள்ளவர்களும் 416 409 9450 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

யாழ்ப்பாணத்தில் 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு
யாழ்ப்பாண நகருக்குள் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் இல் 2 1/4 பரப்பு வெற்றுக் காணி உடனடியாக விற்பனைக்கு. சுற்று மதில் உள்ள பாதுகாப்பான இடம். காணி அமைந்திருக்கும் விலாசம்: 61/5- Temple Road, Jaffna. கனடாவில் உள்ள உரிமையாளரோடு வற்ஸ்அப்பில் தொடர்புகொள்ள +365 880 3766 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.



பேராசிரியர் ஆறுமுகம் சதாசிவம் அவர்களின் இலக்கியப்பணி

திருமதி. உமா மோகன்-முதுகலைமாணி (தமிழ்)

மொன்றியால் - கனடா

ஈழத்தில் பிறந்து தமிழுக்குத் தொண்டாற்றிய அறிஞர்களுள் பேராசிரியர் ஆறுமுகம் சதாசிவம் அவர்களும் முக்கியமான ஒருவராவார். இவர் மொழியியல் ஆய்வுத்துறையில் உலகறிந்த மொழியியல் அறிஞராக விளங்கியதோடு பழந்தமிழ் இலக்கிய ஆளுமை மிக்கவராகவும் இருந்து தமிழ் மொழி வளர்ச்சிக்கு பல்வேறு வகைகளில் தொண்டாற்றியுள்ளார்.

மொழியியல் ஆய்வுத்துறையில் சிறந்து விளங்கிய பேராசிரியர் அவர்கள் மதுரை தமிழ்ச் சங்கப் பண்டிதராகவும் மொழித்தூய்மையும் மரபும் பேணிய செந்தமிழ்க் காவலராகவும் விளங்கியுள்ளார்.

இதைவிடவும் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் ஆய்வு நிலை மாணவர்களுக்கு நல்ல வழிகாட்டியாகவும் என பன்முகத் திறமை கொண்டவராகவும் திகழ்ந்தவர். அவர் இப்படி பன்முகத் திறமை வாய்ந்தவராக விளங்குவதற்கு அவருக்கிருந்த கல்விப் பின்புலமும் பன்மொழி அறிவும் காரணமாக இருந்துள்ளன.

பேராசிரியரின் கல்விப்பின்புலமும் பன்மொழி அறிவும்

யாழ்ப்பாணம் அராலியைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் சதாசிவம் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை அராலியிலும் இடைநிலைக் கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் உயர்தரக்கல்வியை கொழும்பு ஆனந்தா கல்லூரியிலும் பயின்றார். பாடசாலையில்

கல்வி கற்கும் காலங்களிலேயே ஆங்கிலம், இலத்தீன், வடமொழி ஆகிய மொழிகளைக் கற்றுக்கொண்டார். தனது கல்லூரிக் காலங்களில் சிங்களம், பாளி ஆகிய மொழிகளையும் கற்றுக்கொண்டார்.

1948 இல் பேராதனை பல்கலைக்கழகத்தில் சேர்ந்து அங்கு மொழியியல்த் துறையில் தனது முழு ஈடுபாட்டையும் காட்டி தமிழில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார். பின்னர் அங்கேயே முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். அதன் பின் அங்கு முதுநிலை மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் கடமையாற்றினார். மொழியியல்த் துறையில் தனது மேற்படிப்பைத் தொடர்வதற்காக மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஜேர்மன் போன்ற மொழிகளையும் கற்றுக் கொண்டார். பேராதனை பல்கலைக்கழகத்திலேயே தனது முனைவர் பட்டத்தையும் பெற்றுக்கொண்ட பேராசிரியர் அவர்கள் அங்கு புலமைப்பரிசில் கிடைக்கப்பெற்று ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் உயர் பட்டப்படிப்பு படிப்பதற்காகச் சென்று அங்கு உலகப்புகழ் பெற்று விளங்கிய பேராசிரியர் தோமஸ் பரோ அவர்களின் மேற்பார்வையின் கீழ் மொழி ஆராய்ச்சி செய்யும் வாய்ப்பையும் பெற்று 1956 இல் D. Phil பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

இதனைத்தொடர்ந்து மொழியியலில் பல்வேறு வகையான அரிய சிறந்த பல ஆய்வு நூல்களை எழுதிய பேராசிரியர் ஆறுமுகம் சதாசிவம் அவர்கள் மொழியியலில் மட்டுமன்றி தமிழ் இலக்கிய துறையிலும் பல ஆய்வுகளையும் கட்டுரைகளையும் எழுதியதோடு சிறந்ததொரு பதிப்பினையும் செய்து தமிழ் இயக்கத்திற்கும் பல்வேறு நிலைகளில் பெரும் பணியைச் செய்துள்ளார்.

இந்தவகையில் பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களின் தமிழ் இலக்கியப் பணியை சற்று விரிவாக நோக்குவோம்.

பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களின் இலக்கியப்பணி

ஈழத்து இலக்கிய வரலாற்றில் பேராசிரியர் சதாசிவம் அவர்களின் இலக்கிய பங்களிப்பு மிகவும் முக்கியம் வாய்ந்ததாக உள்ளது. இதனை இவரது நூல்கள் மற்றும் கட்டுரைகள் மூலமாக அறிய முடிகின்றது. அந்த வகையில் சில நூல்களையும் கட்டுரைகளையும் எடுத்துக்கூறி அவற்றில் கூறப்பட்டுள்ள சில விடையங்களைப் பார்ப்பதன் ஊடாக பேராசிரியரின் பரந்த அறிவு தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு எந்தளவு உதவியுள்ளது என்பதை அறிய முடியும்.

இலக்கிய நூல்கள்

1. ஈழத்துக் கவிதைக் களஞ்சியம்
2. ஞானப்பள்ளு
3. ஆராய்ச்சி கட்டுரை எழுதும் முறை
4. கருத்துரைக் கோவை

கட்டுரைகள்

5. செந்தமிழ்
6. பண்டிதம்
7. பழமையும் புதுமையும்
8. பாஞ்சாலி சபதம்- புதுமையும் கற்பனையும்
9. இலக்கியமும் மக்கள் வாழ்க்கையும்
10. தமிழ்க் காப்பியங்கள்
11. ஈழமுந் தமிழும்
12. ஈழத்துத் தமிழ் அறிஞர்கள்
13. தொல்காப்பியம்
14. எமது இலக்கியப் பாதை
15. 19ஆம் நூற்றாண்டில் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி
16. சைவ சித்தாந்தம்
17. காலத்தால் மூத்த செந்நெறி: சிவநெறியும் திருமுறைகளும்
18. தமிழில் வேர்ச்சொற்கள்
19. தொல்காப்பியரின் இலக்கண கொள்கைகள்

இவற்றை விட மேலும் பல இலக்கியம், மொழியியல் மற்றும் சமயக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

இங்கு கூறப்பட்ட நூல்கள், மற்றும் கட்டுரைகள் போன்றவற்றில் இருந்து பேராசிரியரின் பரந்த அறிவு, தேடல், ஆய்வுத்திறன் என்பவை தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு எந்தளவு உதவியுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

இந்த வகையில்,

ஈழத்துக் கவிதைக் களஞ்சியம்

ஈழத்து இலக்கிய வரலாற்றில் இந்நூலிற்கு தனியிடம் உண்டு. இதில் ஈழத்தில் வாழ்ந்த புலவர்களும், அவர்கள் வாழ்ந்த காலமும் அவர்கள் பாடிய பாடல்களும் என்ற வகையில் வரிசைப்படுத்தி மிகுந்த பெரும் தேடல் கொண்டு தகவல்கள் திரட்டப்பட்டு இந்நூல் உருவாக்கப்படுள்ளது.

அச்சிடப்பட்டவை மட்டுமன்றி, எழுதி அச்சிடப்படாதவை, ஏட்டு வடிவில் இருந்தவை எல்லாவற்றையும் தேடிப்பிடித்து நூல் வடிவாக்கிய பேராசிரியரின் தொண்டு அளப்பெரியது.

145 ஈழத்து புலவர்கள் பற்றியும் அவர்களது கவிதைகள் பற்றியும் கூறும் இந்த நூலின் முக்கியத்துவம் பற்றி இந்நூலிற்கு அணிந்துரை எழுதிய பேராசிரியர் திரு. சி. செல்வநாயகம் அவர்கள் "ஈழநாட்டுத் தமிழ் இலக்கிய வளத்தினை வரலாற்று முறைப்படி ஆய்வதற்கும் ஈழத்துத் தமிழ்ப் பிரபந்தங்களின் இலக்கிய சிறப்பினை மட்டிடுவதற்கும் ஒரு சிறந்த கருவியாக இந்நூல் அமைந்துள்ளது" எனக் கூறியுள்ளார்.

ஞானப்பள்ளு

பேராசிரியர் சதாசிவம் அவர்களது இலக்கியப் பணியில் முக்கியமான ஒன்றாகத் திகழ்வது "ஞானப்பள்ளு" என்னும் நூலை திருந்திய பதிப்பாக மீளவும் உருவாக்கியது ஆகும்.

ஈழத்தில் எழுதப்பட்ட இரண்டாவது பள்ளு இலக்கியமான இந்த ஞானப்பள்ளு கத்தோலிக்கப் புலவர் ஒருவரால் பதினேழாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. இறை தூதர் யேசுகிறிஸ்துவின் புகழைப் பாடவந்த இந்த நூல் பேராசிரியர். ஆ. சதாசிவம் அவர்களது இலக்கியக் காப்பின் மிகப்பெரிய சாதனைக்குரிய நூலாக அமைந்துள்ளது.

இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாம் பதிப்பாக கொண்டுவரப்பட்ட இந்த நூலைப் பற்றி பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி அவர்கள் தனது நூலான "மொழியியற் பேராசிரியர் ஆறுமுகம் சதாசிவம் அவர்களின் ஆய்வுகளும் புலமைத்திறன்களும்" என்ற நூலில் கூறும்போது "பேராசிரியர் சதாசிவம் அவர்கள் தனது ஞானப்பள்ளு நூலின் பதிப்புரையில் பள்ளு இலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சி, பாட்டியல் நூல்கள் கூறும் பள்ளு இலக்கிய இலக்கணம், ஞானப்பள்ளின் அமைப்பு முறை, பள்ளு இலக்கிய வளர்ச்சி முதலான பல்வேறு விடயங்களைத் தமிழில் தோன்றிய பள்ளு இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து எழுதியுள்ள ஆய்வுரை குறிப்பாக பல்கலைக்கழக மாணவருக்கும் தமிழ் ஆர்வலருக்கும் பெருந்துணையாக அமையத்தக்கவை. இந்த நூலின் தொடக்கத்தில் இருபத்தொரு பக்கங்களில் "பள்ளுப் பிரபந்தத்தின் தோற்றமும் வளர்ச்சியும்" என்ற தலைப்பில் அமைந்துள்ள ஆய்வுக்கட்டுரை இலக்கிய வரலாற்று ஆய்விற்கு மிகவும் பயன்படத் தக்கதாகும். அதைத்தொடர்ந்து ஒன்பது பக்கங்களில் "ஞானப்பள்ளு நூலாராய்ச்சி" எனத் தரப்பட்டுள்ள ஆய்வுக்கட்டுரை பேராசிரியர் சதாசிவம் அவர்களின் இலக்கியப் புலமைய்யும், இலக்கிய வரலாற்று நோக்கையும் நன்கு புலப்படுத்துகிறது. மேலும் தமிழில் தோன்றிய பள்ளு நூல்களின் பெயர்களைத் தொகுத்துத் தந்திருப்பதும் பயனுள்ள தரவாகும்" எனப் கூறியுள்ளார்.

செந்தமிழ்

பேராசிரியர் எழுதிய கட்டுரைகளுள் சில அவர் வாழ்ந்த காலச் சூழலுக்கு ஏற்ப எழுதப்பட்டிருப்பதை அறியக்கூடியதாக உள்ளது. அத்தோடு பல கட்டுரைகள் ஆய்வு மாணவர்களுக்கு பயன் தரக்கூடிய விதத்தில் எழுதப்பட்டுள்ளன.

செந்தமிழ் என்ற இந்தக் கட்டுரை 1960-1970களில் ஈழத்தில் எழுத்தாளர்களுக்கிடையே மொழிகளைக் கையாள்வதில் மரபுக்கும், புதுமைக்கும் இடையில் போராட்டங்கள் நடைபெற்றபோது பேராசிரியர் அவர்கள் பழமையின் பக்கம் நின்று தன் கருத்தை வெளிப்படுத்தியபோது எழுதப்பட்டது.

அன்றைய காலத்தில் நவீன இலக்கியப் படைப்புக்களான சிறுகதைகள், நாவல்கள் மற்றும் கவிதைகள் போன்றவற்றிலும் பேச்சுத்தமிழ் இடம்பெறுவது வழக்கமானதால் கொச்சைத் தமிழ், இலக்கியங்களை ஆட்சி செய்வதாக மரபு வழிப்பட்டோர் அதற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்தனர். முன்னர் கூறியது போல பேராசிரியரும் பழமையின் பக்கமே நின்று தனது கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். எழுத்திலக்கண வழுவும், சொல் இலக்கண வழுவுமின்றி பொருளை உயிரோட்டமாகக் கொண்ட தமிழே செந்தமிழ் எனப்படும். இந்தப் பொருள் புலப்படும் வகையில் அமைந்தது "செந்தமிழ்" என்னும் கட்டுரை.

பேராசிரியரது "பண்டிதம்" என்னும் கட்டுரையும் செந்தமிழ், மரபு போன்றவற்றை வலியுறுத்துவதாக உள்ளது. பேராசிரியரின் மரபுப் போராட்டத்தின் பயன் பற்றி முனைவர் வை. கனகரத்தினம் கூறும்போது "இன்றும் ஆரம்பக் கல்வி முதல் பட்டப்படிப்பு வரை எல்லாக் கல்வி முயற்சிகளும் மொழித்தூய்மையுடன் பேணப்பட வேண்டும் என்பதை ஒவ்வொரு தமிழ் மகனும் உணர்ந்து செயல்படுவதைப் பார்க்கும் பொழுது பேராசிரியர் அவர்களின் போராட்டத்தின் பிரதிபலிப்பினை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது" என்கின்றார்.

பழமையும் புதுமையும்

"பழமையும் புதுமையும்" என்ற இந்த கட்டுரை பழமையைத் தழுவிய புதுமையே வேண்டப்படுவது" என பழமைக்கும், புதுமைக்கும் இடையிலான சமரசத்தை ஏற்படுத்துகின்றது. மேலும் இது புதிய இலக்கிய வாதிக்களையும் நெறிப்படுத்தும் நோக்கில் அமைந்துள்ளது.

(தொடர்ச்சி 7 பக்கம்)

கனடிய செய்திகள் Canadian News

"செம்மணி மனிதப்புதைகுழி என்பது இனவழிப்புக்கு மத்தியில் வாழ்ந்த மக்களின் அளவிலா துன்பங்களுக்கு அடையாளமாகும்!"

எனவோ சகலரும் பொறுப்புக்கூறலை நோக்கிய பாதையில் பயணிக்கவேண்டும் எனகனேடிய பொதுப்பாதுகாப்பு அமைச்சர் வலியுறுத்தும் கனடிய அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி



செம்மணி மனிதப்புதைகுழியானது இலங்கையில் இனவழிப்புக்கு மத்தியில் வாழ்ந்த மக்கள் முகங்கொடுத்த அளவிலா துன்பங்களையும் மீறல்களையும் மீள நினைவுறுத்தியிருப்பதுடன், கடந்தகால மீறல்களுக்கு நீதிகோரி உலகளாவிய ரீதியில் இயங்கிவரும் சகல செயற்பாட்டாளர்களும் ஒன்றிணைந்து, பொறுப்புக்கூறலை நோக்கிய பாதையில் பயணிக்கவேண்டியதன் தேவைப்பாட்டையும் உணர்த்தியிருப்பதாககனடாவின் பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் கனேடிய பாராளுமன்ற வளாகத்தில் செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் சுட்டிக்காட்டிய விடயங்கள் வருமாறு:

செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் பதில்களையும் நீதியையும் கோரிக் காத்திருக்கும் பாதிக்கப்பட்ட மக்களின் துயரம் அங்கீகரிக்கப்படவேண்டியது அவசியமாகும். ஆரம்பத்தில் மனிதப்புதைகுழியாக இருக்கக்கூடும் எனச் சந்தேகிக்கப்பட்ட செம்மணியில் இருந்து அண்மையில் சுமார் 600 ஐ அண்மித்த மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இது சர்வதேசத்தின் கவனம், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றுக்கான தேவைப்பாட்டைக் கொண்டிருக்கும் முக்கிய விவகாரமாகும்.

இலங்கை சுமார் மூன்று தசாப்தகால மோதல் வரலாற்றையும், அக்காலப்பகுதியில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் இன்னமும் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படாத பின்னணியையும் கொண்டதொரு நாடாகும். இவ்வாறானதொரு பின்னணியில் செம்மணி மனிதப்புதைகுழியானது இனவழிப்புக்கு மத்தியில் வாழ்ந்த மக்கள் முகங்கொடுத்த அளவிலா துன்பத்தையும் மீறல்களையும் மீள நினைவுறுத்தியிருக்கின்றது. அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்களுக்கு நீதிகோரி உலகளாவிய ரீதியில் இயங்கிவரும் சகல செயற்பாட்டாளர்களும் ஒன்றிணைந்து, இவ்விவகாரத்தில் பொறுப்புக்கூறலை நோக்கிய பாதையில் பயணிக்கவேண்டியதன் தேவைப்பாட்டையும் இது உணர்த்தியிருக்கின்றது.

2009 ஆம் ஆண்டு நவி பிள்ளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராகப் பதவி வகித்தபோது, தமிழ்ச்சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 5-6 பேரடங்கிய குழுவினரை ஜெனிவாவில் சந்தித்தார். அவ்வேளையில் தமிழர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்வதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என அவர் வலியுறுத்தினார். அதேவேளை கலாநிதி மரியோ அருள்தாஸ் இலங்கையின் இனவழிப்புக்கு எதிராக லண்டன் வீதிகளில் பிரசாரங்களிலும் கவனயீர்ப்புப் போராட்டங்களிலும் ஈடுபட்டார். அதனைத்தொடர்ந்து கடந்த 17 வருடங்களாக பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை இலக்காகக்கொண்ட பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துவருகின்றார்.

இது இவ்வாறிருக்க இலங்கை தொடர்பான இணையனுசரணை நாடுகளில் கனடா அங்கம் வகிப்பதுடன், இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் பொறுப்புக்கூறல் செயற்திட்டம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை தான் என்பதை கனடா ஏற்றுக்கொண்டிருக்கின்றது. அதுமாத்திரமன்றி இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் உள்ளடங்கலாக நால்வருக்கு கனேடிய அரசாங்கம் தடை விதித்துள்ளது. இருப்பினும் இந்நடவடிக்கைகள் மாத்திரம் போதுமானவை அல்ல. இவற்றுக்கு அப்பால் மேலும் பல நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டியுள்ளது. எது எவ்வாறெனினும் இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு நாம் ஆதரவளிக்கின்றோம் என்றார்.



கார்த்திகையில் மரநடுகை ஒரு சூழற்செயற்பாடு மட்டுமல்ல; அது தமிழ்த் தேசிய அரசியலின் அறப்போராட்டமும் ஆகும்

இலங்கை செய்திகள் Sri Lanka News

பசுமை இயக்கத் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு



மரங்களை நடுகை செய்வது என்பது பூமியின் வெம்மையைத் தணிவிக்கும் ஒரு சுற்றுச்சூழல் பணியாகும். ஆனால், கார்த்திகை மாதத்து மரநடுகை வெறுமனே ஒரு சூழற் செயற்பாடு மட்டுமல்ல அது மண்ணைக் குளிர்விப்பதோடு, மண்ணுக்காக மரணித்த மாவீரர்களைக் கூட்டாக நினைவேந்தும் தமிழ்த் தேசிய அரசியலின் ஓர் அறப்போராட்டமும் ஆகும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண மரநடுகை மாதமாகக் கார்த்திகை மாதம் கடைப்பிடிக்கப்படுவது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், கார்த்திகை தமிழ் மக்களுக்கு ஆன்மீக ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் புனிதமான ஒரு மாதமாகும். இம்மாதத்திலேயே வீடுகள் தோறும் அகல் விளக்குகள் ஏற்றி வழிபடும் தீபத்திருநாளும், மண்ணுக்காக மரணித்த மாவீரர்களின் கூட்டு நினைவாகச் சுடரேற்றும் தியாகத்திருநாளும் அடங்குகின்றன. இறந்தவர்களின் நினைவாக நடுகற்கள் நடுவது போல, அவர்களின் நினைவை என்றென்றும் வாழவைக்கும் பசுமைச் சின்னங்களாக மரங்களை நாட்டிப் பராமரிப்பது தொன்று தொட்டுத் தமிழ் வாழ்வியலோடு பிணைந்த ஒரு மரபாகும். இந்தத் தொல் மரபின் தொடர்ச்சியாகக் கார்த்திகையில் நாம் ஊன்றும் ஒவ்வொரு மரக்கன்றும் மாவீரர்களின் தியாக வரலாற்றை எதிர்காலச் சந்ததிக்குக் கடத்தும் உயிர்ச் சின்னங்களாக அமையும்.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்பும், மாவீரர்களை நினைவேந்துவதற்கான அடிப்படை உரிமை மறுக்கப்பட்டு வருகிறது. அரச படைகளால் நினைவுத்தூபிகள் இடித்து அழிக்கப்படுவதும், நினைவுச் சிலைகள் பெயர்த்து அகற்றப்படுவதும், நினைவுச் சுடர்கள் மிதித்து அணைக்கப்படுவதும் தொடர்கதையாக நீடிக்கிறது. ஆனால், மாவீரர்கள் நினைவாக மரக்கன்றுகளை நடுவதை எந்தவொரு சட்டத்தாலும் தடுத்து நிறுத்த முடியாது. எனவே, கார்த்திகை மாத மரநடுகை மாவீரர்களை நினைவேந்தும் அதேவேளை, அடக்குமுறைகளுக்கு எதிராக, இயற்கையின் சாட்சியாக வன்முறைகளின்றி முன்னெடுக்கப்படும் ஓர் அற வழிப் போராட்டமாகவும் அமைகிறது.

இலங்கையின் வறண்ட வலயமான வடபகுதிக்குக் கார்த்திகையில் வீசுகின்ற வடகிழக்குப் பருவப்பெயர்ச்சிக் காற்றே கூடிய மழைப்பொழிவைத் தருகிறது. இக்காலப்பகுதியில் நிலவும் வளிமண்டலக் குளிர்ச்சியும் மண்ணின் ஈரப்பற்றும் மரக்கன்றுகளின் நீராவிப்போக்கைக் குறைத்து, அவை வாடிவிடாது வேரூன்ற உவப்பான சூழ்நிலையை வழங்குகின்றன. காலநிலை மாற்றத்தால் தீவிரமடையும் எல் நினோ நிகழ்வு கடுமையான மழைப்பொழிவை ஏற்படுத்தி வருவதால் வெள்ளம் தேங்குகின்ற தாழ்நிலப் பகுதிகளைத் தவிர்த்து மரக்கன்றுகளை நடுகை செய்வது கார்த்திகை மரநடுகையை அறிவியல் ரீதியாகவும் முழுமையாக ஏற்புடையதாக்குகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

எம்மக்களின் வடபகுதி கடற்பரப்பு சட்டவிரோதிகளின் கூடாரமாக மாறிவிட்டது

கடற்படையின் அலட்சியப்போக்கையும் கடுமையாக கண்டித்த ரவிகரன் எம்.பி சுட்டிக்காட்டு

அத்துமீறி நுழையும் சட்டவிரோத இந்திய மீனவர்களாலும், உள்ளூர் சட்டவிரோத கடற்றொழிலாளர்களாலும் எமது மக்களின் வடபகுதிக் கடற்பரப்பு முழுவதும் சட்டவிரோதிகளின் கூடாரமாக மாறிவிட்டதாகவும், நேர்மையான வழியில் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு கடற்றொழில் மேற்கொள்ளும் மீனவர்கள் வஞ்சிக்கப்படுவதாகவும் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு எல்லை தாண்டி வரும் இந்திய இழுவைப்படகுகளின் வருகையை முற்றாக கட்டுப்படுத்த முடியாத இலங்கை கடற்படையின் செயற்பாடு மிகவும் கேவலமானது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மிகவும் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

பாராளுமன்றில் 05.11.2026 அன்று வியாழக்கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளால் வடக்கு கடற்பரப்பு மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றது.

சட்டவிரோத இந்திய மீனவர்கள் ஒருபுறம், இலங்கை சட்டவிரோதிகள் மறுபுறம் என, கடல் முழுவதும் சட்டவிரோதிகளின் கூடாரமாக மாறிவிட்டது.

வடக்கு மீனவர்களின் பொறுப்பில் வடக்கு கடற்பகுதியைத் தாருங்கள். கூடியவிரைவில் சீராக்கிக் காட்டுகின்றோமென மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

நீங்கள் கொஞ்சம் அங்குள்ள மீனவர்களின் குடும்பங்களை சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் உழைப்பதில்லையா? சாப்பிடவேண்டாமா? பிள்ளைகளின் கல்வி மற்றும் அவர்களின் வாழ்வாதாரத்தையும் எண்ணிப்பாருங்கள். வடபகுதி மீனவர்களையும் வாழ விடுங்கள்.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், குறிப்பாக தீவுப்பகுதி, மன்னார், கிளிநொச்சி மீனவர்கள் இலங்கையின் பிரஜைகள் இல்லையா?

நீதியாக, நேர்மையின் வழியில் சீரானவகையில் கடற்றொழில் மேற்கொள்ளும் மீனவர்கள் ஏன் வஞ்சிக்கப்படுகின்றனர். ஏன் சட்டவிரோதிகளின் ஆதிக்கத்தை வடபகுதிக் கடலில் அனுமதிக்கின்றீர்கள்.

இந்திய இழுவைமடிப் படகுகள், உள்ளூர் சுருக்குவலை, வெளிச்சம்பாய்ச்சி மீன்பிடி, டைனமெற் வெடிவைத்து மீன்பிடிக்கும் சட்டவிரோதிகள் எமது கடலை அழிக்கின்றனர்.



இந்திய இழுவைமடிச் சட்டவிரோதிகளால் எமது கடல் வளங்கள் மட்டுமல்ல மீன்பிடி வலைகளும் முற்றாக அழிக்கப்படுகின்றன. இவர்களா எம்மைக் காப்பவர்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அண்மையில் இந்திய உச்ச நீதிமன்றத்தில் இடம்பெற்ற ஒரு வழக்கில், இலங்கை மீனவர்கள் தமது கடலையும், அதன் வளங்களையும் சிறப்பாகப் பராமரிப்பதாகவும், அங்கு கடல் வளம் தூய்மையாக உள்ளதால் இலங்கைக் கடற்பரப்பில் கடல் வளம் அதிகரித்திருப்பதாகவும் இந்திய நீதியரசர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்திய கடற்பகுதி அசுத்தமடைந்துள்ளதால் மீன்வளம் அங்கு அழிந்துவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

மீன்வளத்தைத் தேடி இந்தியமீனவர்கள் இலங்கைக் கடற்பிராந்தியத்திற்குள் சென்றால் நிச்சயம் கைதுசெய்யப்படுவார்கள் எனவும், கைது நடவடிக்கையினைத் தவிர்க்கவேண்டுமெனில், இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைவதைத் தவிர்க்கவேண்டும் என இந்திய நீதியரசர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்திய மீனவர்கள் தவறான விடயத்தை மேற்கொள்கின்றார்கள் என்பதை இந்திய நீதியரசர்களே சுட்டிக்காட்டியுள்ளனர்.

இருப்பினும் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழையும் இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையால் முற்றுமுழுதாகக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஓரிரு படகுகளையும், அந்தப் படகுகளில் உள்ள மீனவர்களையுமே கடற்படையால் கைதுசெய்து நடவடிக்கை எடுக்கமுடிகின்றது. இவ்வாறு இலங்கைக் கடற்படையினர் அலட்சியப்போக்குடன் செயற்படுவது மிகவும் கேவலமானது எனச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் - என்றார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் வேண்டும் என அழுத்தம் கொடுக்கும் டக்ளஸின் ஈ.பி.டி.பி!

பு. கஜிந்தன்



பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்குவதற்கான திடமான நடவடிக்கையை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா தலைமையிலான அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள ஈ.பி.டி.பி. கட்சி, மாகாணசபை தேர்தல்கள் உடனடியாக பழைய முறையில் நடத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

மாகாண சபை தேர்தல் தொடர்பான தெரிவுக் குழுவுடன் நாடாளுமன்ற கட்டிட தொகுதியில் 4ம் திகதி புதன்கிழமை அன்று நடைபெற்ற கலந்துரையாடலில் ஈ.பி.டி.பி. கட்சியின் முக்கியஸ்தர்களான, கட்சியின் மூத்த உறுப்பினர் எம்.ஐ. முருகன் (தோழர் ஸ்ராலின்) மற்றும் சட்ட விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பாளர் சட்டத்தரணி சண். சஞ்சீவன் ஆகியோர் குறித்த விடயத்தினை வலியுறுத்தினர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது, "மாகாண சபை முறைமையை ஈ.பி.டி.பி. ஆரம்பத்தில் இருந்தே ஆதரித்தும் வரவேற்றும் வருகின்றது.

தற்போது, புதிய தேர்தல் முறையில் மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமாயின், அதற்கான எல்லை மீள்நிர்ணயத்தினை செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. எனவே, அதற்கு இன்னும் சில வருடங்கள் காத்திருக்க வேண்டி ஏற்படும் என்பதுடன் தேவையற்ற குழப்பங்களையும் ஏற்படுத்தும்.

எனவே, இம்முறை மாகாண சபை தேர்தல்களை பழைய தேர்தல் முறையான விகிதாரசார தேர்தல் முறையில் நடத்துவதே பொருத்தமானது.

இதன்போது, இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு போதிய ஒதுக்கீடுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ள முடியும்.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச காலப்பகுதியில் நாடாளுமன்றத்தில் பொலிஸ் அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு வழங்குவதற்கான சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

அது தற்போதைய ஜனாதிபதியினால் ஒப்பமிடப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படுமாயின், அடுத்த கணமே அமுலுக்கு வந்துவிடும். இதேபோல காணி அதிகாரமும் சாத்தியமான ஒன்றாகவே காணப்படுகின்றது.

தற்போதைய ஜனாதிபதி அனுர குமார திசநாயக்க அவர்கள் நம்பிக்கை ஊட்டும் வகையில் பல வாக்குறுதிகளை வழங்கி வருகிறார்.

அவரிடம் அதிபெரும்பான்மை பலம் நாடாளுமன்றத்தில் உள்ளது. எனவே கௌரவ ஜனாதிபதி மாகாணசபையை முழுமையான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்." என்று ஈ.பி.டி.பி. கட்சியின் நிலைப்பாட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடிய செய்திகள் Canadian News

The 'Ethnic Media and Social Media Appreciation Week Act, 2026', which, the Govt of Ontario proclaims to implement to honor Diverse Media outlets and Journalists

ஒன்றாரியோ அரசு பல்லின பத்திரிகைகள் மற்றும் பத்திரிகையாளர்களை கௌரவிக்க அமுல்படுத்தவுள்ள "பல்லின பத்திரிகைகள் மற்றும் சமூக ஊடகப் பாராட்டு வாரச் சட்டம், 2026



கனடாவின் ஒன்ராறியோ அரசாங்கம் மாகாணம் முழுவதும் உள்ள பல்லினப் பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை நிறுவனங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மாகாணத்தில் உள்ள பல்லின மக்களுக்கு நேர்த்தியான வகையிலும் உண்மையான செய்திகளை வழங்குவதிலும் தகவல் அளிப்பதிலும் அவர்களை இணைப்பதிலும் ஆற்றிவரும் முக்கியப் பங்கை அங்கீகரிக்கும் வகையில், இன ஊடக மற்றும் சமூக ஊடகப் பாராட்டு வாரச் சட்டம், 2026, (Ethnic Media and Community Media Appreciation Week Act, 2026) மசோதா 120 குறித்து மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த் 04-11-2026 புதன்கிழமை அன்று சமர்ப்பித்து உரையாற்றினார்.

இன, பன்முக கலாச்சார மற்றும் பன்மொழி ஊடக வெளியீட்டாளர்களுக்கு ஒரு நற்செய்தி. என்ற வகையில் இந்தத் துறை 130 ஆண்டுகளுக்கும் மேலாக கனடிய மக்களுக்குச் சேவை செய்து வருகிறது குறிப்பாக, கனடாவிற்குப் புதிதாகக் குடியேறியவர்களுக்கு, அவர்களின் புதிய வாழும் மண்ணான கனடாவின் உள்ளூர், மாகாண மற்றும் மத்திய அரசின் விவகாரங்கள் குறித்த தகவல்களை வழங்கி வருகிறன.

04-11-2026 புதன்கிழமை அன்று, 130 ஆண்டுகாலச் சேவைக்குப் பிறகு, ஒண்டாரியோ மாகாணச் சட்டமன்ற உறுப்பினர்கள் (MPPs) குழு ஒன்று, பாராளுமன்றச் செயலாளரும் Mississauga-Malton தொகுதியின் மாகாண பாராளுமன்ற உறுப்பினருமான ஆனந்த் அவர்களின் வழிகாட்டலில், "இன ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களுக்கான பாராட்டு வாரச் சட்டம், 2026" (Ethnic Media and Community Media Appreciation Week Act, 2026) எனும் 120-வது மசோதாவை இரண்டாம் வாசிப்பிற்காகச் சட்டமன்றத்தில் சமர்ப்பித்தது.

இந்த மசோதா, ஒன்றாரியோ மாகாணம் முழுவதும் உள்ள சமூகங்களுக்குத் தகவல்களை வழங்குவதிலும், அவற்றை ஒன்றிணைப்பதிலும் இன மற்றும் சமூக ஊடகங்கள் வகிக்கும் முக்கியப் பங்கை அங்கீகரிக்கிறது. மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் தீபக் ஆனந்த், அரிஸ் பாபிகியான் மற்றும் ஷெரி.்.ப் ஆகியோருடன், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த மசோதாவிற்கு ஆதரவாகப் பேசினர். அன்றைய நாளில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் ஒன்றாரியோ மாகாணத்தில் வெளிவரும் பத்திரிகைகள் மற்றும் வானொலி நிலையங்கள் தொடர்பாக பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

இறுதியில், அனைத்து உறுப்பினர்கள் மற்றும் அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் இந்த மசோதா நிறைவேறியது. இந்த முக்கியமான நிகழ்வின் போது, கனடாவின் மிகப்பெரிய பல்லின ஊடகங்களின் கழகமான Ethnic Press and Media Council சார்பாக, அதன் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி (CEO), துணைத் தலைவர்களான டிமிட்ரிஸ் வோஹைடிஸ் மற்றும் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் நாகமணி லோகேந்திரலிங்கம், மற்றும் தமிழ் சமூக ஊடகங்களான "பிகைன்ட் மீ" ஊடகம் சார்பில் அதனை நிர்வாக இயக்குனர் கனேந்திரன் செல்வராஜா மற்றும் "தேசம்" பத்திரிகையின் சார்பில் அதன் வெளியீட்டாளர் ராம்சங்கர் சிவநாதன் உட்பட பல உறுப்பினர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் கலந்துகொண்டனர்.



இந்த மசோதாவைச் சமர்ப்பித்து ஆதரித்த சட்டமன்ற உறுப்பினர்கள், "கனடிய பல்லினப் பத்திரிகையாளர் கழகத்தின்" (National Ethnic Press and Media Council of Canada) உறுப்பினர்களுடன் இணைந்து படத்தில் காணப்படுகின்றனர். இந்த மசோதா தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்த "கனடிய பல்லினப் பத்திரிகையாளர் கழகத்தின்" தலைவர் தோமஸ் சாரஸ் அவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, இந்த மசோதாவிற்கு ஆதரவளித்த சட்டமன்றத்தின் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மசோதா, இந்தத் துறையின் சவால்களையும் அதன் முக்கியத்துவத்தையும் அங்கீகரிக்கிறது.

உங்கள் அனைவருக்கும் நன்றி. என்று குறிப்பிட்டார்.

Great News for the publishers of ethnic/multicultural and multilingual publications. The sector of the industry is serving members of the Canadian people for more than 130 years, informing mostly new Canadian Immigrants about the civic, provincial and federal affairs of their new home.

Yesterday, and after 130 years of existents and provision of services to Canadian public, a group of MPP'S, members of the Legislative Assembly of the province of Ontario, under the leadership of Deepak Anand, introduced for the second reading of bill 120, Ethnic Media and Community Media Appreciation Week Act, 2026.

The Bill is recognizing the important role the ethnic and community media play in informing and connecting communities across Ontario. In favor of the bill spoke the MPP Deepak Anand, Aris Babikian and Sharif along with MPP of the three parties of the opposition The Bill finally pass with the support of all the members and also all the parties of the Assembly. Representing the ethnic Press and Media Council during this important event were presented at the' Queens Park 'Assembly the president and CEO of the organization, the Vice Presidents Dimitris Vohaitis, UTHAYAN Logan Nagamany Logendralingam and a number of member publishers.

In the picture, the MPP'S introduced and supported the Bill along with the members of the National Ethnic Press and Media Council of Canada. Taking this opportunity I want to express our gratitude to leadership of all political parties of the Assembly for their support of this Bill, which recognizes the struggles and the importance of the sector.

Thank you all, Thomas S. Saras - President and CEO

(4 பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர் ஆறுமுகம் சதாசிவம் அவர்களின் இலக்கியப்பணி

பாஞ்சாலி சபதம்: புலமையும் கற்பனையும்

இக்கட்டுரை பற்றி பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி அவர்கள் தனது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"பேராசிரியர் சதாசிவம் அவர்கள் இலக்கிய ஆய்வில் ஈடுபட்டு பல இலக்கியக் கட்டுரைகளை எழுதியுள்ளார் என்பதற்கு" பாஞ்சாலி சபதம்: புலமையும் கற்பனையும்" என்ற இந்தக் கட்டுரை சான்றாக விளங்குகின்றது. பாஞ்சாலி சபதத்தில் பாரதியாரின் புலமையையும் கற்பனையையும் அடையாளப்படுத்தும் அதேவேளை அப்படைப்பில் காணப்படும் தவறுகளையும் பேராசிரியர் சதாசிவம் இக் கட்டுரையில் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

"பாரதியார் பாஞ்சாலி சபதத்தை பாமர மக்கள் புரியும்படி அவர்களுக்கு மட்டுமே எழுதினார். மேலும் இது சமூக சீர் திருத்தத்தை மட்டும் கொண்டு எழுதப்பட்டுள்ளது. கற்றவர் இரசனைக்கு உட்படாததாக உள்ளது. இலக்கியத்தை இரசித்து வாசிப்பவர்களுக்கு ஏற்ற அணிகள் ஏதும் கைக்கொள்ளப்படவில்லை, எளிய தமிழில் சமூக சீர்திருத்தம் ஒன்றை மட்டும் கொண்டு அவர் வாழ்ந்த காலத்தின் தேவைக்கு ஏற்பப் பாடியுள்ளார்.

பாரதியாரின் புலமைக்கும் கற்பனையும் கோபுரமாக விளங்குவது குயிற்பாட்டு. அப்பாடல்கள் மக்களின் நுண்ணுணர்வு கொண்டு விளங்கி இன்புறத்தக்கவை.

புலவனின் அனுபவத்திற்கு ஏற்ப கற்பனையும் வேறுபடும். புலவர் ஒருவர் ஆரை நோக்கி கவிதை புனைகிறாரோ அவரின் அனுபவத்திற்கு உட்பட்ட மொழி நடையையும், கற்பனையையும் கையாள்வது மிகவும் பொருத்தமானதாகும்.வாசகரின் மனவியல்பை முற்றிலும் உணர்ந்து கவிதை படைத்தவர் பாரதியார். எனவே பாஞ்சாலி சபதம் பொதுமக்களுக்கெனப் படைக்கப்பட்ட காவியமாதலால் பொதுமக்கள் உணரும் பான்மையிற் கற்பனையை எடுத்தாண்டார் பாரதியார். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு பாஞ்சாலி சபதத்தை ஆராயின் பாரதியாரின் புலமையும் கற்பனையும் விளங்கும்" இதையே பேராசிரியர் சதாசிவம் எழுதிய இக் கட்டுரையின் சாரம் புலப்படுத்துகிறது. அத்தோடு இக் கட்டுரையில் அவரின் இலக்கிய விமர்சன ஆளுமையையும் அறிந்து கொள்ள முடிகின்றது" எனவும் பேராசிரியர் பாலசுந்தரம் அவர்கள் கூறுகின்றார்.

தமிழ் இலக்கியமும் மக்கள் வாழ்க்கையும்

இக்கட்டுரையில் தொல்காப்பியத்திற்கு முன்னைய காலத்தில் இருந்து இருபதாம் நூற்றாண்டு வரையிலான மக்களின் வாழ்க்கை இலக்கியங்களில் எவ்வாறு பிரதிபலிக்கிறன. என்பவற்றை ஆய்வு நோக்கில் பார்த்து தனது கருத்துக்களை துணிவுடன்கூறியுள்ளார்.

மேலே கூறிய கட்டுரைகளையும் விடவும் மேலும் பல சிறந்த கட்டுரைகளை பேராசிரியர் ஆ.சதாசிவம் அவர்கள் எழுதியுள்ளார். அக்கட்டுரைகளுள் "19ஆம் நூற்றாண்டில் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி: தமிழ் அறிவியல் வளர்ச்சி" என்ற கட்டுரையும் முக்கியமான ஒன்றாகும். இக்கட்டுரையில் செய்யுளால் அமைந்த இலக்கிய நூல்கள் அறிவு சார்ந்த விடயங்களைக் கூறுமாயின் அவை அறிவியல் நூல்கள் என்கின்றார். இதற்கு உதாரணமாக ஈழத்தில் 15ஆம் நூற்றாண்டில் தோன்றிய பரராசசேகரம், செகராசசேகரம் என்ற நூல்களை உதாரணமாகக் கூறியுள்ளார்.

இவை தவிர "ஆய்வுக்கட்டுரை எழுதும் முறை" என்ற நூலும் "கருத்துரைக் கோவை" என்ற நூலும் முறையே அவரின் ஆய்வுத் திறத்தையும் மாணவர்களுக்கு பலன்தரக்கூடிய பல கட்டுரைகளையும் உள்ளடக்கி நிற்கின்றன.

பேராசிரியர் சதாசிவம் அவர்கள் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடுகள் பலவற்றில் பங்கிபற்றிச் சிறந்த பல ஆய்வுக் கட்டுரைகளையும் வழங்கியுள்ளார்.

மேலே கூறப்பட்ட நூல்கள் மற்றும் கட்டுரைகள் யாவற்றிலும் கூறப்பட்டுள்ள விடயங்களிள் பேராசிரியர் ஆறுமுகம் சதாசிவம் அவர்கள் தமிழ் இலக்கியத்திற்குச் செய்த மகத்தான பணிகளை எடுத்தியம்பி நிற்கின்றன.

ஈழத்துக் கவிதை இலக்கியம், பள்ளு இலக்கியம், நூல் ஆய்வு, மரபுபேணல்மொழி ஆய்வு, சமய சிந்தனைகளும் அவை சார்ந்த கட்டுரைகளும் என பேராசிரியரின் பன்முகப் பட்ட பார்வை தமிழ் இலக்கிய உலகில் இவருக்கென தனியிடம் இருப்பதனை எடுத்தியம்பி நிற்கின்றன.

வடக்கின் செம்மணியிலிருந்து கிழக்கின் மேய்ச்சல் தரை வரை



- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

ஒடுக்குமுறை தீவிரமடையும்போது போராட்டங்களும் தீவிரமடைகின்றன. இதைப்பொன்றே தமிழ் மக்கள் மேற்கண்ட போராட்டக் களங்களைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது என்ன தெரிகிறது? போராடும் மக்களும் சிவில் அமைப்புகளும் தாம் போராடும் நாட்களை எண்ணி எழுதி வைத்திருக்கின்றன. ஆனால் தீர்வு கிடைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் பெற்றோர் படிப்படியாக முதுமை, நோய் போன்றன காரணமாக இறந்து கொண்டிருக்கிறார்கள். ஒருபுறம் போராடும் நாட்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இன்னொரு இறந்து போகும் பெற்றோரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. ஆனால் அந்தப் போராட்டங்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

கடந்த வாரம் தமிழ் அரசியலின் கவனக்குவிப்பு பெருமளவுக்கு செம்மணி இடைக்கால அறிக்கை மீதுதான் காணப்பட்டது. ஊடகத் தலைப்புச் செய்திகளும் உரையாடல்களும் அந்த அறிக்கையை நோக்கியவைகளாகத்தான் காணப்பட்டன.



இந்த வாரம் கிழக்கில் மேச்சல் தரைகளின் மீது கவனம் குவிக்கப்படுகிறது. அடாத்தாக கைப்பற்றப்பட்டிருக்கும் தமது மேச்சல் தரைகளை மீட்பதற்காக போராடிக் கொண்டிருக்கும் பண்ணையாளர்கள், விவசாயிகளோடு, அரசியல்வாதிகள், சிவில் செயற்பாட்டாளர்கள், வடக்கிலிருந்து சென்ற செயற்பாட்டாளர்கள் இணைந்தார்கள். மேச்சல் தரைக்கான போராட்டம் ஆயிரமாவது நாளை எப்பொழுதோ தாண்டி விட்டது.

இவைதவிர ஏற்கனவே சிறிய அளவில் முன்னெடுக்கப்படுகின்ற போராட்டங்கள் பல உண்டு. யாழ் மாவட்டத்தில், தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டம், பலாலி, மயிலிட்டி ஆகிய பகுதிகளில் காணிகளை மீட்பதற்கான போராட்டங்கள் தொடர்ச்சியாக நடந்து வருகின்றன. ஊடகங்களின் கவனம் அவ்வப்போது அவற்றின் மீதும் குவிக்கப்படும்.

ஏற்கனவே காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதியை கோரும் போராட்டங்கள் 3500 நாட்களைக் கடந்து விட்டது. வடக்கிலும் கிழக்கிலும் போராடும் மக்கள் தமது போராடும் களங்களில் தாங்கள் எத்தனை நாட்கள் போராடுகிறார்கள் என்பதனை கார்ட்போர்ட் மட்டைகளில் எழுதி வைத்திருக்கிறார்கள்.

குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதியைக் கேட்கும் போராட்டங்கள் சில ஆண்டுகளுக்கு முன் தொடங்கிய போது ஊடகங்களும் இது இத்தனையாம் நாள் போராட்டம் என்று முன்பக்கத்தில் செய்தி வெளியிட்டன. இப்பொழுது அவ்வாறு நாட்களை எண்ணிச் செய்தி போடும் நிலைமை இல்லை. அதாவது அந்த நாட்களுக்கு செய்தி முக்கியத்துவம் குறைந்துவிட்டது. ஊடகப் பரப்பில் அது சூடான செய்தியாக இல்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்தைப் பின்பற்றி கிழக்கில் மேய்ச்சல் தரைகளுக்காகப் போராடும் அமைப்புகளும், போராடும் நாட்களை எண்ணி ஒவ்வொரு நாளும் எழுதி வைத்தன. அங்கேயும் தொடக்கத்தில் காணப்பட்ட ஊடகக் கவனிப்பு பின்னர் படிப்படியாக குறைந்தது. அண்மை வாரங்களாக அந்தப் போராட்டக் களம் ஊடகங்களின் கவனிப்பை ஈர்த்துள்ளது. மாடுகள் கொல்லப்படுவதனால் பண்ணையாளர்கள் கொதித்துப் போய் இருக்கிறார்கள். அதாவது ஒடுக்குமுறை தீவிரமடையும்போது போராட்டங்களும் தீவிரமடைகின்றன.

மேற்கண்ட போராட்டக் களங்களைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது என்ன தெரிகிறது? போராடும் மக்களும் சிவில் அமைப்புகளும் தாம் போராடும் நாட்களை எண்ணி எழுதி வைத்திருக்கின்றன. ஆனால் தீர்வு கிடைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் பெற்றோர் படிப்படியாக முதுமை, நோய் போன்றன காரணமாக இறந்து கொண்டிருக்கிறார்கள். ஒருபுறம் போராடும் நாட்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இன்னொரு இறந்து போகும் பெற்றோரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. ஆனால் அந்தப் போராட்டங்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

தையிட்டியில் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி நாளன்று போராட்டம் நடக்கின்றது. இனிவரும் நாட்களில் அங்கேயும் இது எத்தனையாவது பௌர்ணமி அன்று எழுதி வைக்க வேண்டியிருக்குமா?

அதாவது தொகுத்துப் பார்த்தால், என்ன தெரிகிறது? போராட்டங்கள் மாதக்கணக்காக, ஆண்டுக்கணக்காக தொடர்ந்து நடந்து வருகின்றன. எனினும் இந்தப் போராட்டங்களில் பெரும்பாலானவற்றிற்குத் தீர்வு கிடைக்கவில்லை.

இவ்வாறு தீர்வு கிடைக்காத ஒரு பின்னணிக்குள், போராடிக் கொண்டிருக்கும் செயற்பாட்டாளர்கள் படிப்படியாக இறந்து போகின்ற அல்லது சோர்ந்து போய் போராட்டத்தின் தீவிரம் குறைகின்ற ஒரு பின்னணிக்குள், புதுசு புதுசாக போராட வேண்டிய தேவைகள் மேற்கிளம்புகின்றன.

அரசாங்கம் இந்த மாதம் இரண்டு புதிய சட்ட முன்மொழிவுகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறது. முதலாவது, பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாப்பதற்கான சட்டமூலம். இரண்டாவது, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான சட்டமூலம். இந்த இரண்டு சட்டமூலங்களுக்கும் எதிராக தென்னிலங்கையில் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்ப் பகுதிகளிலும் அரசு சாரா அமைப்புகள் அந்தப் போராட்டங்களில் ஈடுபடுகின்றன. அண்மையில் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு மேற்படி சட்டமூலங்கள் தொடர்பாக விளக்கம் அளிக்கும் ஒரு சந்திப்பு கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்த்தர்கள் மூவர் பங்குபற்றியிருக்கிறார்கள்.

நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் மேற்சொன்ன இரண்டு சட்ட முன்மொழிவுகளுக்கும் எதிராக எதிர்ப்புகள் கிளம்பியிருக்கின்றன. அனைத்துலக மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் காப்பகம் போன்றன மேற்படி சட்ட முன்மொழிவுகளுக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்துள்ளன. இந்த இரண்டு சட்ட முன்மொழிவுகளோடு மற்றொரு சட்ட முன்மொழிவு தொடர்பாகவும் விவாதங்கள் இடம்பெறுகின்றன. சிவில் சமூகங்கள் தொடர்பான ஒரு சட்டமூலம் அதுவாகும்.

இவ்வாறாக, ஒருபுறம் தீர்வு கிடைக்காத, ஆண்டுக்கணக்காக தொடர்ச்சியாக நடந்து வருகின்ற போராட்டங்கள். இன்னொரு புறம் தெட்டந் தெட்டமாக நடந்து வரும் போராட்டங்கள். இவைதவிர, புதிதாக திறக்கப்பட்டிருக்கும் போராட்டக் களங்கள்.

மேற்கண்ட போராட்டங்கள் அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. தமிழ் மக்கள் சிறிய அளவிலோ அல்லது பெரிய அளவிலோ போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டங்களில் பின்வரும் விடயங்கள் துலக்கமாகத் தெரிகின்றன.

முதலாவது விடயம், இந்தப் போராட்டங்கள் எப்பொழுது தீவிரமடைகின்றன என்றால் ஒடுக்குமுறை முடுக்கிவிடப்படுக்கையில்தான். அதாவது அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகள் தீவிரமடையும் போது போராட்டங்கள் தீவிரமடைகின்றன.

இரண்டாவது, இந்தப் போராட்டங்களில் வெற்றி பெற்றவை யாவும் அரசியல்வாதிகளும் சிவில் சமூகங்களும் புலம்பெயர்ந்த தமிழர்களும் இணைந்து முன்னெடுத்தவைதான்.

மூன்றாவது, இந்தப் போராட்டங்களில் பெரும்பாலானவற்றில் பாதிக்கப்பட்ட மக்கள் போராடும் போது கட்சிகள் அவர்களோடு இணைகின்றன. மிகச்சில போராட்டங்களில்தான் கட்சிகள் தாமாக முன்வந்து தொடர்ச்சியாக அல்லது குறைந்தபட்சம் தையிட்டி விகாரைக்கு எதிராக போராடுவதுபோல மாதம் ஒரு முறையாவது போராடுகின்றன.

நாலாவது விடயம், இந்தப் போராட்டங்களில் ஒப்பீட்டு அளவில் தொடர்ச்சியானவை என்று கூறத்தக்க போராட்டங்களில் பின்னணியில் புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் நிதி அனுசரணை உண்டு. அந்த நிதி அனுசரணை தான் இந்தப் போராட்ட நெருப்பை அணைய விடாமல் பாதுகாக்கின்றது. அந்த நிதி அனுசரணை இல்லையென்றால் இந்தப் போராட்டங்கள் சோர்ந்துவிடும். அதேசமயம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்தை இரண்டு அணிகள் ஆக்கியது இந்த உதவிகள்தான் என்ற குற்றச்சாட்டும் உண்டு.

ஐந்தாவது விடயம், இந்தப் போராட்டங்கள் ஒரு மையத்தில் இருந்து திட்டமிடப்படவில்லை. இந்த எல்லா போராட்டங்களையும் முன்னெடுப்பதற்கு மக்கள் இயக்கம் போன்ற கட்டமைப்புக்கள் இல்லை. பாதிக்கப்பட்ட மக்கள் போராடத் தொடங்குவார்கள் அதில் பின்னர் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் இணைவார்கள். புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் இணையும்.

கடந்த 17 ஆண்டுகளாக தமிழ்ப் பரப்பில் இடம்பெற்றுவரும் போராட்டங்கள் எல்லாவற்றையும் தொகுத்துப் பார்த்தால் கிடைக்கும் ஒட்டுமொத்தப் படம் இது. கடந்த 17 ஆண்டுகளிலும் தமிழ்த்தேசியப் பரப்பில் காணப்படும் பெரும்பாலான போராட்டங்களின் எழுச்சி வீழ்ச்சிகளை, தொடர்ச்சியை, தீவிரத்தை, தளர்வை மேற்கண்ட ஐந்து விடயங்களுக்குள் பிரதானமாக இரண்டு விடயங்கள் தீர்மானிக்கின்றன.

முதலாவது, போராட்டத்திற்கான தேவை அல்லது அடக்குமுறை அல்லது எதிர்த் தரப்பின் அல்லது வெளிநாடுகளின் ஏதோ ஒரு நகர்வு. இரண்டாவது காரணம், போராட்டத்துக்கு கிடைக்கும் நிதி அனுசரணை. இந்த நிதி அனுசரணையும் குறிப்பிட்ட போராட்டம் தொடர்ச்சியாக நடப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கின்றது.

மேற்சொன்ன இரண்டு காரணங்களிலும் முதலாவது அதாவது ஒடுக்குமுறை இது தொடர்ச்சியானது. 2009க்கு பின்னரும் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவது. எல்லாவற்றையும்விட முக்கியமாக ஒரு மையத்தில் இருந்து திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்படுவது. அதாவது அரசு என்ற மையத்தில் இருந்து முன்னெடுக்கப்படுவது. இலங்கைத் தீவின் ஒற்றை ஆட்சிக் கட்டமைப்புக்குள், அரசானது தனது உபகரணங்களான படைத்தரப்பு திணைக்களங்கள், அதிகார சபைகள் போன்றவற்றின் ஊடாக அதைச் செய்கிறது. அரசின் கொள்கை எதுவோ அதனை அரசின் உபகரணங்கள் முன்னெடுக்கும். அரசின் கொள்கை ஒடுக்குமுறையாக இருந்தால், நில ஆக்கிரமிப்பாக இருந்தால், சிங்கள பௌத்த மயமாக்கலாக இருந்தால் அதனை அதன் உபகரணங்கள் முன்னெடுக்கும்.

பகலில் சூரிய வெளிச்சத்தில் பிக்குகள் சட்டம் ஒழுங்கை மதியாமல் அல்லது நீதிமன்றத்தை மதியாமல் போராட்டங்களை முன்னெடுப்பார்கள். அல்லது பாதிக்கப்பட்ட மக்களை அச்சுறுத்துவார்கள். இது ஒரு பகுதி. இன்னொரு பகுதி, திணைக்களங்கள் தங்களுக்குரிய சட்டங்களை முன்னிறுத்தி நிலப்பறிப்பை, சிங்கள பௌத்த மயமாக்கலை முன்னெடுக்கும். அது சட்டப்படி செல்லுபடியானதாகவும் இருக்கும்.



(தொடர்ச்சி 9 பக்கம்)

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

"ஈழத்தமிழர்களுக்கு உரிமையை பெற்றுக் கொடுக்க இந்தியா இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்கின்றது"



இந்திய நிதியமைச்சர் நிர்மலா தெரிவித்தாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ. சிறிநாத் ஊடக சந்திப்பில் தெரிவிப்பு

இலங்கை தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அவர்களுக்கான உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்கான பல விடயங்களை இராஜதந்திர ரீதியில் முன்னெடுப்பதற்கான நடைமுறைகளை இந்திய அரசாங்கம் செய்வதாக இந்திய நிதியமைச்சர் தெரிவித்ததாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இளையதம்பி சிறிநாத் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் 2ம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "கடந்த வாரம் இந்தியாவின் தமிழ்நாடு மற்றும் புதுடெல்லிக்கு விஜயம் செய்து அங்குள்ள பல்வேறு அரசியல் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினேன். தமிழின சுத்திகரிப்பு அதே போன்று காஷ்மீரில் நடைபெற்ற இனசுத்திகரிப்பு தொடர்பாக டெல்லி பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஒப்பீடு தொடர்பான ஆய்வு மாநாட்டில் பிரதான பேச்சாளராகப் பங்கேற்க எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

என்னுடன் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்கள் மற்றும் ஜக்கிய அமெரிக்க தமிழ் செயற்குழு அமைப்பின் செயலாளர் லவன் கலந்துகொண்டனர்.

இதன்போது தமிழக அரசின் சமூக நலத்துறை அமைச்சர் வன்னிஅரசு பாரதிய ஜனதா கட்சியின் தமிழ் நாட்டுக்குரிய இளைஞர் அணி தலைவர் சூர்யா, பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டுக்கு பொறுப்பான செயலாளர் டாக்டர் வெங்கடேசன் ஆகியோரை சந்தித்தோம்.

இலங்கையில் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ள போதிலும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை. அரசியல் தீர்வு முயற்சிகளில் காணப்படும் இழுத்தடிப்புகள், காணிப் பிரச்சினைகள், தொல்பொருள் திணைக்களத்தின் ஊடாக ஆலயங்களுக்கு ஏற்படுத்தப்படும் நெருக்கடிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை அவர்களிடம் எடுத்துரைத்தோம்.

அதுபோல் சமகாலத்தில் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படுகின்றது என்ற போர்வையிலே அரசாங்கத்தை பயங்கரவாதத்தில் இருந்து காப்பாற்றுகின்ற சட்டம் என்ற போர்வையில் கொண்டுவரப்படவுள்ள புதிய சட்டம் தொடர்பிலும் நாம் தெளிவாக எடுத்துரைத்திருந்தோம்.

அதேவேளை தொல்பொருள் என்ற போர்வையிலேயே ஆலயங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடிகள் குறிப்பாக திருகோணமலையில் சிவன் ஆலயத்திலே தொல்பொருள் திணைக்களத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள பணிகள் இதனால் பாதிக்கப்படும் ஆன்மீகத் தன்மை, தொல்பொருள் திணைக்களத்தின் சட்ட நுணுக்கத்தின் ஊடாக பல செயற்றிடங்கள் முன்னெடுக்கப்பட்டுவதோடு பௌத்த விகாரைகள் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கையிலே புதிய அரசு அமையப்பெற்றுள்ள போதிலும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு இரண்டு ஆண்டுகளாக எந்த விதமான முன்னெடுப்புகளும் நடைபெறவில்லை. இந்தியாவால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த 13 வது திருத்தச் சட்டத்தின் ஊடாக மாகாண சபை தேர்தல்கூட நிச்சயமற்ற தன்மை இருக்கின்றது. என தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெறும் விடையங்களை மிகவும் விரிவாக எடுத்துரைத்துதோடு இதனை உன்னிப்பாக இந்திய நிதியமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

இவ்விடையங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு தமது கருத்துக்களை தெரிவித்திருப்பதாகவும் ஆலயங்கள் தொடர்பில் தமது கருத்துக்களை தெரிவிப்பதாகவும், இலங்கை தமிழர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கும் இது தொடர்பில் எடுத்துரைப்பதாகவும் இந்திய நிதியமைச்சர் உறுதியளித்தார்.

இலங்கை தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பில் இந்தியாவினுடைய ஈடுபாட்டை நாம் கோரியிருந்தோம். அதுபோல் இந்தியாவின் உதவியுடன் வடகிழக்கிலேயே அபிவிருத்தி திட்டங்கள் கட்டுமானங்களை மீண்டும் செய்ய வேண்டும் என்பதையும் நாம் எடுத்துரைத்ததோடு, ஏற்கனவே கொண்டுவரப்பட்ட பல திட்டங்கள் இன்னும் அனுமதியின்றி நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதையும் நாம் அவர்களது கவனத்திற்கு கொண்டு சென்றோம்.

இராஜதந்திர ரீதியில் தமிழ் மக்களுக்கு நெருக்கடிகள் ஏற்படாத வண்ணம் உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்கான பல விடயங்களை முன்னெடுப்பதற்கான நடைமுறைகளை இந்திய அரசாங்கம் செய்வதாக இந்திய நிதியமைச்சர் தெரிவித்தார்.

புதிய அரசு பல விடயங்களை நாடு ரீதியாக முன்னெடுத்திருந்தாலும்கூட வடகிழக்குலே மேற்கொள்ளப்படுகின்ற கட்டுமானங்கள் பொருளாதார நடவடிக்கைகள் மாகாண சபை தேர்தல் அரசியல் தீர்வு போன்ற பல விடயங்கள் செய்யப்படாமல் இருப்பது போன்ற விடயங்கள் உதவியை எதிர்பார்ப்பினை வெளிக்காட்டி இருந்தோம்.

இந்நிலையில் இந்தியாவிலே வசித்து வருகின்ற இலங்கை அகதிகள் தொடர்பில் நாம் எடுத்துரைத்திருந்தோம். அவர்கள் மீண்டும் இலங்கை திரும்புவதற்கு விரும்பினால் அவர்களுக்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்வதற்குரிய முயற்சிகள் செய்ய வேண்டும் எனவும், அவ்வாறு இலங்கை வரவிரும்பாமல் உள்ள அகதிகளை இந்திய நிரந்தர குடியுரிமையை பெற்றுக்கொடுப்பதற்கான வழிமுறைகளை ஆராய வேண்டும் என்றும் வலியுறுத்தினோம்.

அத்துடன், இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பிலும் கலந்துரையாடியதாக அவர் தெரிவித்தார்.

(8 பக்கத் தொடர்ச்சி)

வடக்கின் செம்மணியிலிருந்து கிழக்கின் மேய்ச்சல் தரை வரை

இவைதவிர அரசின் ஆயுதம் ஏந்திய உபகரணமாகிய படைத்தரப்பு தன்னிடம் உள்ள தேவையான வளங்களைப் பிரயோகித்து ஒடுக்குமுறையை அல்லது நிலப்பறிப்பை முன்னெடுக்கும். உதாரணமாக இரவில் அல்லது உயர் பாதுகாப்பு வலையத்துக்குள் ஒரு பௌத்த கட்டுமானத்தை படையினரின் பொறியியல் பிரிவு வேகமாகக் கட்டி முடித்துவிடும். இரவிரவாக அது நடக்கும். பகலில் தமிழ் மக்கள் விழித்தெழுந்து நிமிர்ந்து பார்க்கும்போது அந்தக் கட்டுமானம் முள்ளுக்கம்பி வேலிகளுக்கு மேலாக நிமிர்ந்து நிற்கும். எனவே இங்கே அரசின் உபகரணங்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் ஒரு மையத்திலிருந்து திட்டமிடப்படுகின்றவை. ஒன்றுடன் ஒன்று பிரிக்கப்பட முடியாதபடி தொடர்புடையவை. தொடர்ச்சியானவை.

இதைத்தான் மு.திருநாவுக்கரசு அண்மையில் வெளியிட்ட "இலங்கையின் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் தோற்றமும் நடைமுறையும் - சுதந்திரம் வரையான காலகட்டம்" என்ற நூல் எடுத்துக்கூறுகிறது. இந்த நூல் கடந்த வாரம் யாழ்.பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையின் ஏற்பாட்டில் வெளியிடப்பட இருந்தது. எனினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய அந்த நிகழ்ச்சி இடைநிறுத்தப்பட்டது. இந்த நூலானது இனஅழிப்பு ஒரு கட்டமைப்புசார் நடவடிக்கை என்பதனை தொகுத்துக் கூறுகிறது. இலங்கைத் தீவின் ஒற்றை ஆட்சிக் கட்டமைப்புக்குள் இன அழிப்பானது இவ்வாறு தொடர்ச்சியாகவும் நிறுவனமயப்பட்டும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்பதனை அது விளக்குகிறது.

ஆனால் அந்தத் தொடர்ச்சியான நடவடிக்கைகளுக்கு எதிரான தமிழ் மக்களின் தற்காப்பு நடவடிக்கைகளும் சரி போராட்ட நடவடிக்கைகளும் சரி தொடர்ச்சியானவை அல்ல.ஒரு மையத்திலிருந்து ஒன்றிணைக்கப்பட்டவையும் அல்ல. போராடத் தேவையான மையமான கட்டமைப்புகளும் தமிழ் மக்கள் மத்தியில் இல்லை. இதுதான் பிரச்சினை. கடந்த 17 ஆண்டு கால தமிழ்த் தேசிய அரசியலில் ஏற்பட்ட தேக்கங்கள், தளர்வு, சோர்வு போன்றவற்றிற்கு இதுதான் காரணம். தமிழ்ச் சக்தியானது ஒரு மையத்தில் இருந்து ஒருங்கிணைக்கப்படாமல் சிதறடிக்கப்படுகிறது.

இதுதொடர்பான கட்டமைப்புசார் நிலைமைகளை வெளிக்கொண்டு வந்த ஒரு நூலின் வெளியீட்டை நிறுத்தியதுகூட அவ்வாறான கட்டமைப்புசார் நடவடிக்கைதான். அரசின் ஒவ்வொரு கட்டமைப்பும் அதன் அதன் வேலையை செய்கின்றன. அண்மைக் காலங்களில் தமிழ் எழுத்தாளர்களுடைய நூல்களுக்கு தடை விதிக்கப்படுகிறது. ஒரு தொகுதி பாடல்களுக்கும் தடை உண்டு. நூல் வெளியீட்டு விழா மறைமுகமாக தடுக்கப்படுகின்றது. எல்லாமே ஒரு கட்டமைப்பின் தீர்மானங்கள்தான். உதிரியான நடவடிக்கைகள் அல்ல.

எனவே இந்தக் கட்டமைப்பு சார்ந்த நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கான தமிழ் தற்காப்பு நடவடிக்கைகளும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் கட்டமைப்பு சார்ந்தவைகளாக இருக்க வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட கட்டமைப்புகள் எவையும் தமிழ் மக்கள் மத்தியில் இல்லை.

எனவே ஒன்று தெளிவாகத் தெரிகிறது. ஒடுக்குமுறைதான் போராட்டத்தின் தீவிரத்தையும் போராட்டத்தின் தொடர்ச்சியையும் தீர்மானிக்கிறது. அதைத்தான் மு.திருநாவுக்கரசு, பேராசிரியர் சிவத்தம்பி போன்றவர்கள் "எதிரி தான் தமிழ்த் தேசியத்தின் பலம்" என்று சொன்னார்களா?

மயிலத்தமடு மாதவனை மேச்சல் தரை அபகரிப்புக்கு எதிராக மட்டக்களப்பு கச்சேரிக்கு முன்பாக ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு மாவட்டம் மயிலத்தமடு - மாதவனை பண்ணையாளர்களுக்கான சரியான நீதியை தற்போதைய அரசாங்கமும், பொலிஸாரும் நிலைநாட்ட வேண்டும் என தெரிவித்து பதாகைகளை ஏந்தியவாறு நவம்பர் 1ம் திகதி திங்கட்கிழமை மட்டக்களப்பு கச்சேரியின் முன்னால் மாபெரும் போராட்டம் இடம்பெற்றது. இதேவேளை மாட்ட செயலகத்தைச் சூழ பொலிசார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன், இ.சிறிநாத், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், செ.கஜேந்திரன், அரிசாகிர் மௌலானா, மட்டக்களப்பு மாநகர மேயர் சிவம்.பாக்கியநாதன், மற்றும் உள்ளூராட்சி மன்ற தலைவர்கள், உறுப்பினர்கள், பண்ணையதளர்கள், பொதுமக்கள் மற்றும் வடக்கு மாகாணத்திலிருந்து வருகைதந்திருந்த சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொலநறுவை மாட்டத்திலிருந்து வந்த சிங்கள மக்கள் என பலர் இதன்போது காலந்த கொண்டு மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்திருந்தனர். இதன்போது போராட்டக்காரர்கள் தமது கண்டனத்தை வெளிப்படுத்தி மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் முன்னால் தமது போராட்டத்தை ஆரம்பித்தனர். மக்களின் கோரிக்கைக்கு தீர்வு தர வேண்டும், பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்காதே, வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், அபிவிருத்தி குழுவின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்து, மேய்ச்சல் தரை நிலம் எமக்கு வேண்டும், சட்டவிரோத குடியேற்றவாசிகளை வெளியேற்று, மகாவலியே வெளியேறு என்ற கோசத்தை எழுப்பி போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

சட்டவிரோதமாக மட்டக்களப்பு மயிலத்தமடு மற்றும் மாதவனையில் குடியேறியவர்களால் பண்ணையாளர்களுக்கும், பசுக்களும் தொடர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றன. இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தின் போது பண்ணையாளர்கள் 7 பேரை மாத்திரம் மாட்ட அரசாங்க அதிபர் அழைத்து உரையாடினார். இதேவேளை அரசாங்க அதிபருடன் நடைபெற்ற கலந்துரையாடல் தமக்கு திருப்தியளிக்கவில்லை என அந்த கலந்துரையாடலுக்குச் செந்துவந்த பிரதிநிதிகள் தெரிவித்தனர். இது இவ்வாறு இருக்க மயிலத்தமடு- மாதவனை மேய்ச்சல் தரை பண்ணையாளர்களுக்கு நீதி கோரிய போராட்டத்தை முன்னின்று நடாத்திய 11 பேருக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டு ஒன்றியத்தின் இணைப்பாளர் அருட்பணி லுக்ரோன் பாதர் தெரிவித்துள்ளார்.

தனக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிநேசன், சிறிநாத் சிவில் சமூக செயற்பாட்டு ஒன்றியத் தலைவர் சிவயோகநாதன், பண்ணையாளர் சங்கத்தலைவர் நிமலன், விவசாயிகள் சம்மேளனத்தலைவர் மோகன் ஆகியோருக்கு எதிராகவே நீதிமன்றத்தினால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். இந்த தடை உத்தரவை அடுத்து போராட்டம் முடிவுக்கு வந்தது.

கனடிய செய்திகள் Canadian News

கம்போடியாவில் நடைபெறும் 3வது உலகத் தமிழ்க் கவிஞர் மாநாட்டில் கனடாவிலிருந்து கலந்து கொள்ளவுள்ள 3 கலை, இலக்கிய மற்றும் ஊடகச் செயற்பாட்டாளர்கள்




எதிர்வரும் நவம்பர் 14ம் 15ம் திகதிகளில் கம்போடியா தேசத்தின் சியம் ரீப் நகரில் நடைபெறவுள்ள 3வது உலகத் தமிழ்க் கவிஞர் மாநாட்டில் கனடாவிலிருந்து கலந்து கொள்ளவுள்ள 3 கலை, இலக்கிய மற்றும் ஊடகச் செயற்பாட்டாளர்கள் 12ம் திகதி இங்கிருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளார்கள்ரே.



மொன்றியால் வாழ் எழுத்தாளரும் கவிஞரும் நூலாசிரியருமான "வீணை மைந்தன்" கே.ரிஇசண்முகராஜா, கலை இலக்கிய மற்றும் சமூகச் செயற்பாட்டாளரும் "தேசம்" மாத இதழின் வெளியீட்டாளருமான ராம்சங்கர் சிவநாதன் மற்றும் கவிஞரும் எழுத்தாளரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தற்போதைய உப-தலைவரும் "உதயன்" பத்திரிகையின் பிரதம ஆசியருமான லோகேந்திரலிங்கம் ஆகியோரே மேற்படி மூவரும் ஆவார்கள்.







கம்போடியா தேசத்தின் சியம் ரீப் நகரில் நடைபெறவுள்ள 3வது உலகத் தமிழ்க் கவிஞர் மாநாடானது கம்போடியாவின் அங்கோர் தமிழ்ச் சங்கம் சீனு-ஞானம் ட்ரவல்ஸ், சீம் ரீப் பிராந்திய அரச திணைக்களமான கலை மற்றும் பண்பாட்டுத்துறை, ஆகிய அமைப்புக்கள் இணைந்து நடத்தும் ஒன்றாகும்.

மேற்படி மாநாட்டில். இலங்கை. தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து கவிஞர்களும் கலை இலக்கிய ஆர்வலர்களும் வாசகர்களும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

கவிஞர்கள் மாநாடு முடிவுற்றதும் மூன்று நாட்கள் கம்போடியாவின் பல நகரங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்கள் மற்றும் ராஜேந்திரசோழன் காலத்தில் 1000 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பெற்ற சைவ ஆலயங்கள் அமைந்திருக்கும் இடங்கள் ஆகியவற்றை பார்க்கும் சுற்றுலாப் பயணமும் ஏற்பாடு செய்யப்பெற்றுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மாநாடு தொடர்பான விடயங்களுக்கு கம்போடியா அங்கோர் தமிழச் சங்கத்தின் இலக்கமான +855969296456 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

- UTHAYAN LJI Journalist Ganesh -

Products of Sri Lanka's Elephant House, would be distributed by Grace Foods Canada Inc, across the Canadian market.

Elephant House Canada Event | November 25, 2026



"அட்டன் ஹோல்டிங்ஸ் இன்க்." (Atton Holdings Inc.) மற்றும் "சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் பிஎல்சி" (Ceylon Cold Stores PLC) ஆகியவற்றின் சார்பாக, கனடாவின் ரிச்மண்ட் ஹில் (Richmond Hill, ON) பகுதியில், 2026 நவம்பர் 25, புதன்கிழமையன்று நடைபெறவுள்ள "எலி.ஃபண்ட் ஹவுஸ் கனடா" (Elephant House Canada) நிகழ்விற்கு ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள் வரவேற்கப்படுகின்றனர்.

"எலி.ஃபண்ட் ஹவுஸ்" (Elephant House) என்பது இலங்கையின் மிகவும் புகழ்பெற்ற மற்றும் மதிக்கப்படும் இனிதான பானத் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றாகும்; இது பல தலைமுறைகளாக நீடித்த வரலாற்றைக் கொண்டது. இந்த நிறுவனம், இலங்கையின் மிகப்பெரிய பெருநிறுவனக் குழுமங்களில் ஒன்றான "ஜான் கீல்ஸ் குரூப்" (John Keells Group)-ன் அங்கமான "சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் பிஎல்சி" (Ceylon Cold Stores PLC)-க்குச் சொந்தமானது.

அதேவேளை "கிரேஸ் ஃபுட்ஸ் கனடா இன்க்." (Grace Foods Canada Inc.) நிறுவனம், கனடா முழுவதும் "எலி.ஃபண்ட் ஹவுஸ்" பானங்களை விநியோகம் செய்யும் பொறுப்பை ஏற்றுள்ள நிலையில், கனடாவில் "எலி.ஃபண்ட் ஹவுஸ்" நிறுவனத்தின் வளர்ச்சிப் பயணத்தில் இந்த நிகழ்வு ஒரு முக்கிய மைல்கல்லாக அமைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக, இலங்கையிலிருந்து வருகை தரும் "ஜான் கீல்ஸ் குழுமத்தின் சிரேஷ்ட உப தலைவர் திரு. சதீஷ் ரத்நாயக்க (Mr. Sathish Rathnayake) அவர்களை வரவேற்பதில் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இந்த நிகழ்வில், கனடாவிலுள்ள இலங்கை இராஜதந்திர சமூகத்தின் பிரதிநிதிகள், "கிரேஸ் ஃபுட்ஸ் கனடா" நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், நீண்டகால விநியோகஸ்தர்கள், வணிகப் பங்காளிகள் மற்றும் கனடாவில் வசிக்கும் இலங்கைச் சமூகத்தினர் மற்றும் பல்லின ஊடகங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர்.

நிகழ்வு விவரங்கள்:
புதன்கிழமை, நவம்பர் 25, 2026
முற்பகல் 11:00 மணி முதல் பிற்பகல் 2:00 மணி வரை

நிகழ்வு இடம்பெறும் இடம்:
தி கிளப் ஹால் (The Club Hall)
1550 16th Avenue, Unit 1–3, Building A
Richmond Hill, ON L4B 3K9

இந்த நிகழ்வின் போது புகைப்படம் மற்றும் காணொளி எடுப்பதற்கும், "எலி.ஃபண்ட் ஹவுஸ்" மற்றும் "கிரேஸ் ஃபுட்ஸ் கனடா" நிறுவனங்களின் பிரதிநிதிகளை நேர்காணல் செய்வதற்கும் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பெறும்.

பல்லின ஊடக நிறுவனத்திலிருந்து எத்தனை பிரதிநிதிகள் கலந்துகொள்வார்களா என்பதையும், அறியத்தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்பெறுகின்றனர்.

அனைவரையும் வரவேற்பதை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். கனடாவில் வாழும் இலங்கைச் சமூகத்தினருக்குத் தகவல்களை வழங்கி, அவர்களை ஒன்றிணைக்கும் பணியில் நீங்கள் ஆற்றிவரும் பங்களிப்பிற்கு நன்றி.

அன்புடன்,
Stefan

ATTON
Atton Holdings Inc.
8 Legends Drive, Toronto
Ontario, M1X 1Z5 Canada.
Phone #+1(365)292-3307
stefan@attonholdings.com
Stefan Atton
Founder/ CEO

'Canada Uthayan' welcomes the new Board of Directors of 'Canadian Tamil Chamber of Commerce', leads by Canadian Lawyer Mr. Vithu Ramachandran.

Our Best Wishes to the all other Board of Directors too.

கனடிய வழக்குரைஞர் விது இராமச்சந்திரன் அவர்கள் தலைமையிலான "கனடிய தமிழர் வர்த்தக சம்மேளன"த்தின் புதிய இயக்குனர் சபையை "கனடா உதயன்" வரவேற்கின்றது.



ஏனைய இயக்குனர் சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்!

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக பலமான இயக்குனர் சபைகளுடன் வெற்றி நடைபோடும் "கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம்" இவ் புதிய இயக்குனர் சபையின் நிர்வாகத்தில் மேலும், கனடிய தமிழ் பேசும் வர்த்தக சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் வெற்றிகளுக்கும் பக்க பலமாக பணியாற்ற வேண்டும் எனவும் வாழ்த்துகின்றோம்.!

கனடியத் தமிழ்ச் சமூகத்தில் மனநலச் சமத்துவத்தை மேம்படுத்தும் அரிய பணியில் இணைந்துள்ள 'யாழ் மருத்துவ பீடம்' தந்த வைத்தியப் பெருந்தகைகள்!







கனடியத் தமிழ்ச் சமூக மட்டத்தில் மனநலச் சமத்துவத்தை மேம்படுத்தும் என்னும் அரிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் கடந்த சில மாதங்களாக அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வந்த "கனடா- யாழ்ப்பாண மருத்துவ பீடத்தில் பட்டம் பெற்ற மருத்துவர்களின் சங்க"த்தைச் சேர்ந்த பல மருத்துவர்கள் ஒன்றிணைந்து நடத்திய பயனுள்ள ஊடகக் கருத்தரங்கு கடந்த 31-10-2026 அன்று சனிக்கிழமை ஸ்காபுறோவில் அமைந்துள்ள சென்றனரி பொது வைத்தியசாலையின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. மேற்படி திட்டமானது **SCARBOROUGH HEALTH NETWORK** வைத்திய அமைப்புடன் இணைந்து மெற்கொள்ளப்படவுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அரிய திட்டத்தில் இணைந்துள்ள யாழ் மருத்துவ பீடம் தந்த பல வைத்தியப் பெருந்தகைகள் சார்பாக அன்றையதினம் கருத்தரங்கை வைத்தியர் மைலாசன் மயில்வாகனம் தொகுத்து வழங்க வைத்தியர் இலம்போதரன் இராமநாதன். வைத்தியர் தமிழ்வாணன் பரமநாதன். வைத்தியர் ஸ்ரீ நவரட்ணம். இளஞ்செழியன் அம்பலவாணர், வைத்தியர் செந்தூரன் குணரட்ணம் ஆகியோர் தமிழ் ஊடக நிறுவனங்களின ஊடகவியலாளர்களுக்கு திட்டம் பற்றி விளக்கமளித்தனர். அதனைத் தொடர்ந்து **SCARBOROUGH HEALTH NETWORK** வைத்திய அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளான மத்திய அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி, மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி. ஒன்றாரியோ மாகாணத்தின் இணையமைச்சர்களில் ஒருவரான மாகாண பாராளுமன்ற உறுப்பினர் விஜேய் தணிகாசலம் உட்பட சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் மக்கள் சேவையாளர்கள், வர்த்தகப் பெருமக்கள் என மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள் மேற்படி பயனுள்ள திட்டம் தொடர்பான பலரின் விளக்கவுரைகளை கேள்வி பதில்கள் ஆகியவற்றை நன்கு கவனித்த வண்ணம் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.


அங்கு முக்கிய உரையாற்றிய வைத்தியர் திருமதி ஸ்ரீ நவரட்ணம் தனது உரையை உணர்வுபூர்வமாகவும் சபையோரை கவரும் வகையிலும் சான்றுகளுடன் ஆற்றினார். மனநலப் பாதிப்புற்றவர்களை நாம் ஆரம்பத்திலேயே குணப்படுத்தும் அல்லது ஆற்றுப்படுத்தும் சிகிச்சைகளை அல்லது ஆலோசனைகளை வழங்குவது முக்கியமானது என்று குறிப்பிட்டதுடன் மனநலக் குறைவால் பாதிக்கப்பட்ட ஒரு தம்பதியை அழைத்து வந்து அவர்களது மகன் ஒருவர் எவ்வாறு தாமதான சிகிச்சைக்கு அவர் உள்வாங்கப்பட்டதனால் எவ்வாறு அவர் உயிர் துறக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு அந்தக் குடும்பம் தள்ளப்பட்டது என்பது மிகுந்து பொறுப்புணர்வு எடுத்துரைத்தார்.

அங்கு உரையாற்றிய எமது அரசியல் பிரமுகர்கள் மூவரும் பயனுள்ளதும் உறுதியானதுமான கருத்துக்களை முன்வைத்து அங்கு சுமூகமளித்த அனைவருக்கும் **SCARBOROUGH HEALTH NETWORK** வைத்திய அமைப்பின் சார்பிலும் "கனடா- யாழ்ப்பாண மருத்துவ பீடத்தில் பட்டம் பெற்ற மருத்துவர்களின் சங்க"த்தைச் சேர்ந்த மருத்துவப் பெருந்தகைகள் சார்பிலும் நன்றி தெரிவிக்கப்பெற்றது. இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

---சத்தியன்



HAPPY DIWALI
தீபாவளி வாழ்த்துக்கள்





Hon.

TIM HODGSON

Member of Parliament Markham-Thornhill

905-479-1269 Tim.Hodgson@parl.gc.ca TimHodgsonMP.ca

Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திடமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24



இனிய
தீபாவளி
நல்வாழ்த்துகள்!



Salma Zahid

Scarborough Centre - Don Valley East

5-2155 Lawrence Avenue East
Scarborough, ON M1R 5G9
Tel: (416) 752-2358
Email: salma.zahid@parl.gc.ca
SalmaZahid15
@SalmaZahid15



Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

KANAGAAMBIKAI
Pawn Brokers



32
வருட சேவைகள்



கனகாம்பிகை

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!


நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198



அநுராதபுரத்திற்கு முதலில் வந்தவர் சிவனா...புத்தரா?

"இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள 700 கோடி ரூபாவை பயன்படுத்தி பௌத்தர்களின் புனித பூமியான அநுராதபுரத்தில் சிதைவுகளாக இருக்கும் இந்து ஆலயங்களை புனரமைத்து பௌத்தர்களின் இதயத்தில் கைவைப்பதற்கு முயன்றால் இந்நாட்டு பௌத்தர்கள் அதற்கு இடமளிக்க மாட்டார்கள் என மதவாத கூச்சலிடும் இந்த பேரினவாத மத வெறியர்கள், இலங்கை வரலாற்றையும், புத்தர் யார், புத்தர் எங்கிருந்து வந்தார் அவரின் மதம் என்ன என்பதனையும் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அத்துடன் அநுராதபுரத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்து ஆலயங்களை இலக்கு வைத்து இவர்கள் கக்கிவரும் மதவாத நச்சுக்கிருமிகள், நாட்டின் அமைதிக்கும் மத நல்லிணக்கத்திற்கும் விடுக்கப்பட்ட நேரடி சவாலாகவுள்ளது என்பதையும் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்."

---------- **கே.பாலா -**

பல்லாயிரமாண்டு காலத் தொன்மையும், நாகரிக வேர்களும் கொண்ட இலங்கையின் மண்ணில், இனவாதத்தின் நச்சு விதைகளை வித்திட்டுத் தங்களின் அரசியல் பிழைப்பை நடத்திய பேரினவாத சக்திகள், இன்று புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளன. தமிழ் மக்களின் நில உரிமைகளையும் அரசியல் உரிமைகளையும் இனத்தீயைக் கொண்டு எரிக்க முற்பட்டவர்கள், தற்போது அநுராதபுரத்தின் புராதன இந்து ஆலயங்களை நோக்கித் தங்கள் மதவாதக் கைக-ளை நீட்டியுள்ளனர். தயாசிறி ஜயசேகரக்களும், உதய கம்மன்பிலக்களும் முன்னெடுக்கும் இந்த மதவெறி வெறுப்புப் பிரசாரங்கள், ஒரு குறிப்பிட்ட மதத்தின் மீதான தாக்குதல் மட்டுமல்ல. இலங்கையின் பல்லினப் பண்பாட்டுச் சுவடுகளை அழித்தொழிக்கும் ஆபத்தான சதித்திட்டமாகவேயுள்ளது.

அண்மையை சில நாட்களாக ஞானசார தேரரின் காவி உடைக் களைவை வைத்து இலங்கையில் மதவெறியைத் தூண்டியவர்கள் அது சற்று தணிந்ததும் தற்போது இந்து மதத்தின்மீது தமது மதவெறிப் பார்வையை திருப்பி உள்ளனர். இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில், தமிழ் மக்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க பழம்பெரும் இந்து ஆலயங்கள் மற்றும் புனித நிலங்கள் இருக்கும் இடங்களான குருந்தூர் மலை, திருகோணமலை கன்னியா வெந்நீரூற்று, காங்கேசன்துறை தையிட்டி பகுதியில் உள்ள சிவன் கோவில், நெடுங்கேணி வெட்டுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயம், அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களும், உள்ளூர்வாசிகளும் வழிபட பயன்படுத்திய அம்பாறை மாயக்கல்லி மலை, திருகோண-மலை மாணிக்கமடு மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் என்பவற்றை தமது பௌத்த மதத்திற்குரிய இடங்களெனகூறி இதுவரை ஆக்கிரமித்தவர்கள் தற்போது அநுராதபுரத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்து ஆலயங்களை இலக்கு வைத்து இவர்கள் கக்கிவரும் மதவாத நச்சுக்கிருமிகள், நாட்டின் அமைதிக்கும் மத நல்லிணக்கத்திற்கும் விடுக்கப்பட்ட நேரடி சவாலாகவுள்ளது.

மதவெறித் தீயை மூட்டிய தயாசிறி

அநுராரபுரம் புனித பூமி அபிவிருத்தியின் போது அங்குள்ள இரண்டு இந்து ஆலயங்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இவ்வாறு இந்து ஆலயங்கள் புனரமைக்கப்பட்டால் சிங்கள பௌத்தர்களுக்கு இது பிரச்சினையாகும். அநுராதபுரம் புனித பூமி அபிவிருத்திக்காக இந்தியாவினால் 700 கோடி ரூபா நிதி வழங்கப்படும் நிலையில், அந்த நிதி குறிப்பிட்ட இரண்டு ஆலயங்களின் நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்படுமா என்பதனை அரசாங்கம் கூற வேண்டும். அநுராதபுரம் புனித பூமி அபிவிருத்தி திட்டம் மற்றும் அபிவிருத்தியின் போது பின்பற்ற வேண்டிய முறைமைகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்த வர்த்தமானி அறிவித்தலில் தற்போதுள்ள 28 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பை 38 சதுரக் கிலோ மீட்டர் வரையில் விருத்தி செய்வது தொடர்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய வலயம், கவனம் செலுத்தப்பட வேண்டிய வலயம் மற்றும் பொது வசதிகள் வலயம் என்று 3வலயங்களாக அதனை பிரிக்கவுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக அதிக கவனம் செலுத்த வேண்டிய வலயத்தில் புதிய வழிபாட்டிடங்கள் அமைக்கப்படவுள்ளன. குறிப்பாக அங்குள்ள இந்து ஆலயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அங்கு இரண்டு பழைய இந்து ஆலயங்கள் இருக்கின்றன. அவற்றின் சிதைவுகளே உள்ளன. அவற்றில் பூஜைகள் நடக்கின்றன. இந்நிலையில் அநுராதபுரம் புனித பூமி அபிவிருத்திக்காக இந்தியாவினால் 700 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக எங்களுக்கு அறியக் கிடைத்துள்ளது. இந்நிலையில் அண்மையில் இந்தியாவில் இருந்து இந்து மதகுருவொருவர் வருகை தந்தார். அவரை வெளிவிவகார அமைச்சர் வரவேற்றார். அவரை நாட்டில் பல பகுதிகளுக்கும் பாதுகாப்புடன் அழைத்துச் சென்றனர். இராமர் ஆலயங்கள் தொடர்பில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டே அவரை இவ்வாறு அழைத்துச் சென்றனர். இவ்வாறான நிலைமையில் இந்தியாவினால் வழங்கப்பட்டுள்ள 700 கோடி ரூபாவை அநுராதபுரத்தில் சிதைவுகளாக இருக்கும் இந்து ஆலயங்களை புனரமைக்க பயன்படுத்துவீர்களா? என்று நாங்கள் அரசாங்கத்தை கேட்கின்றோம்.

அதாவது இது தொடர்பில் பெரும் பிரச்சினையொன்று ஏற்பட்டுள்ளது. அட்டமாஸ்தானங்களின் மகாநாயக்க தேரர்களை நாங்கள் சந்தித்தோம். இந்த நிதியை பயன்படுத்தி அங்கு இரண்டு இந்துக் கோயில்களை நிர்மாணிக்கப் போகின்றனரா? என்ற அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இது சிங்கள பௌத்தர்களுக்கு பெரும் பிரச்சினையாகும். அத்துடன் வடக்கு, கிழக்கில் பெருமளவில் எமது தொல்லியல் சின்னங்கள் உள்ளன. அவற்றை வர்த்தமானியில் அறிவிக்கவும் அரசு தாமதிக்கின்றது. இந்நிலையில் குறிப்பிட்ட வெளியாகியுள்ள வர்த்தமானிக்கு அமைய இராமர் ஆலயத்தை அமைக்கும் முயற்சிகள் உள்ளனவா? என்ற சந்தேகங்கள் எழுகின்றன .என்று ஒரு சில நாட்களுக்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் பொது செயலாளரும் முன்னாள் அமைச்சரும் தற்போதை சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட எம்.பி.யுமான தயாசிறி ஜயசேகர மீண்டும் நாட்டில் மதவாத தீயைப் பற்ற வைத்தார்.

பௌத்தர்களின் இதயத்தில் கைவைத்தால், உதய கம்மன்பிலவின் எச்சரிக்கை

பௌத்தர்களின் புனித பூமியான அநுராதபுரத்தில் சகல மதங்களையும் உள்ளடக்கிய வணக்கஸ்தலங்களை நிர்மாணித்து பௌத்த மதத்தின் இதயத்தை சர்வ மத சாம்பாராக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது. பௌத்த விரோத செயற்பாடுகளில் ஈடுபடும் இந்த அரசாங்கம் பௌத்தர்களின் இதயத்தில் கை வைக்குமாக இருந்தால் அது அரசாங்கத்திற்கு பூமரங்காகவே வந்து முடியும் என்ற எச்சரிக்கையை நாங்கள் விடுக்கின்றோம். தற்போதைய அரசாங்கம் பௌத்த விரோத வேலைத்திட்டங்களையே முன்னெடுக்கின்றது. இவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் மகாநாயக்க தேரர்களால் கைகளில் கட்டப்பட்ட பிரித் நூலை அகற்றினர். அதன்பின்னர் பாராளுமன்ற கூட்டத் தொடர் ஆரம்பிக்கப்பட்ட போது ஜயமங்கல கீதம் நிறுத்தப்பட்டது. 22ஆவது திருத்தம் தொடர்பில் மகாநாயக்க தேரர்கள் அனுப்பிய கடிதத்தை கணக்கில் எடுக்கவில்லை. ஜனாதிபதி பௌத்தர்கள் வடக்கிற்கு இனவாத செயற்பாடுகளுக்கே செல்கின்றனர் என்றார்.

திருகோணமலையில் பிக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதுடன். பிக்குகள் கைது செய்யப்பட்டனர். பிக்குகளின் காவி உடை அகற்றப்பட்டது. பல்வேறு குற்றவாளிகளுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கிய போதும் ஞானசார தேரருக்கு விடுதலை வழங்கப்படாது என்று ஜனாதிபதி கூறியுள்ளார். இதனால் இந்த அரசாங்கம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர்கூட செய்யாத அளவுக்கு பௌத்த விரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது.

அநுராதபுரம் என்பது உலகவாழ் பௌத்தர்களின் இதயம். 1500 வருடங்களாக தொடர்ச்சியாக தலைநகரமாக இருந்த அநுராதபுரம் போன்ற நகரம் உலகில் எங்கேயும் இல்லை. இவ்வாறான அநுராதபுர நகரத்தை பௌத்தர்கள் இருக்கும் அரசாங்கத்தினால் மட்டுமே அபிவிருத்தி செய்ய முடியும். பௌத்த எதிர்ப்பு கொள்கையில் இருக்கும் அரசாங்கம் அநுராதபுரத்தில் கை வைப்பது என்பது பௌத்தத்தின் அழிவுக்கானது என்றே கூற வேண்டும். இவ்வாறான அரசாங்கத்தினால் பௌத்தர்களின் இதயத்தில் கைவைப்பதற்கு இந்நாட்டு பௌத்தர்கள் இடமளிக்க மாட்டார்கள்.

இதேவேளை புனித பூமி அபிவிருத்தியின் போது நிலக்கீழ் நிர்மாணங்களை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் தூபிகளின் அடித்தளங்கள் பலவீனமடையும். இதனால் தூபிகளை அழிக்க இவர்கள் திட்டமிடுகின்றனரா? என்ற சந்தேகங்கள் எழுகின்றன. அத்துடன் மேலும் வணக்கஸ்தலங்களை உள்ளடக்கி புனித பூமியை விருத்திச் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் வணக்கஸ்தலம் என்ற வசனத்திற்கு முன்னால் பௌத்த வணக்கஸ்தலம் என்றோ புரதான வணக்கஸ்தளம் என்றோ குறிப்பிடப்படவில்லை. அப்படியென்றால் சகல மதங்களின் வணக்கஸ்தலங்களையும் அநுராதபுரம் புனித பூமியில் நிர்மாணித்து, பௌத்த மதத்தின் இதயத்தை சர்வ மத சம்பார் போன்று மாற்றுவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முயற்சிப்பது இதன்மூலம் தெரிகின்றது.


ஏற்கனவே சிவன் கோயிலொன்று அநுராதபுரம் புனித பூமியில் நிர்மாணிக்கப் பட்டுள்ளது. அதன்படி அரசாங்கத்தின் திட்டத்தின்படி இராமர் கோயில் மற்றும் சீதையம்மன் கோயிலை நிர்மாணிக்கும் நோக்கத்தில் அது தொடர்பான சரத்துக்களை புனித பூமி அபிவிருத்தி வர்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக சந்தேகங்கள் எழுகின்றன. பௌத்த விரோத திசைக்காட்டி அரசாங்கம் அநுராதபுரம் புனித பூமியெனும் பௌத்தர்களின் இதயத்தில் கை வைத்தால் இந்த அரசாங்கத்திற்கு பூமரங்காகவே வந்து முடியும் என்ற எச்சரிக்கையை நாங்கள் விடுக்கின்றோம் எனக்கூறி தயாசிறி மூட்டிய மதவாத்தீயை கொழுந்து விட்டு எரிய வைத்தார் பிவித்துறு ஹெல உறுமய கட்சி தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில.

இவர்கள் மட்டுமல்ல முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் இலங்கை அதிரடிப்படைகளின் முன்னாள்தளபதியுமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, இலங்கை ஒரு பௌத்த நாடு. தொல்பொருள் திணைக்களத்தின் எல்லைக்குள் இருக்கும் பௌத்த விகாரைப் பகுதிகளில் இந்துக்கள் உரிமைகோர முடியாது. சட்டத்தையும் மீறி வழிபாடுகளில் ஈடுபட்டால் அல்லது விகாரை அமைப்பதைத் தடுத்தால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்" என அச்சுறுத்தியுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணி தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ச, வடக்கு-கிழக்கில் மட்டுமன்றி, அநுராதபுரம் போன்ற புனித பௌத்த நகரங்களிலும் இந்து மற்றும் ஏனைய சிறுபான்மை வழிபாட்டுத் தலங்கள் திட்டமிட்டு பௌத்த பாரம்பரியத்தை அழிப்பதற்காக அமைக்கப்படுகின்றன. இது பௌத்த இலங்கைக்கான சர்வதேச சதி என்று கூறியுள்ளார்.

பொதுபலசேன மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற இனவாத அமைப்புகள், அநுராதபுரம், பொலநறுவை போன்ற நாட்டின் வரலாற்றுப் பகுதிகள் தூய்மையான பௌத்த தளங்கள். இங்குள்ள பழமையான இ ந்து ஆலயங்கள் சோழர் படையெடுப்பின் போது கட்டப்பட்டவை அல்லது ஆக்கிரமிப்புகளின் மூலம் உருவானவை. எனவே பௌத்த புனித நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இந்து கோயில்களின் பிரம்மாண்டமான விரிவாக்கங்களை முற்றாகத் தடை செய்ய வேண்டும் வலியுறுத்தியுள்ளன.

(தொடர்ச்சி 18 பக்கம்)



உலக வர்த்தகத் தொடர்புகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஹோர்மூஸ் ஜலசந்தி நெருக்கடி 2026

2026 பெப்ரவரி முதல் அக்டோபர் வரையிலான ஒரு ஆய்வு

ஹோர்மூஸ் ஜலசந்தி பாரசீக வளைகுடாவையும் ஓமான் வளைகுடாவையும் இணைக்கும் குறுகிய கடல்வழி. அதன் மிகக் குறுகிய பகுதி சுமார் 34 கி.மீ. அகலம் மட்டுமே. போருக்கு முன் உலகின் கடல்வழி எண்ணெய் வர்த்தகத்தில் சுமார் கால் பங்கும், திரவ இயற்கை எரிவாயுவில் (LNG) சுமார் 20 சதவீதமும் இந்த வழியாகவே சென்றன. இதில் பெரும்பகுதி சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், ஈராக், கத்தார் ஆகிய நாடுகளிலிருந்து வருகிறது 2024 நிலவரப்படி இங்கிருந்து செல்லும் கச்சா எண்ணெயில் சுமார் 84 சதவீதம் ஆசிய சந்தைகளுக்குச் சென்றது.

இந்தக் கட்டுரை பிப்ரவரி 28 முதல் அக்டோபர் 21 வரையிலான நிகழ்வுகளை மாதம் மாதமாக ஆராய்கிறது. போரின் இயல்பு எப்படி மாறியது, அதனால் என்ன தாக்கங்கள் ஏற்பட்டன என்பதே இதன் மையம்.

முக்கியத் தெளிவு: இது ஒரு வார யுத்தம் அல்ல. இது எட்டு மாதங்களாக நீடிக்கும் நெருக்கடி. கடந்த சில வாரங்களில் கப்பல் தாக்குதல்கள் உச்சத்தை அடைந்ததால், அது தனிப் போர் போலத் தோன்றுகிறது.

பின்னணி புயலுக்கு முந்தைய நாட்கள்

2025-ல் நடந்த 12 நாள் வான்வழி மோதலும், ஜெனீவாவில் தோல்வியடைந்த அணுசக்திப் பேச்சுவார்த்தைகளும் பதட்டத்தை அதிகரித்திருந்தன. பெப்ரவரி 15 முதல் 20 வரை ஈரான் தனது எண்ணெய் ஏற்றுமதியை வழக்கத்தைவிட மூன்று மடங்காக்கி, சேமிப்பைக் குறைத்தது. அதாவது தடங்கலை எதிர்பார்த்து முன்கூட்டியே தயாரானது. சவுதி அரேபியாவும் இதேபோல் முயன்றது. ஜலசந்தியில் போர்க்கால காப்பீட்டுக் கட்டணம் கப்பல் மதிப்பில் 0.125 சதவீதத்திலிருந்து 0.2 முதல் 0.4 சதவீதம் வரை உயர்ந்தது.

தாக்குதலுக்கு முன்பு அமெரிக்கக் கூட்டுப் படைத் தலைவர்கள் (Joint Chiefs), தாக்குதல் நடந்தால் ஈரான் ஜலசந்தியை மூடக்கூடும் என்று ஜனாதிபதி ட்ரம்புக்கு எச்சரித்ததாக அறிக்கைகள் கூறுகின்றன. ஈரான் மூடுவதற்குப் பதிலாகச் சரணடையும் என்றும், மூடினால் அமெரிக்க ராணுவம் மீண்டும் திறந்துவிடும் என்றும் அவர் கருதியதாகவும் அதே அறிக்கைகள் சொல்கின்றன. அந்த மதிப்பீடு பின்னர் பொய்த்தது.

பெப்ரவரி 28: போர் தொடங்கியது

பெப்ரவரி 28 அன்று அமெரிக்காவும் இஸ்ரேலும் "ஆபரேஷன் எபிக் ∴ப்யூரி" என்ற பெயரில் ஈரான் மீது ஒருங்கிணைந்த வான்வழித் தாக்குதல்களைத் தொடங்கின. ராணுவத் தளங்கள், அணுசக்தி நிலையங்கள், தலைமை ஆகியவை குறிவைக்கப்பட்டன. உச்சத் தலைவர் அலி கமேனி கொல்லப்பட்டார். பதிலடியாக ஈரான் இஸ்ரேலிய நகரங்கள் மீதும், ஐக்கிய அரபு அமீரகம், கத்தார், பஹ்ரைனில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீதும் ஏவுகணைகளை ஏவியது. லெபனானில் ஹிஸ்புல்லாவும் மோதலில் இணைந்தது. ஹூதிகள், செங்கடலில் வணிகக் கப்பல்கள் மீதான தாக்குதல்களை மீண்டும் தொடங்குவதாக அறிவித்தனர்.

சில மணி நேரங்களுக்குள் IRGC (புரட்சிகரக் காவல் படை) VHF வானொலி மூலம் கப்பல்களுக்கு எச்சரிக்கை அனுப்பி, எந்தக் கப்பலும் கடக்க அனுமதிக்கப்படாது என்று தெரிவித்தது. அன்றிரவு ஜலசந்தியில் வெளிச்செல்லும் போக்குவரத்து இன்னும் அதிகமாக இருந்தது. குறைந்தது மூன்று டேங்கர்கள் தாக்கப்பட்டன.

மார்ச்: முழு முடக்கமும் எண்ணெய் அதிர்ச்சியும் கடலில் என்ன நடந்தது

மார்ச் 1 அன்று "ஸ்கைலைட்" டேங்கர் தாக்கப்பட்டு இரண்டு இந்தியப் பணியாளர்கள் உயிரிழந்தனர் "MKD Vyom" என்ற டேங்கரை ட்ரோன் படகு தாக்கியது. மார்ச் 2 அன்று IRGC அதிகாரி ஒருவர் ஜலசந்தி மூடப்பட்டதை அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தினார். அன்று நள்ளிரவுக்குப் பின் எந்த டேங்கரும் தன் அடையாள சிக்னலை ஒளிபரப்பவில்லை அதாவது போக்குவரத்து கிட்டத்தட்ட நின்றுபோனது. மார்ச் 4 அன்று தாங்கள் ஜலசந்தியின் முழுக் கட்டுப்பாட்டைப் பெற்றதாக IRGC கூறியது.

அதே நாள் குவைத்தில், ஜலசந்தியிலிருந்து 800 கி.மீ.க்கு மேல் தொலைவில், "சொனாங்கோல் நமிபே" டேங்கர் கடல் ட்ரோனால் தாக்கப்பட்டு எண்ணெய்க் கசிவு ஏற்பட்டது. இது மோதல் ஜலசந்தியைத் தாண்டி விரிவடைந்ததன் முதல் பெரிய அறிகுறி. மார்ச் 6 அன்று ஒரு இழுவைப் படகு ஏவுகணைகளால் தாக்கப்பட்டு மூழ்கியது. மார்ச் 10 அன்று ஈரான் கடல் கண்ணிவெடிகளைப் பதிக்கத் தொடங்கியதாக அமெரிக்க உளவுத் தகவல்கள் கூறின் 16 கண்ணிவெடி படகுகளை அழித்ததாக அமெரிக்க ராணுவம் அறிவித்தது. மார்ச் 11 அன்று தாக்குதல்களின் பெரிய அலை வந்தது; தாய்லாந்துக் கொடியுடைய "மயூரி நாரி" கப்பலில் மூன்று பணியாளர்கள் உயிரிழந்தனர்.

முற்றாக மூடப்பட்டதாகச் சொல்லப் பட்டாலும் ஈரான் "தேர்ந்தெடுத்த அனுமதி" முறையைக் கடைப்பிடித்தது. சீனாவுக்குச் சொந்தமானவை என்று அடையாளம் காட்டிய கப்பல்கள் கடந்தன. மார்ச் 26 அன்று வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி, சீனா, ரஷ்யா, இந்தியா, ஈராக், பாகிஸ்தான் நாடுகளின் கப்பல்களுக்கு அனுமதி என அறிவித்தார்; மலேசியா, தாய்லாந்து, துருக்கி கப்பல்களுக்கும் தனித்தனி அனுமதிகள் கிடைத்தன. ஈரானின் சொந்த வழித்தடம் வழியாகச் செல்ல ஒரு கப்பல் 20 லட்சம் டாலர் செலுத்தியதாகவும், கட்டணங்கள் சீன யுவானில் வசூலிக்கப்பட்டதாகவும் டுடழலன"ள டுளைவ தகவல்கள் கூறுகின்றன. மார்ச் 27 அன்று ஐ.நா. கோரிக்கையை ஏற்று, மனிதாபிமான மற்றும் உரக் கப்பல்களுக்கு ஈரான் அனுமதி அளித்தது. அதே நாள் அமெரிக்கா, இஸ்ரேல், அவற்றின் கூட்டாளிகளின் துறைமுகங்களுக்குச் செல்லும் அல்லது அங்கிருந்து வரும் எல்லாக் கப்பல்களுக்கும் ஜலசந்தி மூடப்பட்டதாக IRGC அறிவித்தது. மார்ச் 26 அன்று ஈரான் கடற்படைத் தளபதி அலிரேசா தங்சிரி விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் கூறியது.

பொருளாதார அதிர்ச்சி

- மார்ச் 5 முதல் முக்கிய கப்பல் காப்பீடுகள் (P&I) விலக்கப்பட்டன. ஜலசந்தி சட்டப்படி திறந்திருந்தாலும் நடைமுறையில் மூடப்பட்டது.

- கத்தார் எரிசக்தி நிறுவனம் மார்ச் 2 அன்று எரிவாயு உற்பத்தியை நிறுத்தி, மார்ச் 4 அன்று "போர்ஸ் மஜூர்" அறிவித்தது. குவைத் (மார்ச் 7), பஹ்ரைன், ஈராக் (மார்ச் 17) அதைத் தொடர்ந்தன.

- மார்ச் 8 அன்று பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை நான்கு ஆண்டுகளில் முதல்முறையாக 100 டாலரைத் தாண்டி, உச்சமாக 126 டாலரை எட்டியது. மார்ச் 19 அன்று துபாய் கச்சா விலை 166 டாலரில் பதிவுச் சாதனை படைத்தது. வரலாற்றிலேயே மிகப்பெரிய மாதாந்திர விலை உயர்வு மார்ச்சில் பதிவானது.

- தெற்கு ஈராக்கின் மூன்று பெரிய எண்ணெய் வயல்களின் உற்பத்தி மார்ச் 8 அன்று 70% குறைந்தது (நாளுக்கு 43 லட்சத்திலிருந்து 13 லட்சம் பீப்பாய்). மார்ச் 13 அன்று சவுதி அரேபியா உற்பத்தியை 20% குறைத்தது. மார்ச் 15க்குள் வளைகுடா ஏற்றுமதி நாளுக்கு சுமார் 2.5 கோடி பீப்பாயிலிருந்து சுமார் 1 கோடியாகச் சரிந்தது.

- மார்ச் 11 அன்று சர்வதேச எரிசக்தி முகமையின் 32 உறுப்பு நாடுகளும் ஒருமனதாக 40 கோடி பீப்பாய் அவசரக் கையிருப்பை வெளியிட ஒப்புக்கொண்டன. இது உலகின் சுமார் நான்கு நாள் நுகர்வுக்குச் சமம்.

ராஜதந்திரம்

மார்ச் 15 அன்று ட்ரம்ப், ஜலசந்தியைத் திறக்க நேட்டோ நாடுகளும் சீனாவும் உதவ வேண்டும் என்று கோரினார்; பல நாடுகள் ராணுவ ஈடுபாட்டை மறுத்தன. மார்ச் 19 அன்று பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, பிரிட்டன், ஜப்பான் ஆகியவை ஜலசந்தியைத் திறக்கும் முயற்சிகளில் பங்கேற்கத் தயார் என்று கூட்டு அறிக்கை வெளியிட்டன. ஆனால் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களின் கூட்டத்தில் ஒருமித்த முடிவு எட்டப்படவில்லை. மார்ச் 22 அன்று ஈரான் 48 மணி நேரத்தில் ஜலசந்தியைத் திறக்காவிட்டால் அதன் மின் நிலையங்களை அழிப்பதாக ட்ரம்ப் மிரட்டினார்; மறுநாள் "ஆக்கபூர்வமான உரையாடல்" எனக் கூறி அதைத் தள்ளிவைத்தார். ஈரான் பேச்சுவார்த்தைகளையே மறுத்தது.

ஏப்ரல்: போர்நிறுத்தம், தோல்வி, "இரட்டை முற்றுகை"

ஏப்ரல் 4 அன்று ட்ரம்ப் மீண்டும் 48 மணி நேர இறுதி எச்சரிக்கை விடுத்து, பின்னர் அதை ஏப்ரல் 7 வரை நீட்டித்தார். ஏப்ரல் 7 அன்று ஜலசந்தியின் பாதுகாப்பை உறுதி செய்யக் கோரி பஹ்ரைன் ஐ.நா. பாதுகாப்பு சபையில் கொண்டுவந்த தீர்மானத்தை ரஷ்யாவும் சீனாவும் வீட்டோ செய்தன; அது ஈரானுக்கு எதிரான சார்புடையது என்பது அவற்றின் வாதம்.

ஏப்ரல் 8 அன்று தற்காலிகப் போர்நிறுத்தம் எட்டப்பட்டது; அதில் ஜலசந்தி மீண்டும் திறக்கப்படுவதும் அடங்கியிருந்தது. ஆனால் ஏப்ரல் 9 அன்று அது நடைமுறைக்கு வந்ததற்கான அறிகுறி இல்லை என்று செய்திகள் கூறின. ADNOC தலைமை நிர்வாகி சுல்தான் அல் ஜாபர், ஈரான் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதால் ஜலசந்தி திறக்கவில்லை என்றும், 230 எண்ணெய் ஏற்றிய டேங்கர்கள் வளைகுடாவுக்குள் காத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

ஏப்ரல் 11 அன்று அமெரிக்கக் கடற்படை கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையைத் தொடங்கியது; போர் தொடங்கிய பிறகு முதல்முறையாக அமெரிக்க நாசகாரிக் கப்பல்கள் ஜலசந்திக்குள் நுழைந்தன. ஏப்ரல் 12 அன்று இஸ்லாமாபாத் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததாகத் துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் அறிவித்தார். மறுநாள் (ஏப்ரல் 13) அமெரிக்கா ஈரானியத் துறைமுகங்கள் மீது கடல் முற்றுகையைத் தொடங்கியது. இதனால் அமெரிக்கா ஈரானையும், ஈரான் வளைகுடாவையும் முற்றுகையிடும் "இரட்டை முற்றுகை" உருவானது. அமெரிக்க முற்றுகை ஈரானியத் துறைமுகங்களுக்கு மட்டுமே ஈரான் அல்லாத துறைமுகங்களுக்கான போக்குவரத்தைத் தடுக்காது என்றும் CENTCOM விளக்கியது.

ஏப்ரல் 17 அன்று லெபனான் போர்நிறுத்தத்தைக் காரணம் காட்டி ஜலசந்தி அனைத்துக் கப்பல்களுக்கும் திறந்ததாக அராக்சி அறிவித்தார்; எண்ணெய் விலை கடுமையாகச் சரிந்தது. ஆனால் அமெரிக்க முற்றுகை நீடித்ததால் ஏப்ரல் 18 அன்று ஈரான் மீண்டும் மூடியது. இடைப்பட்ட சிறு இடைவெளியில் ஆறு பயணிகள் கப்பல்கள் வெளியேறின; ஆனால் அன்றே இந்தியக் கொடியுடைய இரண்டு கப்பல்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாயின. ஏப்ரல் 22 அன்று ஈரானிய துப்பாக்கிப் படகுகள் ஏற்கெனவே அனுமதி அளித்திருந்த "எபமினோண்டாஸ்" கப்பலைத் தாக்கி, அதையும் "MSC பிரான்செஸ்கா" கப்பலையும் கைப்பற்றின.

அமெரிக்கத் தரப்பிலும் முற்றுகை தீவிரமானது. ஏப்ரல் 19 முதல் ஈரானுடன் தொடர்புடைய பல கப்பல்கள் இந்தியப் பெருங்கடல், மலேசியக் கடல் உட்பட பல இடங்களில் மறிக்கப்பட்டுக் கைப்பற்றப்பட்டன. ஏப்ரல் 21 அன்று சர்வதேசக் கடல்சார் அமைப்பு (IMO) சுமார் 20,000 மாலுமிகளும் 2,000 கப்பல்களும் வளைகுடாவில் சிக்கியிருப்பதாகத் தெரிவித்தது. ஏப்ரல் 22-23 அன்று பிரிட்டன் 50 நாடுகளின் மாநாட்டை நடத்தியது. ஏப்ரல் 23 அன்று கண்ணிவெடி பதிக்கும் ஈரானியப் படகுகளை அழிக்க ட்ரம்ப் கடற்படைக்கு உத்தரவிட்டார்.

(தொடர்ச்சி 16 பக்கம்)

(15 பக்கத் தொடர்ச்சி)

உலக வர்த்தகத் தொடர்புகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஹோர்மூஸ் ஜலசந்தி நெருக்கடி 2026

மே: "திட்ட சுதந்திரம்", ஈரானின் அதிகார அமைப்பு

மே 3-5 தேதிகளில் தாக்குதல்கள் மீண்டும் தீவிரமடைந்தன. அபுதாபி தேசிய எண்ணெய் நிறுவனத்தின் (ADNOC) "பராக்கா" டேங்கர் ட்ரோன்களால் தாக்கப்பட்டது; தென் கொரிய நிறுவனம் HMM-ன் "HMM நாமு" கப்பல் வெடிப்பில் தீப்பற்றியது; பிரெஞ்சு CMA CGM-ன் ஒரு கொள்கலன் கப்பல் வீசுகணையால் தாக்கப்பட்டு எட்டு ஊழியர்கள் காயமடைந்தனர். மே 4 அன்று ட்ரம்ப் "ஆபரேஷன் ப்ராஜெக்ட் ∴ப்ரீடம்" என்ற பெயரில் வளைகுடாவிலிருந்து வணிகக் கப்பல்களை அமெரிக்கக் கடற்படைப் பாதுகாப்புடன் வெளியேற்றும் நடவடிக்கையைத் தொடங்கினார். இது போர்நிறுத்த மீறல் என ஈரான் எச்சரித்தது. இரண்டே நாட்களில், மே 6 அன்று, ஒப்பந்தம் நோக்கி "பெரும் முன்னேற்றம்" இருப்பதாகக் கூறி அவர் அதை நிறுத்தி வைத்தார்.

மே 5 அன்று ஈரான் "பாரசீக வளைகுடா ஜலசந்தி ஆணையம்" (Persian Gulf Strait Authority) என்ற அமைப்பை உருவாக்கியது. இது கப்பல் போக்குவரத்துக்கு அனுமதி வழங்கும் அரசு அமைப்பு. இதுவே போரின் இயல்பு மாறத் தொடங்கிய முக்கியத் திருப்பம்: வெறும் தடுப்பிலிருந்து "அனுமதி-கட்டண" முறையாக்கத்துக்கு. மே 12 அன்று IRGC கடற்படை, ஜலசந்தி என்பது இனி ஹோர்மூஸ் மற்றும் ஹெங்காம் தீவுகளைச் சுற்றிய குறுகிய வழி அல்ல என்றும், ஜாஸ்க் துறைமுகம் முதல் சிரிக் தீவு வரை நீளும் "பரந்த செயல்பாட்டுப் பகுதி" என்றும் மறுவரையறை செய்தது.

மே 7 அன்று சீன உரிமையுள்ள ஒரு இரசாயன டேங்கர் (JV Innovation) தாக்கப்பட்டது குறித்து Caixin செய்தி வெளியிட்டது; சீனக் கப்பல் குறிவைக்கப்பட்டது இதுவே முதல் முறை. மே 8 அன்று ஈரான் "Ocean Koi" டேங்கரைக் கைப்பற்றியது; மே 13 அன்று கால்நடைகளை ஏற்றிச் சென்ற இந்தியக் கொடியுடைய "Haji Ali" கப்பல் தாக்கப்பட்டு மூழ்கியது (14 பணியாளர்களை ஓமான் கடலோரக் காவல்படை மீட்டது). மே 11 அன்று சவுதி அராம்கோ தலைவர் அமின் நாசர், 600-க்கு மேற்பட்ட கப்பல்கள் வளைகுடாவுக்குள் சிக்கியுள்ளதாகவும், மேலும் 240 கப்பல்கள் வெளிப்பக்கம் காத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

மே 28 அன்று ஈரானும் ஓமானும் ஜலசந்தி மேற்பார்வையைப் பகிரக்கூடும் என்ற தகவல்களை ட்ரம்ப் நிராகரித்தார்; ஓமான் கட்டுப்பாட்டை மீறினால் கடும் விளைவுகள் ஏற்படும் என எச்சரித்தார். கட்டண முறைக்கு ஓமான் உதவினால் தடைகள் விதிக்கப்படும் என்று நிதியமைச்சர் பெசன்ட் கூறினார். ஈரான் இதை "மிரட்டல்" என்று கண்டித்தது. அமெரிக்க முற்றுகை ஏப்ரல் 13 முதல் மே 29 வரை நீடித்ததாகத் தொகுப்புகள் கூறுகின்றன.

மே மாதத்தின் பொருளாதார அறிகுறி: மே முதல் வாரத்திற்குள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் எரிபொருள் இறக்குமதிக்காக கூடுதலாக 3,000 கோடி யூரோவுக்கு மேல் செலவிட்டதாக ஆணையர் டான் யார்கென்சன் தெரிவித்தார்; ஆனால் கிடைத்த எரிசக்தியின் அளவு அதிகரிக்கவில்லை. ஏப்ரல் இறுதியில் ஆணையத் தலைவர் வான் டெர் லேயன் இந்தப் போரால் ஒன்றியத்துக்கு நாளொன்றுக்கு சுமார் 50 கோடி யூரோ இழப்பு என மதிப்பிட்டார். நியூயார்க் டைம்ஸ் பகுப்பாய்வின்படி, போர் தொடங்கியது முதல் மே 8 வரை மிகப்பெரிய பயனாளிகள் அமெரிக்கா (எரிபொருள் ஏற்றுமதி வருவாய் சுமார் 5,000 கோடி டாலர் உயர்வு) மற்றும் ரஷ்யா (1,500 கோடி டாலருக்கு மேல்).

ஜூன்: புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் மீண்டும் மூடல்

முற்றுகையின்போது அமெரிக்கா ஈரானுடன் தொடர்புடைய கப்பல்களைத் தடுத்தது. மே 30 முதல் ஜூன் 10 வரை ஓமான் வளைகுடாவில் "Lian Star", "Marivex", "Settebello", "Jalveer" ஆகிய கப்பல்கள் அமெரிக்க விமானங்களால் முடக்கப்பட்டன. இவற்றில் "Settebello" தாக்குதலில் மூன்று இந்திய மாலுமிகள் உயிரிழந்தனர். இதற்குப் பதிலடியாகவே ஜூன் 1 அன்று ஈராக்கின் உம் காஸ்ர் துறைமுகத்தில் "MSC Sariska V" கப்பலைத் தாக்கியதாக IRGC கூறியது.

ஜூன் 17 அன்று ட்ரம்பும் ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியானும் இஸ்லாமாபாத் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில்கையெழுத்திட்டனர். போரையும் இரு தரப்பு முற்றுகைகளையும் முடிப்பதே இதன் நோக்கம். ஜூன் 18 அன்று மத்தியஸ்தர் பாகிஸ்தான், ஈரான் ஜலசந்தியை உடனடியாகத் திறக்கும் என்றும் அமெரிக்க முற்றுகை நீங்கும் என்றும் அறிவித்தது. ஜூன் 19 அன்று இஸ்ரேல்-ஹிஸ்புல்லா போர்நிறுத்தத்தையும் ட்ரம்ப் அறிவித்தார். ஆனால் தெற்கு லெபனானில் இஸ்ரேலிய தாக்குதல்கள் தொடர்ந்ததால், ஜூன் 20 அன்று ஈரான் ஜலசந்தியை மீண்டும் மூடியதாகக் கூறியது; இஸ்ரேலிய நடவடிக்கை ஒப்பந்த மீறல் என்ற ஈரானின் கூற்றை அமெரிக்க இராணுவம் மறுத்தது.

ஜூன் 25 அன்று சிங்கப்பூர்க் கொடியுடைய "Ever Lovely" கப்பல் ஓமான் கடற்கரைக்கு அருகே தாக்கப்பட்டதால், 11,000 மாலுமிகளை வெளியேற்றும் IMO திட்டம் இடைநிறுத்தப்பட்டது. ஜூன் 26 அன்று CENTCOM பதிலடியாக கேஷ்ம் தீவு உட்பட ஈரானின் தென் கடற்கரையில் ஏவுகணை, ட்ரோன் மற்றும் ரேடார் தளங்களைத் தாக்கியது. ஜூன் 27 அன்று அமெரிக்கக் கடற்படை மேற்பார்வையிலான கூட்டுக் கடல்சார் தகவல் மையம் (JMIC) ஓமான் பக்கம் ஒரு அகலப்படுத்தப்பட்ட வழியை அறிவித்தது; இது ஈரானின் கட்டுப்பாட்டுக்கு நேரடிச் சவால். அதே நாள் "Kiku" டேங்கர் ட்ரோனால் தாக்கப்பட்டது; அமெரிக்கா மீண்டும் தாக்குதல்களை நடத்தியது. ஜூன் மாதமே ஓமான், கப்பல் நிறுவனங்கள் சேவைக் கட்டணம் செலுத்தும் திட்டத்தை முன்மொழிந்ததாக நியூயார்க் டைம்ஸ் தெரிவித்தது.

ஜூலை: ஒப்பந்தம் உடைகிறது

ஜூலை 1 அன்று பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை சுமார் 71.57 டாலராகக் குறைந்தது (மார்ச் 31 உச்ச முடிவு 118.35 டாலரிலிருந்து). அதாவது ஒப்பந்தம் மீதான நம்பிக்கையைச் சந்தை விலையில் காட்டியது. ஆனால் ஜூலை 6-7 தேதிக-ளில் கத்தாரின் LNG டேங்கர் "Al Rekayyat" மற்றும் சவுதியின் "Wedyan" தாக்கப்பட்டன் கத்தார் ஈரானைக் குற்றம் சாட்டியது. இதையடுத்து ஒப்பந்தத்தின் கீழ் நீக்கப்பட்டிருந்த ஈரானிய எண்ணெய் ஏற்றுமதித் தடைகளை அமெரிக்க நிதித்துறை மீண்டும் விதித்தது. ஜூலை 8 அன்று தற்காலிக போர்நிறுத்தம் முறிந்தது.

ஜூலை 12 அன்று IRGC ஜலசந்தி மூடப்பட்டதாக அறிவித்தது; "GFS Galaxy" கப்பல் தாக்கப்பட்டு ஒரு இந்தியப் பணியாளர் உயிரிழந்தார். அமெரிக்கா கேஷ்ம், ஜாஸ்க் உள்ளிட்ட இடங்களில் ஏவுகணை, வான்பாதுகாப்பு மற்றும் வேகப் படகுத் தளங்களைத் தாக்கியது. ஜூலை 14 அன்று மூன்று டேங்கர்கள் தாக்கப்பட்டன ("Stolt Magnesium", "Mombasa B", "Al Bahyah"); "தடைசெய்யப்பட்ட, கண்ணிவெடி பதிக்கப்பட்ட வழியில்" சென்றதால் தாக்கியதாக IRGC பொறுப்பேற்றது. அதே காலத்தில் அமெரிக்க முற்றுகை மீண்டும் அமலுக்கு வந்தது. ஜூலை 15 முதல் 24 வரை அமெரிக்கா ஹெல்∴பயர் ஏவுகணைகளால் மேலும் டேங்கர்களை முடக்கியது.

ஜூலை 20 அன்று கிரேக்க டேங்கர்கள் "Kavomaleas", "Acheloos" மற்றும் குவைத் டேங்கர் "Kaifan" தாக்கப்பட்டன் "Kavomaleas" ஈரானிய நீருக்கு இழுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஜூலை 31 அன்று கத்தார் LNG ஏற்றிய "Gaslog Shanghai" முடக்கப்பட்டது. ஜூலை 23 அன்று பிரெண்ட் மீண்டும் சுமார் 100.69 டாலரைத் தொட்டது.

ஜூலை மாதத்தின் முக்கியக் கற்றல்: ஒப்பந்தம் கையெழுத்தானபோதும் மூன்று விஷயங்கள் தீர்க்கப்படவில்லை: யார் கப்பல்களுக்கு "அனுமதி" அளிப்பது (ஈரானின் ஆணையமா, சர்வதேச விதிகளா), அமெரிக்க முற்றுகை நிறுத்தத்துக்கான காலக்கெடு, லெபன-ான் முன்னணியின் தொடர்பு. ஒரு முன்னணியில் நடந்த நிகழ்வு (லெபனான்) ஜலசந்தியின் நிலை-யையே மாற்றியது என்பது இந்த நெருக்கடியின் முக்கிய இணைப்பு.

ஆகஸ்ட்: தேய்மானப் போர்

ஆகஸ்ட் 3 அன்று கிரேக்க உரிமையுள்ள "Minoan Pioneer" கப்பலின் எஞ்சின் அறை தாக்கப்பட்டு மின்தடை ஏற்பட்டது; ஒரு பொறியா-ளர் காணாமல் போனார். அந்தக் கப்பலிலிருந்து கசிந்த எண்ணெய்ப் படலம் 10 கி.மீ.க்கு மேல் பரவி, ஆகஸ்ட் 10-க்குள் கேஷ்ம் தீவை அடைந்தது. இது போரின் சூழலியல் விலையின் தெளிவான எடுத்துக்காட்டு. ஆகஸ்ட் தொடக்கத்தில் ட்ரம்ப் ஜலசந்தி மீது தனக்கு "முழுக் கட்டுப்பாடு" இருப்பதாகக் கூறினார்; ஈரான் அதை மறுத்து, தனது நிபந்தனைகளை அமெரிக்கா ஏற்றால் மட்டுமே ஜலசந்தி அணுகக்கூடியதாகும் என்றது.

ஆகஸ்ட் 8 முதல் 14 வரை ADNOC-க்குச் சொந்தமான பல டேங்கர்கள் ஏவுகணை, ட்ரோன்களால் தாக்கப்பட்டன; ஐக்கிய அரபு அமீரகம் ஈரானைக் குற்றம் சாட்டியது. ஆகஸ்ட் 12 அன்று அமெரிக்க MH-60 ஹெலிகாப்டர் ஒரு பனாமாக் கப்பலை ஹெல்∴பயர் ஏவுகணைகளால் தாக்கியது (ஈரானிய முற்றுகையை மீறியதாகக் கூறி); அதே நேரத்தில் ஹூதிகள் பாப் அல்-மந்தப் நீரிணையில் சவுதிக் கப்பலைத் தாக்கினர். ஆகஸ்ட் 18 அன்று "Minoan Dignity" தாக்கப்பட்டு தலைமைப் பொறியாளர் உயிரிழந்தார்; ஹெலிகாப்டர் மீட்பு முயற்சிகள் தோல்வியடைந்து ஓமான் கடலோரக் காவல்படை உதவியது.

ஆகஸ்ட் 25 அன்று, அமெரிக்கக் கடற்படை ஜலசந்தியின் போக்குவரத்துப் பிரிப்புத் திட்ட (Traffic Separation Scheme) வழியில் கண்ணிவெடிகளை அகற்றியதாக அமெரிக்க அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்; நீருக்கடியிலான ட்ரோன்கள் 100-க்கு மேற்பட்ட சந்தேகக் கண்ணிவெடிகளைக் கண்டறிந்தன, அவற்றைத் தனியார் ஒப்பந்ததாரர்கள் கையாண்டனர். அதே நாளில் ஒரு கடல்சார் அமைப்பு, ஆறு மாதப் போரில் 68 சம்பவங்களில் 20 பேர் உயிரிழந்ததாகத் தெரிவித்தது. ஆகஸ்ட் 30 அன்று ஈரான் கண்ணிவெடி பதிக்க ஏவுகணைகளை நிறுத்தியதாகக் கூறி அமெரிக்கா லாராக் தீவு இராணுவ நிலைகளைத் தாக்கியது; பதிலடியாக IRGC ஜோர்டானிலுள்ள அமெரிக்கத் தளங்களைத் தாக்கியது. ஆகஸ்ட் 31 அன்று "தடைசெய்யப்பட்ட தெற்கு வழியில்" ஒரு பெரிய டேங்கர் இரண்டு கண்ணிவெடிகளில் மோதி முடங்கியதாக IRGC கூறியது.

செப்டம்பர்: நேரடி மோதலின் விளிம்பு

செப்டம்பர் 5 அன்று மோதல் புதிய கட்டத்தை எட்டியது. அமெரிக்கா கார்க் தீவு அருகே ஒரு டேங்கர் உட்பட மூன்று ஈரானியக் கப்பல்களைத் தாக்கியது; ஈரான் ஒரு அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பலையும் ஒரு நாசகாரியையும் பாலிஸ்டிக் ஏவுகணைகளால் குறிவைத்ததாகக் கூறப்பட்டது; "அனுமதியற்ற வழியில்" சென்ற மூன்று டேங்கர்களைத் தாக்கியதாகவும் ஈரான் அறிவித்தது. அதே நாள் ஈரான் உயர் தேசியப் பாதுகாப்புச் சபையின் தலைவர் மொஹ்சென் ரெஸாயீ, அமெரிக்க முற்றுகைக் கோட்டிலிருந்து ஏற்றுமதித் துறைமுகங்கள் வரை ஒரு "தடைசெய்யப்பட்ட மண்டலம்" உருவாக்கப்படும் என்று அறிவித்தார். இதே காலகட்டத்தில் நாளொன்றுக்குக் கடக்கும் சரக்குக் கப்பல்கள் சுமார் 10-ஆகக் குறைந்தன.

Kpler தரவின்படி, ஜூலை 6 முதல் செப்டம்பர் தொடக்கம் வரை ஜலசந்தியில் 27 ஏவுகணைத் தாக்குதல்கள் நடந்தன; செப்டம்பர் தொடக்கத்திலிருந்து பெரிய கப்பல்கள் எதுவும் கடக்கவில்லை என்றும் அது தெரிவித்தது. செப்டம்பர் 9 அன்று "Hercules Star" டேங்கர் துபாய் அருகே தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்தார், ஒருவர் காணாமல் போனார். செப்டம்பர் 13 அன்று "El Gaia" டேங்கர் தாக்கப்பட்டது: அது கண்ணிவெடியில் மோதியதாக IRGC கூறியது, ஈரானிய ட்ரோன் தாக்கியதாக அமெரிக்கா கூறியது இரண்டு பணியாளர்கள் காணவில்லை. இந்த முரண்பாடு, சம்பவங்களின் காரணம் பற்றி இரு தரப்பும் வெவ்வேறு கதைகளைச் சொல்லும் போக்கின் உதாரணம்.

அக்டோபர்: மிக மோசமான அலை

Kpler கணக்குப்படி செப்டம்பர் 28 முதல் அக்டோபர் 4 வரை 10 டேங்கர்கள் தாக்கப்பட்டன; அக்டோபர் 5 அன்று மேலும் ஒன்று. இது போர் தொடங்கியதிலிருந்து மிக மோசமான தாக்குதல் அலை என Al Jazeera குறிப்பிட்டது. அக்டோபர் 1 அன்று குவைத் VLCC "Mersin Prosperity" ஓமான் கடற்கரைக்கு அருகே தாக்கப்பட்டு தீப்பிடித்தது. ஐஆழு கணக்குப்படி அக்டோபர் 1 முதல் அக்டோபர் 6 வரை ஒன்பது கப்பல்கள் தாக்கப்பட்டன; அக்டோபர் 7 அன்று கத்தார் அருகே மேலும் ஒரு தாக்குதல் நடந்தது, இது செப்டம்பர் 9-க்குப் பிறகு ஹோர்மூஸ் பகுதிக்கு வெளியே நடந்த முதல் தாக்குதல். USNI News ஒரு வாரத்தில் 12 தாக்குதல்கள் நடந்ததாகவும், இது போர் தொடங்கியதிலிருந்து அதிகபட்ச வாரத் தொகை என்றும் தெரிவித்தது. அக்டோபர் 11 அன்று ஒரே நாளில் ஆறு கப்பல்கள் தாக்கப்பட்டன.

(தொடர்ச்சி 17 பக்கம்)

(16 பக்கத் தொடர்ச்சி)

உலக வர்த்தகத் தொடர்புகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஹோர்மூஸ் ஜலசந்தி நெருக்கடி 2026

UKMTO பதிவின்படி அக்டோபர் 6 முதல் 14 வரை 15 தாக்குதல்கள் நடந்தன; அவற்றில் 11 கடைசி நான்கு நாட்களில். அக்டோபர் 16-ல் முடிந்த வாரத்தில் குறைந்தது 12 கப்பல்கள் தாக்கப்பட்டன. அதே நேரத்தில் ஈரானிய அதிகாரிகள், அமெரிக்க ஆதரவுடன் இயங்கும் "ட்டில் முறை" (வளைகுடா நாடுகளின் ஏற்றுமதிக்கு உதவும் பாதுகாப்புப் பயணத் தொகுப்பு) தடைபடும் என்று சமிக்ஞை செய்தனர்.

அக்டோபர் 17 அன்று CENTCOM தலைவர் பிராட் கூப்பர், கடந்த வாரம் 400 கப்பல்களும் 10 கோடி பீப்பாய் எண்ணெயும் கடந்ததாகக் கூறினார். அதே வாரம் இரண்டு கப்பல்கள் கண்ணிவெடிகளில் மோதியதாக IRGC தெரிவித்தது; இரு தரப்பும் முரண்பட்ட கூற்றுகளை வெளியிட்டன. அக்டோபர் 20 அன்று "சட்டவிரோதம்" என்று ஈரான் கருதும் தெற்குப் பாதையில் இரண்டு டேங்கர்களை கண்ணிவெடிகள் முடக்கியதாக IRGC அறிவித்தது; அமெரிக்க வெளியுறவுச் செயலர் ரூபியோ இதை இரண்டாம் உலகப் போர்க்கால U-படகுத் தந்திரங்களுடன் ஒப்பிட்டுக் கண்டித்தார்.

போர் நான்கு கட்டங்களாக எவ்வாறு மாறியது?

கட்டம் 1 (பிப்ரவரி 28 - ஏப்ரல் 7): முழு முடக்கம். ஈரானின் கருவி தடையே: தாக்குதல், கண்ணிவெடி, காப்பீட்டு அச்சம். அமெரிக்காவின் கருவி இறுதி எச்சரிக்கைகள். உலகின் கவனம் எண்ணெய் விலையிலும் தேர்ந்தெடுத்த அனுமதிகளிலும் இருந்தது.

கட்டம் 2 (ஏப்ரல் 8 - ஜூன் 16): "போர்நிறுத்தத்தில் போர்". காகிதத்தில் போர்நிறுத்தம் நடைமுறையில் இரட்டை முற்றுகை. ஈரான் ஜலசந்தி ஆணையத்தை உருவாக்கி, கட்டண மற்றும் அனுமதி முறையைச் சட்டவடிவில் கொண்டுவர முயன்றது. அமெரிக்கா கடலில் ஈரானியக் கப்பல்களைக் கைப்பற்றியது.

கட்டம் 3 (ஜூன் 17 - ஜூலை 8): ஒப்பந்தச் சாளரம். புரிந்துணர்வு ஒப்பந்தம், எண்ணெய் விலைச் சரிவு, பிறகு லெபனான் மற்றும் டேங்கர் தாக்குதல்களால் முறிவு.

கட்டம் 4 (ஜூலை 8 - இன்று): தேய்மானப் போர். இப்போது மோதல் "யார் எந்த வழியில் செல்லலாம்" என்ற கேள்வியைச் சுற்றியது. ஈரான் தனது "அனுமதிக்கப்பட்ட" வழியை விட்டு விலகிய கப்பல்களை ஆபத்தாகக் கருதுகிறது; அமெரிக்கா ஓமான் பக்க வழியில் தனது ஆதரவுடன் கப்பல்களை அனுப்பி, கண்ணிவெடிகளை அகற்றி, தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கிறது. தாக்குதல்கள் புவியியல் ரீதியாகவும் விரிந்தன: குவைத் (மார்ச் 4), பாஸ்ரா (மார்ச் 11), கத்தார் கடல் (அக்டோபர் 7), ஜோர்டான் தளங்கள் (ஆகஸ்ட் 30).

தாக்கங்களும் பாதிப்புக்களும்
எரிசக்தி மற்றும் விலை

போருக்கு முன் ஜலசந்தி வழியாகச் சென்ற எண்ணெயில் 90%-க்கும் மேல் தடைபட்டதாகக் கணக்கிடப்படுகிறது (சுமார் 1 கோடி பீப்பாய்/நாள் உற்பத்தி). 1970-களுக்குப் பிறகு உலக எரிசக்தி விநியோகத்தில் மிகப்பெரிய தடங்கல் என்று பகுப்பாய்வாளர்கள் விவரிக்கின்றனர். மார்ச் மாதம் எண்ணெய் விலையில் வரலாற்றில் மிகப்பெரிய மாதாந்திர உயர்வு பதிவானது. பிரெண்ட் மார்ச் 8-ல் 100 டாலரைத் தாண்டி உச்சமாக 126 டாலரை எட்டியது; ஜூலை 1-ல் சுமார் 71.57 டாலருக்குச் சரிந்து, ஜூலை 23-ல் மீண்டும் சுமார் 100.69 டாலருக்கு உயர்ந்தது. அதாவது விலை, சமாதான நம்பிக்கைக்கும் முறிவுக்கும் அலைபாயும் ஒரு "அரசியல் அளவுகோல்" ஆகிவிட்டது. அக்டோபர் தொடக்கத்தில் ஜலசந்தி வழி ஓட்டம் போருக்கு முந்தைய அளவில் (17.1 மில்லியன் பீப்பாய்/நாள்) சுமார் 68% (11.6 மில்லியன்) என முடநச கூறியது.

எரிவாயு பக்கம்: கத்தார் எரிசக்தி நிறுவனம் மார்ச் 2-ல் உற்பத்தியை நிறுத்தி மார்ச் 4-ல் "போர்ஸ் மஜூர்" அறிவித்தது. ஐரோப்பாவின் LNG தேவையில் 12-14% கத்தார் வழியாக வருகிறது. ஐரோப்பிய எரிவாயு விலை ஒரே வாரத்தில் மெகாவாட் மணிக்கு சுமார் 30 யூரோவிலிருந்து 60 யூரோவுக்கு மேல் சென்றது. இந்தச் சூழலில் ஜனவரி-ஏப்ரலில் ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்யாவின் யமால் LNG-யை சாதனை அளவில் (மதிப்பு சுமார் 300 கோடி பவுண்டு) இறக்குமதி செய்தது என்று ஆய்வு நிறுவனங்கள் கூறின.

பிற பொருட்கள்

- உரம்: உலக உரப் பரிவர்த்தனையில் சுமார் மூன்றில் ஒரு பங்கு ஜலசந்தி வழியாகச் செல்கிறது; மார்ச் இறுதிக்குள் யூரியா விலை சுமார் 50% உயர்ந்தது. எண்ணெயைப் போல உரத்துக்குச் சர்வதேச அவசரக் கையிருப்பு இல்லை; எனவே 2027 வரை உணவு விலைகளில் தாக்கம் ஏற்படலாம் என்ற எச்சரிக்கை உள்ளது.

- ஹீலியம்: உலக உற்பத்தியில் சுமார் மூன்றில் ஒரு பங்கு பாதிக்கப்பட்டு, ஏப்ரல் தொடக்கத்தில் விநியோகம் ரேஷன் முறையில் வழங்கப்பட்டது.

- கந்தகம் மற்றும் அலுமினியம்: கந்தக விநியோகத் தடையால் சீனா கந்தக அமில ஏற்றுமதியைத் தடை செய்தது; இது சிலியின் செம்புச் சுரங்கங்களைப் பாதித்தது. அலுமினிய விலை சற்று உயர்ந்தது.

பொருளாதாரம்: யார் இழந்தார்கள், யார் பெற்றார்கள்

நியூயார்க் டைம்ஸ் பகுப்பாய்வின்படி, போர் தொடங்கியது முதல் மே 8 வரை அமெரிக்கா (சுமார் 5,000 கோடி டாலர் வருவாய் உயர்வு) மற்றும் ரஷ்யா (1,500 கோடி டாலருக்கு மேல்) பெரிய பயனாளிகள். ஜலசந்தியைத் தவிர்க்க முடிந்த சவுதி அரேபியா (செங்கடல் குழாய் வழியாக) மற்றும் ஓமான் வருவாயை உயர்த்தின; தவிர்க்க முடியாத ஈராக், குவைத், கத்தார், ஐக்கிய அரபு அமீரகம் வருவாயை இழந்தன. சவுதி அரேபியா மார்ச் 13-ல் உற்பத்தியை 20% குறைத்தது தெற்கு ஈராக் வயல்களின் உற்பத்தி மார்ச் 8 வரை 70% சரிந்தது. ஐரோப்பிய ஒன்றியம் மே முதல் வாரத்துக்குள் கூடுதல் இறக்குமதிச் செலவாக 3,000 கோடி யூரோவுக்கு மேல் செலவிட்டது.

பணவீக்கம் குறித்து எதிர்பார்ப்புகள் மாறுபடுகின்றன. OECD மார்ச்சில் அமெரிக்கப் பணவீக்கம் 2026-ல் 4.2% ஆகும் என (முந்தைய கணிப்பை விட 1.2 புள்ளி அதிகம்) மதிப்பிட்டது. ஆனால் டாலஸ் மத்திய வங்கி ஆய்வுக் கட்டுரை, கால் ஆண்டு மூடலுக்கு 0.6 புள்ளி உயர்வு மட்டுமே என்று கணித்தது. ஜூலையில் IMF உலக வளர்ச்சியை 2026-க்கு 3%, 2027-க்கு 3.4% எனத் திருத்தியது; AI சார்ந்த தேவை எண்ணெய் அதிர்ச்சியின் எதிர்மறை விளைவை ஓரளவு ஈடுகட்டுவதாக அது கூறியது. WSJ கருத்துக்கணிப்பில் அமெரிக்க மந்தநிலை நிகழ்தகவு 33%-லிருந்து 25%-ஆகக் குறைந்தது; S&P 500 மார்ச் 30 முதல் ஜூலை 24 வரை சுமார் 17.3% உயர்ந்தது. அதாவது பெரிய பொருளாதாரங்கள் எதிர்பார்த்ததைவிட நிலைத்தன்மையுடன் தாக்குப்பிடித்தன; ஆனால் பாதிப்பு சமமாகப் பகிரப்படவில்லை.

கப்பல் போக்குவரத்து

போருக்கு முன் தினசரி சுமார் 90 போக்குவரத்துகள் இருந்த ஜலசந்தியில் கடக்கும் எண்ணிக்கை ஒற்றை இலக்கத்துக்கு வீழ்ந்ததாகக் கூறப்படுகிறது. துபாயின் ஜெபல் அலி துறைமுகம் 2026 இரண்டாம் காலாண்டில் 90.1% சரிவைச் சந்தித்தது; இந்தத் துறைமுகமும் அதன் சுதந்திர மண்டலமும் துபாய் GDP-யில் சுமார் மூன்றில் ஒரு பங்கு. DP World மாதம் சுமார் 10 கோடி டாலர் செலவழித்து 48 மணி நேரத்தில் மீண்டும் முழுத் திறனுக்கு வரத் தயார் நிலையில் வைத்துள்ளது; புஜைரா துறைமுகத்தில் புதிய முனையங்களையும் கட்டுகிறது. புஜைரா அல்லது கோர் .ப்கான் வழியாகச் சரக்கை நிலவழியாக மாற்றினால் செலவு ஹோர்மூஸ் வழியைவிட நான்கு முதல் ஐந்து மடங்கு. ஈதிகளின் செங்கடல் தாக்குதல்களால் சூயஸ் வழியும் தடைபட்டு, கப்பல்கள் ஆப்பிரிக்காவைச் சுற்றிச் சென்றன. பிப்ரவரி முதல் சுமார் 15,000 பயணிகளுடன் ஆறு பெரிய உல்லாசக் கப்பல்கள் வளைகுடாவில் சிக்கி, ஏப்ரல் 18-ன் சிறு இடைவெளியில் வெளியேறின.

மனித மற்றும் சூழல் விலை

ஆகஸ்ட் 25 நிலவரப்படி ஒரு கடல்சார் அமைப்பு 20 கப்பல் பணியாளர்கள் மற்றும் ஒரு துறைமுகத் தொழிலாளி உயிரிழந்ததாகவும், 35 பேர் காயமடைந்ததாகவும், ஒருவர் காணாமல் போனதாகவும் பதிவு செய்தது அதற்குப் பிந்தைய செப்டம்பர் சம்பவங்களிலும் உயிரிழப்புகள் மற்றும் காணாமல்போனவர்கள் பதிவாகியுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் இந்தியப் பணியாளர்கள் கணிசமாக உள்ளனர். ஏப்ரல் 21 அன்று IMO சுமார் 20,000 மாலுமிகள் வளைகுடாவில் சிக்கியிருப்பதாகத் தெரிவித்தது. சூழலியல் ரீதியாக குவைத் (மார்ச் 4) மற்றும் "Minoan Pioneer" (ஆகஸ்ட்) சம்பவங்களில் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டது.

புவிசார் அரசியல்

ஏப்ரல் 7 அன்று பாதுகாப்புச் சபையில் பஹ்ரைன் முன்மொழிந்த தீர்மானத்தை ரஷ்யாவும் சீனாவும் வீட்டோ செய்தன; அது ஈரானுக்கு எதிரான சார்புடையது என்பது அவற்றின் வாதம். ஐரோப்பா பிளவுபட்டது: பிரான்ஸ், பிரிட்டன் "தற்காப்பு" பல்தேசியப் பணிக்கு முயன்றன; ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின் உள்ளிட்ட பல நாடுகள் இராணுவ ஈடுபாட்டை மறுத்தன. இந்தியா தனது கடற்படையால் தன் கொடியுடைய கப்பல்களைப் பாதுகாத்தது ஈரான் இந்தியா, சீனா, ர்'யா, பாகிஸ்தான், ஈராக் கப்பல்களுக்குத் தேர்ந்தெடுத்த அனுமதி அளித்தது. அதாவது ஜலசந்தி ஒரு வர்த்தகப் பாதை மட்டுமல்ல, நட்பு-பகை வரிசையின் கருவியாகவும் மாறியது.

சர்ச்சைகள் மற்றும் தரவு முரண்பாடுகள்

- "யார் கட்டுப்படுத்துகிறார்கள்?" CENTCOM "அமெரிக்கப் படைகளும் கூட்டாளிகளும் தெளிவாகக் கட்டுப்படுத்துகின்றன" என்கிறது; IRGC பாதுகாப்பு அனுமதி தங்கள் ஆணையத்தின் வழியே மட்டுமே என்கிறது. இரு கூற்றுகளும் ஒரே நேரத்தில் உண்மையாக இருக்க முடியாது; கப்பல் உரிமையாளர்களின் முடிவுகள் இரண்டுக்கும் இடையே மாறுகின்றன.

- தரவு: செப்டம்பர் தொடக்கத்தில் பெரிய கப்பல்கள் கடக்கவில்லை என Kpler கூறியது; ஆனால் அக்டோபர் 8-ல் ஒரே நாளில் சுமார் 20.8 மில்லியன் பீப்பாய் கடந்ததாகவும் வாரச் சராசரி 11.6 மில்லியன் என்றும் வேறு Kpler புள்ளிவிவரங்கள் உள்ளன. இவை வெவ்வேறு காலப்பகுதிகள் மற்றும் அளவுகோல்கள்; முழுமையாக ஒத்துப்போகவில்லை என்பதை வாசகர் கவனிக்க வேண்டும்.

- யார் தாக்கினார்? பல சம்பவங்களில் "அறியப்படாத எறிபொருள்" என்றே பதிவாகிறது. சில தாக்குதல்களுக்கு IRGC பொறுப்பேற்கிறது; சிலவற்றுக்கு அமெரிக்கா அல்லது வளைகுடா நாடுகள் ஈரானைக் குற்றம் சாட்டுகின்றன. கண்ணிவெடியா ட்ரோனா என்ற முரண்பாடும் (எ.கா. El Gaia) உள்ளது.

- சட்ட விவாதம்: ஈரான் ஐ.நா. கடல் சட்ட ஒப்பந்தத்தில் (UNCLOS) கையெழுத்திட்டுள்ளது, ஆனால் ஒப்புதல் அளிக்கவில்லை; எனவே அது அதற்குக் கட்டுப்படாது என்ற வாதம் உள்ளது. மறுபுறம், கண்ணிவெடி பதிப்பது ஹேக் ஒப்பந்தம் VIII-ஐ மீறுவதாகச் சில சட்ட ஆய்வாளர்கள் கருதுகின்றனர்; கடந்து செல்லும் கப்பல்களிடம் சேவையின்றிக் கட்டணம் வசூலிப்பது தடை என்பதும் ஒரு கருத்து. ஈரான் தரப்பு, தனது இறையாண்மை, அமெரிக்க-இஸ்ரேலியத் தாக்குதல்கள் மற்றும் அமெரிக்க முற்றுகைக்கான பதிலடி என்ற வாதங்களை முன்வைக்கிறது. இந்தக் கட்டுரை தீர்ப்பு வழங்கவில்லை; இரு தரப்பு வாதங்களையும் பதிவு செய்கிறது.

எட்டு மாதங்களில் ஹோர்மூஸ் நெருக்கடி "ஒரு கடற்பாதை மூடல்" என்பதிலிருந்து "அந்தப் பாதையின் விதிகளை யார் எழுதுவது" என்ற போட்டியாக மாறியுள்ளது. ஈரான் முழு மூடலிலிருந்து அனுமதி-கட்டண முறைக்கும், பின்னர் வழித்தடக் கட்டுப்பாட்டுப் போருக்கும் நகர்ந்தது; அமெரிக்கா இறுதி எச்சரிக்கையிலிருந்து முற்றுகை, பாதுகாப்புப் பயணம், கண்ணிவெடி அகற்றல், தாக்குதல்கள் என நகர்ந்தது. உலகப் பொருளாதாரம் எதிர்பார்த்ததைவிட தாக்குதல்களினால் ஏற்பட்ட நஷ்டங்களைத் தாங்கிக் கொண்டாலும், உலகெங்கிலும் உள்ள கப்பல் நிறுவனங்களும் மாலுமிகளும் உர உற்பத்தியாளர்களும், ஹீலியம் உற்பத்தியாளர்களும், எரிவாயு உற்பத்தி செய்யும் நாடுகளும் அதிக விலையைச் செலுத்துகின்றன என்பதே உண்மையாகும்!



(14 பக்கத் தொடர்ச்சி)

அநுராதபுரத்திற்கு முதலில் வந்தவர் சிவனா...புத்தரா?

பௌத்தரான தாய்லாந்து பிரதிப் பிரதமரும் இந்தியாவின் இந்து மதத் துறவியும்

இதேவேளை இலங்கைக்கு வருகைத் தந்த பௌத்தரான தாய்லாந்து பிரதிப் பிரதமருக்கு இராஜதந்திர அடிப்படையில் வரவேற்பளிக்கப்படாது அவர் புறக்கணிக்கப்பட்டார். அதேவேளை இந்தியாவிலிருந்து இலங்கை வந்த இந்து மதத் துறவியை வெளிவிவகார அமைச்சர் சென்று வரவேற்றார். பௌத்த மதத்தை சேர்ந்த தாய்லாந்து பிரதிப் பிரமருக்கு அளிக்காத வரவேற்பை இந்துமத துறவிக்கு வழங்கியதன் மூலம் அநுரகுமார அரசாங்கம் பௌத்த மதத்தை அவமதித்து இந்து மதத்திற்கு முன்னுரிமையளிக்கின்றது என்ற குற்றச்சாட்டை சர்வஜன அதிகாரம் கட்சியின் தலைவரும் எம்.பி. யுமான திலித் ஜயவீர பாராளுமன்றத்தில் முன்வைக்க தயாசிறி ஜயசேகர உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அதற்கு ஆதரவாக குரல் எழுப்பி இந்து மதத்திற்கு, இந்து மதத் துறவிக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்தனர். இந்த இன, மத வசதிகளுடன் "தமிழ் தற்குறி"யான அர்ச்சுனா இராமநாதன் எம்.பி.யும் இணைந்து இந்து மதத்தை மிக மோசமாக விமர்சித்தான்.

அநுராதபுரம் பௌத்தர்களின் இதயமா?

அநுராதபுரம் என்பது இலங்கையின் பண்டைய தலை நகரங்களில் ஒன்றாக மட்டுமன்றி, பல்லாயிரம் ஆண்டுகள் பழமையான இந்து-பௌத்த கலாசாரக் கலப்பின் மையமாகவும் விளங்கிய ஒரு வரலாற்று சிறப்புமிக்க இடம். அநுராதபுரத்தில் இந்து மத வழிபாட்டுத் தலங்கள் சோழர் காலத்திற்கு முன்பிருந்தே (கி.மு. 4-ஆம் நூற்றாண்டு முதலே) நிலவி வந்ததை இலங்கையின் முதன்மை வரலாற்று நூலான "மகாவம்சம்" உறுதிப்படுத்துகிறது. கி.மு. 437 - 367 காலப்பகுதியில் பண்டு காபய மன்னனே அநுராதபுர நகரைத் திட்டமிட்டு நிர்மாணித்தவர். (பண்டு காபய என்று மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் இம்மன்னன் சிங்கள மன்னனாக மகாவம்சத்தில் சொல்லப்பட்டாலும், இவனது பெயர் "பண்டு கபாயன்" (பண்டு என்றால் "பழைய", கபாயன் என்றால் "சிவன்") என்றும் இது இந்துக்களின் பழம்பெரும் தெய்வமான "முந்துசிவன்" என்ற பெயரை ஒத்து உள்ளது என்றும், இதன்மூலம் இவன் ஒரு தமிழ் மன்னன் என்றும் வாதிடப்படுகிறது. இதே வாதம் இவனது பாட்டனான பண்டுவாசுதேவன் என்பவனுக்கும் முன்வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது) இந்த பண்டுகாபய மன்னன் சிவலிங்க வழிபாட்டிற்கான கட்டிடங்கள் பிராமணர்களுக்கான குடியிருப்புகள் மற்றும் காளி,சிவன் வழிபாட்டுத் தலங்களை நகரின் பல்வேறு பகுதிகளில் அமைத்துக் கொடுத்ததாக மகாவம்சத்தின் பத்தாம் அத்தியாயம் குறிப்பிடுகிறது. தேவநம்பியதீச மன்னன் காலத்தில் பௌத்தம் இலங்கைக்கு அறிமுகமாவதற்கு முன்பே, அநுராதபுரத்தில் சைவமும் வைணவமும் தழைத்தோங்கியிருந்தன.

அநுராதபுரத்தின் முதன்மையான வரலாற்று இந்து ஆலயங்களாக பஸ வக்குளம் சிவன் கோவில் உள்ளது அநுராதபுரத்தின் புராதன "அபயவாவி" (இன்றைய பஸவக்குளம்) குளக்கரையை ஒட்டி அமைந்துள்ள மிகவும் தொன்மையான சிவன் கோவில் இதுவாகும். கி.பி. 10 ஆம் நூற்றாண்டின் சோழர் ஆட்சிக்காலத்திலும் அதற்கு முந்தைய அநுராதபுர மன்னர்கள் காலத்திலும் இங்கு சிவலிங்க வழிபாடு சிறப்பாக நடைபெற்றுள்ளது. இந்த சிவன் கோயில் முற்றிலும் செதுக்கப்பட்ட உயர்தர கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. இது 5.55 மீற்றர் நீளமும் 13.20 மீற்றர் அகலமும் கொண்டது. ஒரு பாரம்பரிய இந்து ஆலயத்தின் கூறுகளான அந்தராளம், மண்டபம் மற்றும் கர்ப்பக்கிருகம் ஆகிய அமைப்புகளை இது கொண்டிருந்தது.தற்போது இக்கோயில் முற்றிலும் சிதைவடைந்த நிலையில் உள்ளது. இக்கோவிலின் அசல் வரலாற்றுப் பெருமைமிக்க பல கற்கள் மற்றும் இடிபாடுகள், அருகில் புதிதாகக் கட்டப்பட்ட பிள்ளையார் கோயிலுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இங்கிருந்த அசல் சிவலிங்கம் மற்றும் சில வரலாற்று எச்சங்கள் தற்போதும் அந்த பிள்ளையார் கோயிலிலேயே பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இலங்கையின் பௌத்த காலத்திற்கு முந்தைய அல்லது ஆரம்பகால வரலாற்று இந்து மரபுகளுக்குச் சான்றாக இந்த சிவன் கோயில் விளங்குகிறது.

அடுத்ததாக அநுராதபுரம் பத்திரகாளி அம்மன் கோயில் உள்ளது அநுராதபுரத்தின் எஞ்சியிருக்கும் பழமையான இந்து வழிபாட்டுத் தலங்களில் இதுவும் ஒன்றாகும். உள்ளூர் மக்களால் "காளி கோவில்" என்று அழைக்கப்படும் இது, பல நூற்றாண்டுகளாக வழிபாட்டில் இருந்து வருகிறது. இக்கோயிலின் கட்டுமான அமைப்புகள் பண்டைய கதிர்காம விஷ்ணு கோயில் அமைப்பை ஒத்த இருவரிசை கல் தூண்களைக் கொண்டுள்ளன. இன்றும் அநுராதபுரப் புனித நகர எல்லையை ஒட்டி இயங்கிவரும் வழிபாட்டு மையங்களில் இது முதன்மையானது. அதுமட்டுமன்றி அநுராதபுரத்தின் அரச அரண்மனை வளாகம் மற்றும் உட்புற நகரப் பகுதிகளில் தொல்பொருள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் பல இந்து ஆலயங்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முன்னைய தமிழ் வர்த்தகச் சமூகத்தினரும் அரச படைகளில் இருந்த தமிழ் வீரர்களும் வழிபடுவதற்காக கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் 10ஆம் நூற்றாண்டு வரை பல சிவன் மற்றும் விஷ்ணு கோயில்கள் இங்கு கட்டப்பட்டிருந்தன.



கி.பி. 993 - 1070 களில் முதலாம் இராஜராஜ சோழன் மற்றும் ராஜேந்திர சோழன் காலத்தில் அநுராதபுரத்திலும் அதன் சுற்றுவட்டாரங்களிலும் திராவிடக் கட்டிடக்கலை பாணியில் திரளான கற்கோவில்கள் அமைக்கப்பட்டன. அநுராதபுரப் பண்பாட்டு எல்லைக்கு உட்பட்ட நாளந்தாவில் அமைந்துள்ள "கேடிகே", பல்லவ கட்டிடக்கலை மற்றும் சிங்கள பௌத்த கட்டிடக்கலையின் அரிய கலவையாகும். இது இந்து-பௌத்த வழிபாட்டு மையமாக விளங்கிய வரலாற்றுச் சின்னமாகும். அநுராதபுர அகழ்வாராய்ச்சிகளின் போது கண்டெடுக்கப்பட்ட நடராஜர், சிவகாமி அம்மன், விஷ்ணு மற்றும் பிள்ளையார் செப்புத் திருமேனிகள் அநுராதபுர அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.



எனவே அநுராதபுரம் என்பது ஒரு குறிப்பிட்ட பௌத்த மதத்திற்கு மட்டும் சொந்தமான நகரம் அல்ல. அது பௌத்த ஸ்தூபிகளுடன் இந்து ஆலயங்களும் தோளோடு தோள் நின்று நிலவிய பல்லினப் பண்பாட்டு நகரம் என்பதை தொல்பொருள் சான்றுகள் மூலம் நிறுவலாம். பண்டைய சிங்கள மன்னர்களான பண்டுகாபய, அக்கபோதி போன்றோர் இந்து ஆலயங்களுக்கு நிலங்களையும் மானியங்களையும் அளித்ததை வரலாற்று சாசனங்கள் கூறுகின்றன. வரலாற்றுப் பின்னணியற்ற அரசியல்வாதிகள் அநுராதபுரம் இந்து ஆலயங்களை "புதிய ஆக்கிரமிப்புகள்" என சித்திரிக்க முயல்வது, நாட்டின் உண்மையான வரலாற்று சான்றுகளையும் மகாவம்சத்தின் பதிவுகளையுமே மறுதலிப்பதாகவேயுள்ளது.

புத்தரே மகத்தான ஒரு இந்துதான்

அநுராதபுரம் புனித பூமி அபிவிருத்தியில் இந்தியாவின் நிதி உதவியில் இந்துக்கோவில்கள் புனரமைக்கப்படப்போகின்றன. நிர்மாணிக்கப்படப்போகின்றனவென மதவாத கூச்ச்சலிடும் இந்த மத வெறியர்கள், இலங்கை வரலாற்றையும், புத்தர் யார்,புத்தர் எங்கிருந்து வந்தார் என்பதனையும், ஸ்ரீமாபோதி (புனித வெள்ளரசு மரம்) எங்கிருந்து கொண்டுவரப்பட்டது என்பதையும் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

இன்றைய நேபாள நாட்டின் லும்பினி என்னும் இடத்தில் இந்து மதப் பின்னணி கொண்ட சாக்கிய குலத்து மன்னர் சுத்தோதனருக்கும், அரசி மாயாதேவிக்கும் மகனாகப் பிறந்தவர்தான் புத்தர். இவரின் இயற்பெயர் சித்தார்த்தர். பிறந்த சில நாட்களிலேயே தாய் மறைந்ததால், சிற்றன்னை கௌதமியால் வளர்க்கப்பட்டார். அரண்மனை வாழ்க்கையின் சகல சுகபோகங்களையும் அனுபவித்து வந்த சித்தார்த்தர், யசோதரை என்ற மனைவியையும் ராகுலன் என்ற மகனையும் பெற்றிருந்தார். ஒருநாள் நகர உலா செல்லும்போது முதியவர், நோயாளி, பிணம் மற்றும் ஒரு துறவி ஆகிய நான்கு காட்சிகளைக் கண்டார். மனித வாழ்க்கையின் துன்பங்களைக் கண்டு மனம் வருந்தி, அதற்கான தீர்வைக் கண்டறிய அரண்மனையை விட்டு வெளியேறினார்.

பல்வேறு குருமார்களிடம் பயின்றும், கடுமையான உபவாசங்கள் இருந்தும் உண்மை புலப்படவில்லை. இறுதியாக பீகாரில் உள்ள போதிகயாவில் என்னும் இடத்தில், அரச மரத்தின் (போதி மரம்) அடியில் தியானத்தில் அமர்ந்தார். வைகாசி பௌர்ணமி நாளில் அவருக்கு முழுமையான ஞானோதயம் கிடைத்தது. தனது வாழ்நாளின் எஞ்சிய ஆண்டுகளை மக்களுக்கு நல்வழி காட்டவும், அன்பையும் அமைதியையும் பரப்பவும் செலவிட்டார். உத்திரப் பிரதேசத்தில் உள்ள குஷிநகர் எனும் இடத்தில் தனது 80ஆவது வயதில் பரிநிர்வாணம் (இயற்கை எய்தினார்) அடைந்தார். புத்தர் பிறந்த சூழல் இந்து சமயக் கலாசாரத்தைச் சேர்ந்தது. தனது ஞானோதயத்தின் மூலம் "பௌத்த மதத்தை" உலகிற்கு அளித்தவர்தான் இந்த புத்தர். அதாவது பிறப்பால் அக்கால வேதக் கலாசாரத்தில் (இன்றைய இந்து மதம்) பிறந்த புத்தர். தந்து தத்துவத்தால் வேத நெறிகளை நிராகரித்து "பௌத்தம்" எனும் தனித்துவமான வழியைத் தோற்றுவித்தவர்.

இலங்கை யாருக்கு சொந்தம்?

வரலாற்று ரீதியாகவும் தொல்பொருள் ஆதாரங்களின்படியும் இலங்கையில் இந்து மதத்தின் தொன்மையான வடிவங்களே (சைவம்/வேத வழிபாடுகள்) முதலில் நிலவின. அதற்குப் பிறகே பௌத்த மதம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது. பௌத்த மதம் இலங்கைக்கு வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, இலங்கையின் கடற்கரை நகரங்களில் சிவபெருமானுக்காக அமைக்கப்பட்ட தொன்மையான சிவாலயங்களான திருகோணமலை கோணேஸ்வரம், மன்னார் திருக்கேதீஸ்வரம், சிலாபம் முன்னேஸ்வரம் நகுலேஸ்வரம் மற்றும் தொண்டீஸ்வரம் என்ற பஞ்ச ஈஸ்வரங்கள் இருந்தன. இராமாயணக் கதைகளின்படி, இராவணன் சிவபக்தனாக இருந்ததாகவும், அவனது ஆட்சிக் காலத்தில் இலங்கையில் சைவ வழிபாடே நிலவியதாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

இலங்கையின் பண்டைய மகாவம்சம் நூல், தேவநம்பிய தீச மன்னனுக்கு முன் ஆண்ட பண்டு காபய மன்னன் காலத்தில் அநுராதபுரத்தில் பிராமணர்கள், சிவலிங்க வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பிற துறவிகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறது. இந்தியாவில் மாமன்னர் அசோகரின் ஆட்சிக் காலத்தில், அவரது மகனான மகிந்த தேரர் (அரஹத் மகிந்தர்) இலங்கைக்கு வருகை தந்து, அன்றைய மன்னன் தேவநம்பிய தீசனை பௌத்தத்திற்கு மாற்றினார். அதன்பின்னரே பௌத்த மதம் அரச மதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, நாடு முழுவதும் மிக வேகமாகப் பரவியது என்பதுதான் வரலாறு.

இலங்கையின் வரலாறு இவ்வாறிருக்க வீட்டுக்குள் ஒட்டகம் புகுந்த கதையாக வந்த பௌத்தமதமும் பௌத்தர்களும் இன்று முழு இலங்கையையும் உரிமை கோரி பௌத்த மதத்திற்கே முதலிடம் என அரசியலமைப்பில் வரித்து தமிழ் முஸ்லிம் மக்களை இலங்கையின் வந்தேறுகுடிகளாக்கி இனவாத,மதவாத தீயைபயன்படுத்தி ஆட்சிபுரிகின்றார்கள். தங்களின் அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள, தற்போதைய அநுரகுமார அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுக்க, புனிதமான வழிபாட்டுத் தலங்களையும், மக்களின் மத நம்பிக்கைகளையும் பகடைக்காய்களாகப் பயன்படுத்தும் தயாசிறி ஜயசேகர மற்றும் உதய கம்மன்பில போன்ற இன, மதவெறி அரசியல்வாதிகளின் வஞ்சக மதவெறி அரசியல் வெறுமனே ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு எதிரானது மட்டுமல்ல.ஒட்டுமொத்த ஜனநாயகக் கட்டமைப்பிற்கும் ஆபத்தானது.

கடன் சுமையில் தத்தளிக்கும் பிரான்ஸ்

கடன் சுமையில் தத்தளிக்கும் பிரான்ஸ்

ஐரோப்பாவை உலுக்கும் மக்கள் எழுச்சி! எங்கு செல்கிறது ஐரோப்பா?

நக்கீரன் - கனடா



ஐரோப்பாவின் முக்கிய பொருளாதார, அரசியல் வல்லரசுகளில் ஒன்றான பிரான்ஸ் மீண்டும் மக்கள் போராட்டங்களால் அதிர்ந்து கொண்டிருக்கிறது. மாணவர்களின் கல்வி தொடர்பான கோரிக்கைகளுடன் தொடங்கியதாகக் கூறப்படும் போராட்டங்கள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் பொதுமக்களின் அதிருப்தியையும் வெளிப்படுத்தும் வகையில் விரிவடைந்துள்ளன. சில இடங்களில் இடம்பெற்ற வன்முறைகள், சொத்துச் சேதங்கள் மற்றும் காவல்துறையுடனான மோதல்கள் நாட்டின் அரசியல் நிலைத்தன்மை குறித்த கேள்விகளை எழுப்பியுள்ளன.

பிரான்சில் உருவாகியுள்ள இந்தப் பதற்றமான சூழ்நிலையை அந்நாட்டின் தனிப்பட்ட பிரச்சினையாக மட்டும் பார்க்க முடியாது. இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலும் வாழ்க்கைச் செலவு, ஊதியம், வேலைவாய்ப்பு, கல்வி, வீட்டு வசதி மற்றும் அரசாங்கங்களின் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பான அதிருப்தி நிலவுகிறது. இந்தப் போராட்டங்கள் அனைத்தும் ஒரே அமைப்பினால் வழிநடத்தப்படுபவை அல்ல என்றாலும், அவற்றுக்கிடையே சில பொதுவான பொருளாதார மற்றும் சமூகக் காரணிகள் காணப்படுகின்றன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் சமூகப் பாதுகாப்பு, பொதுச் சுகாதாரம், இலவச அல்லது மானியக் கல்வி, தொழிலாளர் உரிமைகள் ஆகியவற்றின் அடிப்படையில் வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நலன்புரி அரசுகளின் எதிர்காலம் குறித்த விவாதங்கள் தற்போது மீண்டும் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

ஒருபுறம் அரசாங்கங்கள் பொதுச் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயத்தை எதிர்கொள்கின்றன. மறுபுறம் மக்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாக்க அதிக அரச முதலீடுகளைக் கோருகின்றனர். இந்த முரண்பாடே பல நாடுகளில் அரசியல் அதிருப்திக்கு அடித்தளமாக அமைந்துள்ளது.

பிரான்சில் வெடித்த அதிருப்தி

பிரான்சில் கல்வித் துறையை மையமாகக் கொண்ட மாணவர் மற்றும் ஆசிரியர் போராட்டங்களின் பின்னணியில் நீண்டகாலப் பிரச்சினைகள் உள்ளன. ஆசிரியர் பற்றாக்குறை, கல்வி நிறுவனங்களின் கட்டமைப்பு வசதிகள், கல்விக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் உயர்கல்விக்குப் பின்னரான வேலைவாய்ப்புகள் போன்றவை இளைஞர்களின் முக்கியமான கவலைகளாக உள்ளன.

கல்வி கற்ற பின்னரும் நிலையான வேலை கிடைக்குமா? வேலை கிடைத்தாலும் சொந்த வீடு வாங்க முடியுமா? பெற்றோர்களைவிடச் சிறந்த வாழ்க்கையை வாழ முடியுமா?

இத்தகைய கேள்விகள் பிரான்சில் மட்டுமல்லாமல் ஐரோப்பாவின் பல நாடுகளிலும் இளைஞர்கள் மத்தியில் எழுகின்றன.

முந்தைய தலைமுறைகளுக்குக் கிடைத்த பொருளாதாரப் பாதுகாப்பு தங்களுக்குக் கிடைக்காது என்ற அச்சம் இளைஞர்களின் அரசியல் அதிருப்தியை அதிகரிக்கிறது.

பிரான்சில் ஏற்கெனவே அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிரான போராட்டங்களுக்கு நீண்ட வரலாறு உள்ளது. 2018ஆம் ஆண்டு எரிபொருள் வரி உயர்வுக்கு எதிராகத் தொடங்கிய மஞ்சள் அங்கி இயக்கம் பின்னர் வாழ்க்கைச் செலவு, வருமான ஏற்றத்தாழ்வு மற்றும் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பான பரந்த இயக்கமாக மாறியது.

அந்த இயக்கம் வெளிப்படுத்திய பல அடிப்படைப் பிரச்சினைகள் இன்றும் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை.

இதனால் புதிய பொருளாதார அல்லது சமூக நெருக்கடிகள் உருவாகும்போது ஏற்கெனவே நிலவும் அதிருப்தி மீண்டும் வீதிகளில் வெளிப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகின்றன.

போராட்டங்களால் ஏற்படும் சொத்துச் சேதங்கள்

பிரான்சில் நடைபெறும் போராட்டங்கள் தொடர்பான மிகக் கவலைக்குரிய அம்சங்களில் ஒன்று சில இடங்களில் ஏற்படும் வன்முறைகளும் பொதுச் சொத்துகள் மற்றும் தனியார் சொத்துகளுக்கு விளைவிக்கப்படும் சேதங்களுமாகும்.

அரச கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள், வாகனங்கள், பொதுப் போக்குவரத்து வசதிகள் போன்றவை சேதமடையும்போது அதன் விளைவுகள் உடனடியாகத் தெரியவருகின்றன. ஆனால் இவற்றால் ஏற்படும் நீண்டகாலப் பொருளாதாரப் பாதிப்புகள் அதைவிட விரிவானவை.

ஒரு வர்த்தக நிறுவனம் தீக்கிரையானால் அல்லது கடுமையாகச் சேதமடைந்தால் அதன் உரிமையாளர் மட்டுமல்லாமல் அங்கு பணியாற்றும் தொழிலாளர்களும் பாதிக்கப்படுகின்றனர். வர்த்தக நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதால் வருமான இழப்பு ஏற்படுகிறது. சேதமடைந்த கட்டடங்களை மீளமைப்பதற்கும் உபகரணங்களை மாற்றுவதற்கும் பெரும் தொகை செலவிட வேண்டியுள்ளது.

காப்புறுதி நிறுவனங்கள் இழப்பீடுகளை வழங்க வேண்டிய நிலையும் ஏற்படுகிறது. சில நிறுவனங்கள் மீண்டும் செயல்படுவதற்குப் பல மாதங்கள் தேவைப்படலாம்.

இதனுடன் சுற்றுலா, போக்குவரத்து மற்றும் சிறு வர்த்தக நடவடிக்கைகளில் ஏற்படும் பாதிப்புகளும் இணைகின்றன.

பிரான்ஸ் உலகின் முக்கிய சுற்றுலா நாடுகளில் ஒன்றாக இருப்பதால் நீடித்த வன்முறைகளும் அரசியல் நிலையற்ற தன்மையும் சுற்றுலாப் பயணிகளின் நம்பிக்கையைப் பாதிக்கக்கூடும்.

போராட்டங்களால் ஏற்பட்டுள்ள சொத்துச் சேதங்களின் மொத்தப் பெறுமதி தொடர்பாகப் பல்வேறு மதிப்பீடுகள் முன்வைக்கப்பட்டாலும், உறுதிப்படுத்தப்பட்ட முழுமையான கணக்கெடுப்பு இல்லாமல் குறிப்பிட்ட தொகையை இறுதி இழப்பாகக் கருத முடியாது.

எனினும், பெருமளவிலான சொத்துச் சேதங்கள் ஏற்கெனவே பொருளாதாரச் சவால்களை எதிர்கொள்ளும் நாட்டிற்கு மேலும் சுமையை ஏற்படுத்தும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

3.6 டிரில்லியன் யூரோ கடன் சுமை

பிரான்சின் தற்போதைய அரசியல் மற்றும் சமூக நெருக்கடியைப் புரிந்துகொள்வதற்கு அதன் அரசாங்கக் கடன் நிலைமையை ஆராய்வது அவசியமாகும்.

பிரான்சின் தேசிய புள்ளிவிவர நிறுவனமான INSEE வெளியிட்ட தகவலின்படி, 2026 யூன் மாத இறுதியில் நாட்டின் பொதுக்கடன் சுமார் 3.6 டிரில்லியன் யூரோக்களாக இருந்தது. இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 119 விழுக்காடாகும்.

இந்தத் தொகை முழுவதும் வெளிநாட்டுக் கடன் அல்ல. மத்திய அரசாங்கம், உள்ளூராட்சி அமைப்புகள் மற்றும் ஏனைய பொதுத்துறை நிறுவனங்களின் கடன்களையும் உள்ளடக்கிய மொத்தப் பொதுக்கடனாகும்.

இத்தகைய கடன் சுமையுடன் இயங்கும் அரசாங்கம் கல்வி, சுகாதாரம், ஓய்வூதியம், பொதுச் சேவைகள் மற்றும் நாட்டின் பாதுகாப்பு போன்ற பல்வேறு தேவைகளுக்காக நிதி ஒதுக்க வேண்டியுள்ளது.

அதேவேளை கடனுக்கான வட்டியையும் செலுத்த வேண்டியுள்ளது.

அரசாங்கத்தின் வருமானத்திற்கும் செலவுகளுக்கும் இடையே தொடர்ச்சியாகப் பற்றாக்குறை ஏற்பட்டால் மேலும் கடன் பெற வேண்டிய நிலை உருவாகிறது.

இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் செலவுகளைக் கட்டுப்படுத்த முயற்சிக்கும்போது மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

கல்விக்கு அதிக நிதி வேண்டும். மருத்துவ வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். ஊதியம் உயர்த்தப்பட வேண்டும். ஓய்வூதியப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கைகளாக உள்ளன.

ஆனால் இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான நிதி ஆதாரங்களை உருவாக்குவது அரசாங்கத்திற்கு எளிதான காரியமல்ல.

இதுதான் பிரான்ஸ் எதிர்கொள்ளும் மிகப்பெரிய பொருளாதார முரண்பாடாகும்.

ஒருபுறம் கடனைக் கட்டுப்படுத்த வேண்டும். மறுபுறம் மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாக்க வேண்டும்.

இந்த இரண்டிற்கும் இடையில் சமநிலையை ஏற்படுத்தத் தவறினால் பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியாக மாறும் அபாயம் உள்ளது.

இந்நிலையில் போராட்டங்களால் ஏற்படும் சொத்துச் சேதங்களும் வர்த்தக இழப்புகளும் நிலைமையை மேலும் சிக்கலாக்குகின்றன.

ஐரோப்பா முழுவதும் பரவும் அதிருப்தி

பிரான்சில் காணப்படும் பொருளாதார முரண்பாடுகள் ஐரோப்பாவின் ஏனைய நாடுகளிலும் வெவ்வேறு வடிவங்களில் வெளிப்படுகின்றன.

இத்தாலியில் குறைந்த ஊதியம், இளைஞர்களின் வேலைவாய்ப்புப் பாதுகாப்பின்மை, வாழ்க்கைச் செலவு மற்றும் வீட்டு வசதி போன்ற பிரச்சினைகள் நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டு வருகின்றன.

பிரதமர் ஜோர்ஜியா மெலோனியின் அரசாங்கத்தின் பொருளாதார முன்னுரிமைகள் குறித்தும் பல்வேறு அரசியல் மற்றும் தொழிற்சங்க அமைப்புகள் விமர்சனங்களை முன்வைக்கின்றன.

குறிப்பாக இராணுவச் செலவுகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும் சூழ்நிலையில் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக நலத்திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுகின்றன.

போர்ச்சுகலில் வீட்டு விலைகள் மற்றும் வாடகை உயர்வு முக்கியமான சமூகப் பிரச்சினையாக உள்ளது. ஜெர்மனியிலும் வாழ்க்கைச் செலவு, பொருளாதார வளர்ச்சி மற்றும் பொதுச் சேவைகள் தொடர்பான விவாதங்கள் தீவிரமடைந்துள்ளன.

பெல்ஜியத்தில் கல்வி மற்றும் சமூகச் செலவினங்கள் தொடர்பான அரசாங்கக் கொள்கைகள் எதிர்ப்புகளைச் சந்தித்துள்ளன.

டென்மார்க் உள்ளிட்ட ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகள் தொடர்பான கருத்து வேறுபாடுகள் உள்ளன. இருப்பினும், அந்நாடுகள் அனைத்திலும் பிரான்சுக்கு இணையான நாடு தழுவிய எழுச்சி ஏற்பட்டுள்ளது என்று கூறுவதற்கு உறுதியான ஆதாரங்கள் தேவை.

இந்த நாடுகளின் அரசியல் அமைப்புகள், பொருளாதார நிலைமைகள் மற்றும் போராட்டங்களுக்கான உடனடிக் காரணங்கள் வேறுபட்டவை.

எனினும், அவற்றுக்கிடையே ஒரு பொதுவான கேள்வி காணப்படுகிறது.

பொருளாதார வளர்ச்சியின் பலன்கள் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் நியாயமான முறையில் கிடைக்கின்றனவா என்பதே அந்தக் கேள்வியாகும்.



(தொடர்ச்சி 21 பக்கம்)

இவ்வார ராசிபலன்

06-11-2026 வெள்ளி தொடக்கம் 12-11-2026 வியாழன் வரையும்


ஸ்ரீ ஸ்ரீ ப்ரத்யங்கிராதாச சுவாமிகள்
ஸ்தாபகர்
ஜெய் ப்ரத்யங்கிரா பீடம்
40.வெண்பாக்கம் கிராமம், சிங்கப்பெருமாள் கோவில்ரயில் வேகேட் (வழி),
வெங்கடாபுரம் (அஞ்சல்), செங்கல்பட்டு (மா)- 603204.
தொடர்புக்கு WhatsApp: +917788994666



மேஷம்: பணவரவு தேவையான அளவுக்கு இருக்கும். வீண் செலவுகளும் இருக்காது. நண்பர்களின் சந்திப்பு ஆதாயம் தருவதாக இருக்கும். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்னைகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் விட்டுப்பிடித்துச் செல்லவும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். சில நேரங்களில் அதிகாரிகள் கண்டிப்பு காட்டினாலும், ஆதரவாகவே இருப்பார்கள். வியாபாரம் வழக்கம்போலவே காணப்படும். சக வியாபாரிகளுடன் ஏற்பட்ட பிரச்னைகள் நீங்கி, சுமுகமான உறவு ஏற்படும். பங்குதாரர்களால் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு வாரப் பிற்பகுதியில் மனதில் சிறு குழப்பம் ஏற்படக் கூடும். வாரப் பிற்பகுதியில் புகுந்தவீட்டு உறவினர்கள் மூலம் ஆதாயம் உண்டாகும். புதிய உற்சாகம் பிறக்கும் வாரம். பண வரவு நல்லா இருக்கும். நீண்ட நாள் நிலுவையில் இருந்த பணம் கைக்கு வரும். வேலையில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். பதவி உயர்வு, சம்பள உயர்வு வாய்ப்பு உண்டு. தொழில் செய்பவர்களுக்கு புதிய ஆர்டர் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன் மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். பிள்ளைகளால் பெருமை. சொத்து வாங்கும் யோகம் உண்டு. உடல் நலத்தில் கவனம் தேவை. தலைவலி, உடல் சோர்வு வரலாம். கோபத்தை குறைத்தால் அனைத்தும் நல்லதாக நடக்கும்.
அதிர்ஷ்ட எண்: 9. அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு.
அதிர்ஷ்ட நாள்: செவ்வாய், வியாழன்.



ரிஷபம்: சிலருக்கு திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சகோதர வகையில் இருந்து வந்த கருத்துவேறுபாடுகளும் கசப்பு உணர்வுகளும் மாறி, சுமுகமான உறவு ஏற்படும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவுடன் தேவையான உதவியும் கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டாகும். விலகிச் சென்ற நண்பர்கள் மீண்டும் வந்து நட்பு பாராட்டுவார்கள். வேலைக்கு விண்ணப்பித்து இருந்தவர்களுக்கு வேலை கிடைக்கும். பணியின் காரணமாக சிலர் வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். நிர்வாகத்தினரின் ஆதரவு கிடைக்கும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பழைய கடன்கள் தீரும். பங்குதாரர்களால் தேவையான உதவி கிடைக்கும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படும். குடும்ப நிர்வாகத்தை கவனிக்கும் பெண்களுக்கு பொறுப்புகள் அதிகரிப்பதால் சற்று சிரமமான வாரம் என்றே சொல்ல வேண்டும். ஆனால், பணவசதி திருப்தி தருவதாக இருக்கும் சேமிப்பு அதிகரிக்கும் வாரம். ஆடை, ஆபரணம் வாங்கும் யோகம் உண்டு. வேலையில் புதிய வாய்ப்பு வரும். மேலதிகாரி பாராட்டுவார். பதவி உயர்வு கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு பெரிய லாபம். கூட்டு தொழில் நல்லா இருக்கும். புதிய வாடிக்கையாளர் கிடைப்பார். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன் மனைவி அன்பு அதிகரிக்கும். திருமண பேச்சு வெற்றி அடையும். காதல் விஷயத்தில் நல்ல முன்னேற்றம். உடல் நலம் சீராக இருக்கும். சரும பிரச்சனை, தொண்டை வலி வரலாம், கவனம் தேவை.
அதிர்ஷ்ட எண்: 6. அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, இளம் பச்சை.
அதிர்ஷ்ட நாள்: வெள்ளி, சனி



மிதுனம்: பணவரவு இருந்தாலும் வீண்செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். பணியின் காரணமாகப் பிரிந்திருந்த தம்பதி ஒன்று சேரும் வாய்ப்பு ஏற்படும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும். அலுவலகத்தில் பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படுகிறது. உங்கள் பணிகளை மற்றவர்களிடம் ஒப்படைக்காமல் நீங்களே செய்வது நல்லது. சக ஊழியர்கள் அனுசரணையாக இருப்பார்கள். அதிகாரிகளை அணுகும்போது பொறுமை அவசியம். வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு நீங்கி இணக்கமான சூழ்நிலை உண்டாகும். கடன் வாங்கி முதலீடு செய்வதைத் தவிர்க்கவும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு திருப்திகரமான வாரம். வேலைக்குச் சென்று வரும் பெண்களுக்கு பணிச்சுமையின் காரணமாகச் சற்று சோர்வு ஏற்படக்கூடும் புத்திசாலித்தனம் வெளிப்படும் வாரம். பண வரவு நல்லா இருக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். வேலையில் உங்கள் பேச்சுத் திறமைக்கு பாராட்டு கிடைக்கும். புதிய பொறுப்பு கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தம் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும். வெளியூர் பயணம் லாபம் தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். உடன்பிறந்தவர்களால் உதவி கிடைக்கும். கணவன் மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். பிள்ளைகளின் படிப்பில் முன்னேற்றம். உடல் நலத்தில் கவனம் தேவை. தலைவலி, தூக்கமின்மை வரலாம். தியானம் செய்யுங்கள்.
அதிர்ஷ்ட எண்: 5. அதிர்ஷ்ட நிறம்: பச்சை.
அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி.



கடகம்: புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்கள் அனுகூலமாகும். தந்தை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். சகோதரர்கள் மூலம் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்க அதிகாரிகளிடம் பேசும்போது பொறுமை அவசியம். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு சக பணியாளர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும். மேலதிகாரிகளை அணுகும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வாரப் பிற்பகுதியில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். பற்று வரவு விஷயத்தில் கவனமாக இருப்பது நல்லது. கடன் தொல்லை குறையும். வேலையில் புதிய வாய்ப்பு வரும். மேலதிகாரி ஆதரவு கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு லாபம் அதிகரிக்கும். புதிய வாடிக்கையாளர் கிடைப்பார். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். தாயின் ஆசி கிடைக்கும். கணவன் மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். பிள்ளைகளின் படிப்பில் முன்னேற்றம். வீடு வாங்கும் யோகம் உண்டு. உடல் நலத்தில் கவனம் தேவை. வயிறு வலி, சளி வரலாம். உணவில் கவனம் தேவை. ஓய்வு எடுங்கள்.
அதிர்ஷ்ட எண்: 2. அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, வெளிர் நீலம்.
அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.



சிம்மம்: குடும்பத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். பணவரவுக்குக் குறைவிருக்காது. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்களால் தேவையற்ற பிரச்னைகள் ஏற்பட்டு நீங்கும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும் அதற்கேற்ற சலுகைகளும் கிடைக்கும் என்பதால் உற்சாகமாகவே காணப்படுவீர்கள். சக ஊழியர்கள் உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் தருவார்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். விற்பனையும் லாபமும் வழக்கம்போலவே காணப்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். குடும்ப நிர்வாகத்தை கவனித்து வரும் பெண்கள் குடும்ப நிர்வாகத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். கணவருடன் சிறுசிறு பிரச்னைகள் ஏற்படும் என்றாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. புகழ் கூடும் வாரம். பண வரவு நல்லா இருக்கும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். சேமிப்பு அதிகரிக்கும். வேலையில் பெரிய பொறுப்பு கிடைக்கும். மேலதிகாரி பாராட்டுவார். பதவி உயர்வு வாய்ப்பு. தொழில் செய்பவர்களுக்கு புதிய வாய்ப்பு. லாபம் அதிகரிக்கும். அரசு வேலை முயற்சி வெற்றி அடையும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன் மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். தந்தையின் ஆசி கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை. உடல் நலம் சீராக இருக்கும். கண் எரிச்சல், தலைவலி வரலாம், கவனம் தேவை. கோபத்தை குறைக்கவும்.
அதிர்ஷ்ட எண்: 1. அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, தங்க நிறம்.
அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, செவ்வாய்.



கன்னி: குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த சிறுசிறு பிரச்னைகள் நீங்கி, மகிழ்ச்சியும் உற்சாகமும் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணைவழியில் ஆதாயம் ஏற்படும். பிள்ளைகள் உங்கள் எண்ணப்படி நடந்துகொள்வார்கள். தாயின் தேவைகளைப் பூர்த்தி செய்து, மகிழ்ச்சி அடைவீர்கள். சகோதரர் நீங்கள் கேட்ட உதவியை செய்து தருவார். தந்தைவழி உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் கடுமையாக உழைத்தாலும் நல்ல பெயர் கிடைக்கும் என்று சொல்லமுடியாது. அலுவலகப்பணிகளில் கூடுதல் கவனம் தேவை. உங்கள் பணிகளை மற்றவர்களிடம் ஒப்படைக்காமல் இருப்பதன் மூலம் பிரச்னைகளைத் தவிர்த்துவிடலாம். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். லாபம் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் பிரச்னை எதுவும் இருக்காது. குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு மனதை சஞ்சலப் படுத்தும். வாரப் பிற்பகுதியில் உற்சாகமான சூழ்நிலை ஏற்படும். புத்திசாலித்தனத்தால் வெற்றி கிடைக்கும் வாரம். பண வரவு நல்லா இருக்கும். கடன் குறையும். சேமிப்பு அதிகரிக்கும். வேலையில் புதிய பொறுப்பு கிடைக்கும். மேலதிகாரி பாராட்டுவார். தொழில் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தம் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும். வெளியூர் பயணம் லாபம் தரும். குடும்பத்தில் அமைதி நிலவும். கணவன் மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். பிள்ளைகளின் படிப்பில் முன்னேற்றம். சொத்து வாங்கும் யோகம் உண்டு. உடல் நலத்தில் கவனம் தேவை. வயிறு உபாதை, தலைவலி வரலாம். உணவில் கட்டுப்பாடு தேவை.
அதிர்ஷ்ட எண்: 5. அதிர்ஷ்ட நிறம்: பச்சை. அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி.



துலாம்: உடல் ஆரோக்கியம் மேம்படும். தேவையான பணவரவு உண்டு. சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படவும் அதன் காரணமாக கடன் வாங்கவும் நேரிடும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்குத் தேவையான ஒத்துழைப்பைத் தருவார். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். நீண்டநாளாக எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. உங்களுடன் கருத்துவேறுபாடு கொண்டு விலகிச் சென்ற உறவினர்கள், வலிய வந்து உறவு பாராட்டுவார்கள். அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்கு இடமாற்றம், பதவி மாற்றம் கிடைக்கும் என்றாலும் அதனால் நன்மையே நடக்கும். பணியின் காரணமாக சிலருக்கு தற்காலிகமாக குடும்பத்தை விட்டுப் பிரிந்திருக்க நேரிடும். வியாபாரத்தில் கடையை விரிவுபடுத்துவதற்காகக்கூடுதலாக உழைப்பீர்கள். அதிக உழைப்பின் காரணமாக அசதியும் சோர்வும் ஏற்பட்டு நீங்கும். லாபம் கூடுதலாக இருக்கும். குடும்ப நிர்வாகத்தில் இருக்கும் பெண்கள் மிகவும் பொறுமையாக இருக்கவேண்டியது அவசியம். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும். மனதில் மகிழ்ச்சி கூடும் வாரம். பண வரவு நல்லா இருக்கும். புதிய வருமானம் வரும். வேலையில் பதவி உயர்வு வாய்ப்பு. மேலதிகாரி ஆதரவு கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு புதிய வாய்ப்பு வரும். கூட்டு தொழில் லாபம் தரும். புதிய வாடிக்கையாளர் கிடைப்பார். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். கணவன் மனைவி அன்பு கூடும். காதல் விஷயத்தில் நல்ல முன்னேற்றம். திருமண பேச்சு வெற்றி அடையும். உடல் நலம் சீராக இருக்கும். சரும பிரச்சனை வரலாம், கவனம் தேவை. நல்ல தூக்கம் கிடைக்கும்.
அதிர்ஷ்ட எண்: 6. அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, இளம் பச்சை.
அதிர்ஷ்ட நாள்: வெள்ளி, சனி.

(தொடர்ச்சி 22 பக்கம்)

(19 பக்கத் தொடர்ச்சி)

கடன் சுமையில் தத்தளிக்கும் பிரான்ஸ்

ஐரோப்பிய நலன்புரி அரசுகளின் எதிர்காலம்

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் மேற்கு ஐரோப்பிய நாடுகள் சமூகப் பாதுகாப்பை மையமாகக் கொண்ட பொருளாதார அமைப்புகளை உருவாக்கின.

பொதுச் சுகாதாரம், கல்வி, ஓய்வூதியம், வேலையின்மை உதவித்தொகை மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு ஆகியவை இந்த அமைப்புகளின் முக்கியமான அம்சங்களாக இருந்தன.

இந்தக் கொள்கைகள் பல நாடுகளில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் பெரும் பங்களிப்பை வழங்கின.

ஆனால் தற்போது ஐரோப்பிய நாடுகள் புதிய சவால்களை எதிர்கொள்கின்றன.

முதியோர் எண்ணிக்கை அதிகரித்தல், ஓய்வூதியச் செலவுகள் உயர்தல், பொருளாதார வளர்ச்சியின் மந்தநிலை, சர்வதேசப் போட்டி, எரிசக்திச் செலவுகள் மற்றும் பாதுகாப்புத் தேவைகள் ஆகியவை அரசாங்கங்களின் நிதி நிலைமையைப் பாதிக்கின்றன.

இதனால் அரசாங்கங்கள் பொதுச் செலவுகளைக் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றன.

மறுபுறம் மக்கள் தாங்கள் நீண்டகாலமாக அனுபவித்த சமூகப் பாதுகாப்பு வசதிகள் குறைக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

இந்த முரண்பாடு ஐரோப்பிய அரசியலில் முக்கியமான சவாலாக உருவெடுத்துள்ளது.

புதிய பிரெஞ்சுப் புரட்சியின் தொடக்கமா?

பிரான்சின் வரலாற்றைப் பார்க்கும்போது மக்கள் எழுச்சிகள் அந்நாட்டின் அரசியல் மாற்றங்களில் முக்கியமான பங்காற்றியுள்ளன.

1789ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சி முடியாட்சியை வீழ்த்தி ஐரோப்பிய அரசியல் வரலாற்றில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

1968ஆம் ஆண்டு மாணவர்கள் தொடங்கிய போராட்டங்கள் தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்களுடன் இணைந்து நாட்டின் அரசியல் அமைப்பையே உலுக்கின.

2018ஆம் ஆண்டு மஞ்சள் அங்கி இயக்கம் பொருளாதார ஏற்றத்தாழ்வு மற்றும் வாழ்க்கைச் செலவு தொடர்பான மக்களின் அதிருப்தியை வெளிப்படுத்தியது.

இந்த வரலாற்றுப் பின்னணியில் தற்போதைய போராட்டங்களையும் ஆராய வேண்டியுள்ளது.

ஆனால் ஒரு நாட்டில் பெரிய அளவிலான மக்கள் போராட்டங்கள் நடைபெறுவது மட்டுமே புரட்சி ஏற்பட்டுவிட்டது என்பதற்கான அடையாளமாகாது.

புரட்சி என்பது அரசியல் அதிகார அமைப்பிலும் சமூக உறவுகளிலும் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தும் நிகழ்வாகும்.

இன்றைய பிரான்சில் தேர்தல்கள், நாடாளுமன்றம், நீதித்துறை மற்றும் ஏனைய ஜனநாயக அமைப்புகள் தொடர்ந்து செயல்படுகின்றன.

எனவே தற்போதைய போராட்டங்கள் ஒரு புதிய புரட்சியாக மாறுமா அல்லது அரசியல் மற்றும் பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கான அழுத்தமாகத் தொடருமா என்பதை இப்போதே தீர்மானிக்க முடியாது.

வன்முறைகளால் யாருக்கு இழப்பு?

மக்கள் தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடுவது ஜனநாயகத்தின் அடிப்படை அம்சமாகும்.

ஆனால் பொதுச் சொத்துகளையும் தனியார் சொத்துகளையும் அழிப்பது அந்தப் போராட்டங்களின் நோக்கங்களையே பாதிக்கக்கூடும்.

கல்விக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று கோரிக்கைகள் எழுப்பப்படும் அதே நேரத்தில் பாடசாலைகள், அரச கட்டடங்கள் மற்றும் பொதுச் சொத்துகள் சேதமாக்கப்பட்டால் அவற்றை மீளமைப்பதற்கும் பெரும் நிதி தேவைப்படும்.

அந்த நிதி இறுதியில் மக்களின் வரிப்பணத்திலிருந்தோ சமூகத்தின் பொருளாதார வளங்களிலிருந்தோ பெறப்பட வேண்டியிருக்கும்.

அதேபோன்று வர்த்தக நிறுவனங்கள் சேதமடையும்போது தொழிலாளர்களின் வேலைவாய்ப்புகளும் பாதிக்கப்படலாம்.

இதனால் பொருளாதார நெருக்கடிக்கு எதிராக நடைபெறும் போராட்டங்களில் உருவாகும் வன்முறைகள், அந்த நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தும் முரண்பாடான நிலைமை உருவாகிறது.

அதேவேளை வன்முறைகளில் ஈடுபடும் சிலரின் செயல்களுக்காக அமைதியாகப் போராடும் பெரும்பான்மையான மக்களைக் குற்றஞ்சாட்டுவதும் நியாயமல்ல.

அரசாங்கங்கள் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதுடன் பொதுச் சொத்துகளையும் பொதுமக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

பிரான்சின் அரசியல் எதிர்காலம்

2027ஆம் ஆண்டு பிரான்சில் அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலை முன்னிட்டு நாட்டின் பொருளாதார நிலைமை, பொதுக்கடன், வாழ்க்கைச் செலவு, குடியேற்றம், பாதுகாப்பு மற்றும் சமூகநலக் கொள்கைகள் ஆகியவை முக்கியமான அரசியல் விவாதங்களாக அமையக்கூடும்.

தற்போதைய போராட்டங்களும் அவற்றின் விளைவுகளும் வாக்காளர்களின் மனநிலையில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இடதுசாரி அரசியல் இயக்கங்கள் சமூகநீதி, ஊதிய உயர்வு மற்றும் பொதுச் சேவைகளை முன்னிறுத்துகின்றன.

வலதுசாரி இயக்கங்கள் சட்டம் ஒழுங்கு, தேசியப் பாதுகாப்பு, குடியேற்றக் கட்டுப்பாடுகள் மற்றும் அரசாங்கத்தின் நிர்வாகத் திறன் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றன.

இதனால் பொருளாதார அதிருப்தி அரசியல் துருவமயமாக்கலை மேலும் அதிகரிக்கக்கூடும்.

அரசாங்கம் மக்களின் கோரிக்கைகளுக்கு உரிய பதிலளித்து பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொண்டால் போராட்டங்கள் படிப்படியாகத் தணியலாம்.

ஆனால் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் அதிருப்தி வெவ்வேறு வடிவங்களில் தொடர்வதற்கான வாய்ப்புகள் உள்ளன.

எங்கு போய் முடியும் இந்த மக்கள் எழுச்சி?

பிரான்சில் உருவாகியுள்ள நெருக்கடிக்கு உடனடியான தீர்வு காண்பது எளிதல்ல.

3.6 டிரில்லியன் யூரோ பொதுக்கடனுடன் இயங்கும் அரசாங்கம் மக்களின் சமூகத் தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

அதேவேளை பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பாதுகாக்கவும் வேண்டியுள்ளது.

இதனுடன் போராட்டங்களால் ஏற்பட்ட சொத்துச் சேதங்கள் மற்றும் வர்த்தக இழப்புகளும் இணைந்துள்ளன.

அரசாங்கம் செலவுகளைக் குறைப்பதிலேயே கவனம் செலுத்தினால் மக்கள் அதிருப்தி அதிகரிக்கலாம். மறுபுறம் நிலையான வருமான ஆதாரங்கள் இல்லாமல் அரச செலவுகளைத் தொடர்ந்து அதிகரித்தால் கடன் மற்றும் நிதிப் பற்றாக்குறை மேலும் உயரக்கூடும்.

எனவே பிரான்ஸ் எதிர்கொள்ளும் சவால் வெறும் அரசியல் பிரச்சினையல்ல. அது பொருளாதார, சமூக மற்றும் ஜனநாயகப் பிரச்சினைகளின் கூட்டுவிளைவாகும்.

இதற்குத் தீர்வு காண்பதற்கு மக்களின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்ட நீண்டகாலப் பொருளாதாரத் திட்டங்களும், பொறுப்பான நிதி நிர்வாகமும், அரசியல் பேச்சுவார்த்தைகளும் அவசியமாகின்றன.

ஐரோப்பாவின் ஏனைய நாடுகளும் இதேபோன்ற சவால்களை வெவ்வேறு அளவுகளில் எதிர்கொள்கின்றன.

இன்றைய உலகில் ஒரு நாடு பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்ததாக இருப்பது மட்டும் அதன் மக்கள் அனைவரும் திருப்தியாக வாழ்கின்றனர் என்பதற்கு உத்தரவாதமல்ல.

பொருளாதார வளர்ச்சியின் பலன்கள் மக்களின் அன்றாட வாழ்க்கையில் உணரப்பட வேண்டும். கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, வீட்டு வசதி மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகிய அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

அவை நிறைவேறாதபோது உருவாகும் அதிருப்தி, காலப்போக்கில் அரசியல் அமைப்புகளின் மீதான நம்பிக்கையின்மையாக மாறக்கூடும்.

பிரான்சில் இன்று எழுந்துள்ள மக்கள் அதிருப்தி ஐரோப்பிய அரசாங்கங்களுக்கு ஒரு முக்கியமான எச்சரிக்கையாக அமைந்துள்ளது.

மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாக்கத் தவறும் பொருளாதார வளர்ச்சி நிலையான சமூக அமைதியை உருவாக்க முடியாது. அதேவேளை பொதுச் சொத்துகளை அழிக்கும் வன்முறைகளும் மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையாது.

பிரான்சின் வீதிகளில் இன்று எழும் கேள்வி, ஒரு அரசாங்கம் எவ்வளவு காலம் பதவியில் நீடிக்கும் என்பதல்ல. மக்களின் நம்பிக்கையை மீட்டெடுத்து, பொருளாதார நிலைத்தன்மையையும் சமூகநீதியையும் எவ்வாறு உறுதிப்படுத்துவது என்பதே உண்மையான கேள்வியாகும்.

இந்தக் கேள்விக்குப் பிரான்ஸ் வழங்கப்போகும் பதில், ஐரோப்பாவின் எதிர்கால அரசியல் மற்றும் பொருளாதாரப் பாதையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

இளையராஜாவின் இசைக்குழுவின் பிரபல கிட்டார் கலைஞர் சதா காலமானார்



இசையமைப்பாளர் இளையராஜாவின் இசைக்குழுவில் நீண்டகாலம் பணியாற்றிய பிரபல கிட்டார் கலைஞர் சதானந்தம் என்கிற சதா மாஸ்டர் (79), உடல்நலக்குறைவு காரணமாக சென்னையில் காலமானார். மூத்த இசையமைப்பாளரும், ஏவிஎம் நிறுவனத்தின் ஆஸ்தான இசையமைப்பாளராகப் பணியாற்றியவருமான ஏவிஎம் ஆர். சுதர்சனத்தின் மகன் சதானந்தம். சதா மாஸ்டர் என்று அழைக்கப்பட்ட இவர், தமிழ் திரையிசையில் முன்னணி கிட்டார் கலைஞராகத் திகழ்ந்தார்.

இசையமைப்பாளர் இளையராஜாவின் இசையில், "அன்னக்கிளி" திரைப்படம் தொடங்கி சுமார் 50 ஆண்டுகளாகப் பல பாடல்களுக்கு கிட்டார் இசை வாசித்துள்ளார். இவரது இசைப் பங்களிப்பு பல புகழ்பெற்ற பாடல்களின் சிறப்பான இசை அமைப்பில் முக்கிய இடம் பெற்றது. "செந்தூரப்பூவே" உள்ளிட்ட பாடல்களில் இவரது கிட்டார் இசை ரசிகர்களைக் கவர்ந்தது. திரைப்படப் பாடல்களுடன், பின்னணி இசையிலும் சதா மாஸ்டர் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார். இளையராஜா மட்டுமின்றி, பல்வேறு இசையமைப்பாளர்களின் இசைக்குழுக்களிலும் பணியாற்றியுள்ளார்.

திரைப்படங்களுக்கு இசை வாசிப்பதோடு மட்டுமல்லாமல், இசைக் கச்சேரிகளிலும் தொடர்ந்து கிட்டார் வாசித்து வந்தார் சதா மாஸ்டர். தனது நீண்டகால இசைப் பயணத்தின் மூலம் தமிழ் திரையிசைக்கு அவர் அளித்த பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், வயது மூப்பு மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக அவர் காலமானார். இவரது மறைவு திரையுலகினர் மற்றும் இசை ரசிகர்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரது மறைவுக்கு இசைக் கலைஞர்கள், திரையுலகினர் மற்றும் ரசிகர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)



விருச்சிகம்: பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். ஆனாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்னைகள் நீங்கி உற்சாகம் அடைவீர்கள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். சிலருக்குக் குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் சிறிது அலைச்சல் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பேசும்போது பொறுமை அவசியம். அலுவலகத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. சக ஊழியர்கள் அனுசரணையாக இருப்பார்கள். சிலருக்குப் பணியிடத்தில் மாற்றம் ஏற்படக்கூடும். அதிகாரிகள் உதவிகரமாக இருப்பார்கள். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் திருப்தி தருவதாக இருக்கும். பங்குதாரர்கள் உங்கள் முயற்சிகளுக்கு உதவி செய்வார்கள்.குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும் என்பதால் கடன் வாங்க நேரிடும். கணவரிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும் தைரியம் கூடும் வாரம். பண வரவு நல்லா இருக்கும். எதிர்பாராத பணம் வரும். கடன் குறையும். வேலையில் புதிய வாய்ப்பு வரும். மேலதிகாரி பாராட்டுவார். தொழில் செய்பவர்களுக்கு லாபம் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தம் கிடைக்கும். போட்டியில் வெற்றி. குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன் மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். பிள்ளைகளின் படிப்பில் முன்னேற்றம். சொத்து விஷயத்தில் நல்ல முடிவு. உடல் நலத்தில் கவனம் தேவை. இரத்த அழுத்தம், கோபம் வரலாம். அமைதியாக இருங்கள். உடற்பயிற்சி செய்யுங்கள்.

அதிர்ஷ்ட எண்: 9. அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு.

அதிர்ஷ்ட நாள்: செவ்வாய், வியாழன்.



தனுசு: குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் ஏற்படும். செலவுகளைச் சமாளிப்பதற்குத் தேவையான பணம் கிடைத்துவிடும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும். திருமணத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். சிலருக்கு தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். உறவினர், நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும் அதற்கேற்ப சலுகைகளும் கிடைக்கும். அதிகாரிகளின் ஆதரவு உற்சாகம் தரும். சக ஊழியர்களின் விஷயங்களில் தலையிடவேண்டாம். எதிர்பார்த்த சலுகை கிடைப்பதில் தாமதம் ஏற்படும். வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்கக் கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கும். பணியாளர்களால் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும். சக வியாபாரிகளால் மறைமுகத் தொல்லைகள் ஏற்படும். குடும்ப நிர்வாகத்தில் இருக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் வாரமாக இருக்கும். வேலை பார்க்கும் பெண்களுக்கு வீட்டில் ஏற்பட்ட சிரமங்கள் நீங்கும். அதிர்ஷ்டம் கூடும் வாரம். பண வரவு நல்லா இருக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். சேமிப்பு அதிகரிக்கும். வேலையில் புதிய வாய்ப்பு வரும். மேலதிகாரி பாராட்டுவார். பதவி உயர்வு வாய்ப்பு. தொழில் செய்பவர்களுக்கு புதிய வாடிக்கையாளர் கிடைப்பார். வெளியூர் பயணம் லாபம் தரும்.குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன் மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். பிள்ளைகளின் படிப்பில் முன்னேற்றம். குருவின் ஆசி கிடைக்கும். திருமண பேச்சு வெற்றி. உடல் நலம் சீராக இருக்கும். மூட்டு வலி, வயிறு உபாதை வரலாம், கவனம் தேவை.

அதிர்ஷ்ட எண்: 3. அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள்.

அதிர்ஷ்ட நாள்: வியாழன், திங்கள்.



மகரம்: வருமானத்துக்குக் குறைவிருக்காது. உறவினர்கள் வருகையால் வீட்டில் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். கணவன் - மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்துவேறுபாடு மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் செய்தி கிடைக்கும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளும்போது வாழ்க்கைத் துணையின் ஆலோசனை கேட்டுச்செய்வது நல்லது. வேலைக்கு விண்ணப்பம் செய்திருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத்தினரால் பாராட்டுப் பெறும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தை விரிவுபடுத்தவும், சரக்குகளைக் கொள்முதல் செய்யவும் சிலருக்கு வெளிமாநிலப் பயணம் மேற்கொள்ளவேண்டி வரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்குத் தேவையான பணம் இருப்பதால் சிரமம் எதுவும் இருக்காது. குடும்பப் பொறுப்புகளை மற்றவர்கள் பகிர்ந்துகொள்வார்கள். கடின உழைப்புக்கு பலன் கிடைக்கும் வாரம். பண வரவு நல்லா இருக்கும். சேமிப்பு அதிகரிக்கும். புதிய வருமானம் வரும். வேலையில் பதவி உயர்வு வாய்ப்பு. மேலதிகாரி ஆதரவு கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு லாபம் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தம் கிடைக்கும். சொத்து வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். கணவன் மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். பிள்ளைகளின் படிப்பில் முன்னேற்றம். பெரியவர்கள் ஆசி கிடைக்கும். உடல் நலத்தில் கவனம் தேவை. மூட்டு வலி, கால் வலி வரலாம். ஓய்வு எடுங்கள். நல்ல தூக்கம் தேவை.

அதிர்ஷ்ட எண்: 8. அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, நீலம்.

அதிர்ஷ்ட நாள்: சனி, செவ்வாய்.



கும்பம்: புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். உறவினர்கள் வருகையால் சுபநிகழ்ச்சி ஒன்று நடைபெறுவதற்கான வாய்ப்பு ஏற்படும். தந்தையுடன் கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் அவருடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். கணவன் - மனைவிக் கிடையே ஏற்பட்ட மனவருத்தங்கள் நீங்கி அந்நியோன்யம் ஏற்படும். பிள்ளைகளால் திடீர் செலவுகள் ஏற்படும். அலுவலகத்தில் உங்கள் திறமைக்கு உரிய அங்கீகாரமும் அதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும். பதவி உயர்வோ அல்லது ஊதிய உயர்வோ கிடைக்கக்கூடும். வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். புதிதாக வியாபாரம் தொடங்க விரும்புபவர்கள் இந்த வாரம் தொடங்கலாம். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு நிம்மதியான வாரம். புகுந்த வீட்டு உறவினர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்புகள் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். புதிய யோசனைகள் வெற்றி அடையும் வாரம். பண வரவு நல்லா இருக்கும். எதிர்பாராத பணம் வரும். கடன் குறையும். வேலையில் புதிய வாய்ப்பு வரும். மேலதிகாரி பாராட்டுவார். தொழில் செய்பவர்களுக்கு புதிய வாடிக்கையாளர் கிடைப்பார். லாபம் அதிகரிக்கும். வெளியூர் பயணம் லாபம் தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன் மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். நண்பர்களால் உதவி கிடைக்கும். பிள்ளைகளின் படிப்பில் முன்னேற்றம். உடல் நலத்தில் கவனம் தேவை. தலைவலி, சளி வரலாம். நல்ல தூக்கம் தேவை. தண்ணீர் அதிகம் குடியுங்கள்.

அதிர்ஷ்ட எண்: 8. அதிர்ஷ்ட நிறம்: நீலம், கருப்பு.

அதிர்ஷ்ட நாள்: சனி, புதன்.



மீனம்: பொருளாதார வசதி நல்லபடியே காணப்படுகிறது. கூடுதல் செலவுகள் ஏற்பட்டாலும் அதைச் சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கும்போது பொறுமை அவசியம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகி முடியும். சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையால் உதவி உண்டு. அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். சக ஊழியர்கள் அனுசரணையாக இருப்பார்கள். உங்கள் ஆலோசனைக்கு நிர்வாகத்தினரின் பாராட்டுகள் கிடைக்கும். எதிர்பாராத சலுகை கிடைக்கும். வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் தகுந்த எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற் கொள்வது அவசியம். மற்றபடி வியாபாரம் வழக்கம்போலவே நடைபெறும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியும் நிம்மதியும் தரும் வாரம். புகுந்தவீட்டு உறவினர்கள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள் கனவு நனவாகும் வாரம். பண வரவு நல்லா இருக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். சேமிப்பு அதிகரிக்கும். வேலையில் புதிய வாய்ப்பு வரும். மேலதிகாரி ஆதரவு கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு லாபம் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தம் கிடைக்கும். வெளியூர் பயணம் லாபம் தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன் மனைவி அன்பு அதிகரிக்கும். பிள்ளைகளின் படிப்பில் முன்னேற்றம். குருவின் ஆசி கிடைக்கும். திருமண பேச்சு வெற்றி அடையும். உடல் நலத்தில் கவனம் தேவை. கால் வலி, தூக்கமின்மை வரலாம். தியானம் செய்யுங்கள். ஓய்வு எடுங்கள்.

அதிர்ஷ்ட எண்: 3. அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், வெள்ளை.

அதிர்ஷ்ட நாள்: வியாழன், திங்கள்.




MORTGAGE

FINANCIAL SOLUTIONS

COMMERCIAL RESIDENTIAL VACANT LAND

INDUSTRIAL CONSTRUCTION



OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

NESAN

416-908-5656



Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

WE DEAL WITH ALL BANKS

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய $30.00 மட்டுமே!
416-752-1524

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

21st ANNIVERSARY
தமிழ் மிரர் Tamil Mirror
Celebrations and
AWARDS GALA 2026
NOV 15 (SUNDAY)
Evening 4:00 PM
VEDIC CULTURAL CENTRE
416 - 679 - 0126
Joe Malloori
An orator, A literarian, Kumki Actor.
Written 19 books, and spoken over 2000 stages

உதயம் 1596 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 6, 2026

Through the 'Ethnic and Social Media Appreciation Week Act 2026', Govt of Ontario honors Diverse Media Outlets and Journalists

ஒன்றாரியோ அரசு பல்லின பத்திரிகைகள் மற்றும் பத்திரிகையாளர்களை கௌரவிக்க அழுல்படுத்தவுள்ள "பல்லின பத்திரிகைகள் மற்றும் சமூக ஊடகப் பாராட்டு வாரச் சட்டம், 2026"



கனடாவின் ஒன்ராறியோ ஒன்றாரியோ அரசாங்கம் மாகாணம் முழுவதும் உள்ள பல்லினப் பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை நிறுவனங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மாகாணத்தில் உள்ள பல்லின மக்களுக்கு நேர்த்தியான வகையிலும் உண்மையான செய்திகளை வழங்குவதிலும் தகவல் அளிப்பதிலும் அவர்களை இணைப்பதிலும் ஆற்றிவரும் முக்கியப் பங்கை அங்கீகரிக்கும் வகையில், இன ஊடக மற்றும் சமூக ஊடகப் பாராட்டு வாரச் சட்டம், 2026, **(Ethnic Media and Community Media Appreciation Week Act, 2026)** மசோதா 120 குறித்து மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த் 04-11-2026 புதன்கிழமை அன்று சமர்ப்பித்து உரையாற்றினார். (தொடர்ச்சி 7ம் பக்கம்)

சிறப்பாக இடம்பெற்ற நடனச் செல்வி தாணியா பிரதீப்ராஜின் "சலங்கை அணி பூஜை"





திரு. திருமதி பிரதீப்ராஜ் தம்பதியினரின் புதல்வியும் "நாட்டிய சமர்ப்பணா கலைக்கூடம்" நிறுவன அதிபர். "கலைக் காவலர்" ஸ்ரீமதி ரஜனி மதிவர்னன் அவர்களின் மாணவியுமான நடனச் செல்வி தாணியா பிரதீப்ராஜின் "சலங்கை அணி பூஜை" 01-11-2026 ஞாயிற்றுக்கிழமை அன்று சிறப்பாக இடம்பெற்றது.

தோர்ன்ஹில் நகரில் அமைந்துள்ள "சிற்றி பிளேஸ்"அரங்கில்" நடைபெற்ற மேற்படி "சலங்கை அணி பூஜை" யை கண்டுகளிக்க மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள் அமர்ந்திருந்தனர். இளைய தலைமுறை பக்கவாத்தியக் கலைஞர்கள் அன்றைய "சலங்கை அணி பூஜை" நடன நிகழ்வை மெருகூட்டும் வகையில் சிறப்பான பக்கவாத்திய இசையை வழங்கினார்கள். விழாவின் பிரதம விருந்தினராக நடன ஆசிரியை செந்தில்செல்வி சுரேஸ்வரன் கலந்து கொண்டு நடனச் செல்வியையும் அவரது குருவையும் பாராட்டியும் வாழ்த்தியும் உரையாற்றினார்.

உரும்பிராய்க் கிராமத்தின் சரிதம் என்ற மகுடத்தோடு இலண்டன் வாழ் எம்.ரி. செல்வராஜாவினால் கனடாவில் வெளியிடப்பெறவுள்ள 634 பக்க "செம்பாட்டுச் சீமை" நூல்



யாழ்ப்பாணம்-உரும்பிராய்க் கிராமத்தில் பிறந்து வளர்ந்து பின்னர் இங்கிலாந்து சென்று பொறியியல் துறையில் கற்று தற்போதும் இங்கிலாந்தில் வாழ்ந்து வருபவர்தான் எழுத்தாளரும் தமிழ் ஆர்வலருமான எம்.ரி. செல்வராஜா அவர்கள். அவர் கடந்த 20 வருடங்களாக தேடிப் பெற்ற அரிய தகவல்கள் மற்றும் உரும்பிராய்க் கிராமத்தின் மைந்தர்கள் பலர் எட்டிய உச்சங்கள் மற்றும் ஆகியவற்றை உள்ளடக்கி கிராமத்தின் சரிதம் என்ற மகுடத்தோடு கனடாவில் வெளியிடப்பெற்ற 634 பக்கங்கள் கொண்ட "செம்பாட்டுச் சீமை" நூல் வெளியீட்டு விழா கடந்த 01-11-2026 ஞாயிற்றுக்கிழமை அன்று ஒன்றாரியோ தமிழிசைக் கலாமன்றத்தில் இடம்பெற்றது. திரு சோமநாதன் விசுவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நூல் வெளியீட்டு விழாவில் உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களும் ஏனைய எழுத்தாளர்கள்,பத்திரிகையாளர் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் வர்த்தகப் பிரமுகர்கள் என பலரும் உரையாற்றினார்கள்.

கம்போடியாவில் நடைபெறவுள்ள 3வது உலகத் தமிழ்க் கவிஞர் மாநாட்டில் கனடாவிலிருந்து கலந்து கொள்ளவுள்ள 3 கலை, இலக்கிய மற்றும் ஊடகச் செயற்பாட்டாளர்கள்.



எதிர்வரும் நவம்பர் 14ம் 15ம் திகதிகளில் கம்போடியா தேசத்தின் சியம் ரீப் நகரில் நடைபெறவுள்ள 3வது உலகத் தமிழ்க் கவிஞர் மாநாட்டில் கனடாவிலிருந்து கலந்து கொள்ளவுள்ள 3 கலை, இலக்கிய மற்றும் ஊடகச் செயற்பாட்டாளர்கள் 12ம் திகதி இங்கிருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளார்கள். (தொடர்ச்சி 10ம் பக்கம்)